லூக்கா

"பிரியமான வைத்தியனாகிய லூக்கா" (கொலோசெயர் 4:14) என்று அப்போஸ்தலனாகிய பவுலினால் அழைக்கப்பட்டவரால் லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்டது. "இயேசுவானவர்...எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் செய்யவும், உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன்" என்று இச்சுவிசேஷத்தைக் குறித்து லூக்கா குறிப்பிடுகிறார். (அப்போஸ்தலர் 1:1,2).

ஆக்கியோன்

புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிரூபணத்திலிருந்து, லூக்கா மிகவும் கற்றறிந்ததோர் புறஜாதியான் என்பது தெளிவு. அவருடைய காலத்திலிருந்து மருத்துவ அறிவில் அவர் கைதேர்ந்தவராயிருந்தார். அவர் ஒருவேளை அந்தியோகியா நாட்டைச் சேர்ந்தவராயிருந்திருக்கலாம். சபையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் ஒட்டிய சம்பவங்களை அப்போஸ்தலருடைய நடபடிகளில் அவர் எழுதியிருக்கிறார். இக்காரணத்தினால், கிறிஸ்தவம் தோன்றிய வரலாற்றின் இரண்டு பாகத்தில், லூக்கா சுவிசேஷம் முதலாம் பிரபந்தம் எனக் கூறுவது மிகவும் சரியே (இரண்டாம் பிரபந்தம் அப்போஸ்தலர் நடபடிகள்) லூக்கா வைத்தியனும், அப்போஸ்தலனாகிய பவுலின் நெருங்கிய நண்பனுமாயுமிருந்தார். பவுல் கடைசியாக ரோமாபுரிக்கு சென்றது உட்பட, அவருடைய அநேகம் சுவிசேஷப் பிரயாணங்களில், லூக்காவும் உடன் சென்றிருக்கிறார் (கொலோசெயர் 4:2; 2தீமோத்தேயு 4:11). பவுலுடன் கூட இருந்தவருடன் இவரும் உடன் ஊழியராயிருந்தார் (பிலேமோன் 24).

வலியுறுத்தும் விஷயங்கள்

இயேசுவின் வாழ்க்கையின் மனுஷீகம், வரலாறுமற்றும் இறையியல் அம்சங்களை லூக்கா வலியுறுத்தியுள்ளார். அநேக வேதாகம மாணாக்கர்கள் லூக்கா சுவிசேஷத்தை இயேசுவின் ஆள்தத்துவத்தின் சுவிசேஷம் என விவரித்துள்ளனர். அன்றாட மானிட வாழ்க்கையின் சாதாரண அனுபவங்களை இயேசுவானவர் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டதை எடுத்துரைத்து, இயேசுவின் "மனுஷீக இயல்பை" லூக்கா வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் மற்றக் குழந்தைகளைப் போலப் பிறந்தார். அக்கால வழக்கத்தின்படி பிறந்தவுடன் துணிகளில் சுற்றிவைக்கப்பட்டார் (லூக்கா 2:6,7).

இளம்வயதின் இயல்பான செயல்களை அவர் அனுபவித்து, மனிதனாக அவர் வளர்ந்தார் (2:40-52), அவர் பசியாயிருந்தார், போஜனம் புசித்தார் (7:36; 24:42,43), நமக்கிருப்பதைப் போல மனுஷீக உணர்ச்சிகள் அவருக்கிருந்தன (19:41).

கிறிஸ்துவின் வாழ்க்கைச் "சரித்திரம்" சம்பந்தப்பட்டவைகளை லூக்கா வலியுறுத்தியிருக்கிறார். முழு நிச்சயமான சங்கதிகளை எழுதும்படிக்கு அவர் ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்தார் (1:3). இயேசு பிறந்த அதே சமயத்தில் பலஸ்தீனாவில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களை அவர் குறிப்பிட்டிருக்கிறார் (2:1,3). யோவான் ஸ்நானன் ஊழியத்தைத் துவங்கிய காலத்தில் ஆளுகையிலிருந்த இராஜாக்கள், மற்றும் பிரதான ஆசாரியர் ஆகியோரின் பெயர்களையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார் (3:1-3). இந்தவிவரங்களின் மூலம், இயேசுவின் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட குறிப்பிட்ட அரசியல் வரலாற்றுக் காலத்தைக் கணிப்பது சாத்தியமாகிறது. மேலும், மிக யதார்த்தமான சூழ்நிலைகளிலும்,

லூக்கா

முதலாம் நூற்றாண்டின் பாலஸ்தீனக் கொந்தளிப்பின் மத்தியிலும் இயேசுவானவர் வரலாற்று நாயகனாயிருந்தார் என்ற உண்மையை இந்த விவரங்கள் நிலைப்படுத்துகின்றன.

இயேசுவின் ஊழியத்தின் குறிப்பிட்ட "இறையியல்" அம்சங்களையும் லூக்கா விளங்கப்பண்ணியிருக்கிறார். அவை, இயேசுவின் தனித்தன்மையையும், அவர் ஆற்றிய இரட்சிப்பின் கிரியையின் பொருளையும் சார்ந்தவையாகும். இயேசுவானவர் தம்மை "மனுஷகுமாரன்" என அடிக்கடி அழைத்ததாக லூக்கா சுவிசேஷத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பதம், தானியேல் தீர்க்கதரிசி தன்னுடைய தரிசனத்தில் கண்டவருக்குச் கொடுத்திருந்த பெயராகும் (தானியேல் 7:13,14). இந்தக் குறிப்பிட்டப் பெயர் இயேசுவின் தெய்வீகத்துடன் சம்பந்தப்பட்டதாயிருந்த போதிலும், தானியேல் கூறுவதின் பொருள், மனுஷகுமாரனுடைய சாயலாய்த் தான் கண்டவர், மானிடப் பிறவியே என்பதாகும்.

இயேசு "மனுஷகுமாரன்" என்னும் பெயரைப் பயன்படுத்துவதின் மூலம், தானியேல் தனது தீர்க்கதரிசனத் தரிசனத்தில் கண்டவர் தாம் தான் என்பதை அடையாளங் காட்டுகிறார். இதைவிட அதிகமானவற்றையும் அவர் செய்தார். மனுஷகுமாரன் பலபாடுகள்படவும், கொல்லப்படவும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்றும் அவர் கூறினார் (லூக்கா 9:22). இந்த வார்த்தையின் கருத்தை சீஷர்கள் அறிந்து கொள்ளவில்லை (9:44,45). மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் வரப்போகும் மனுஷகுமாரன் முதலாவது புறக்கணிக்கப்பட வேண்டுமென்பதை இது காண்பித்தது.

இயேசுவின் ஊழியத்தைப் பற்றி லூக்கா அழுத்தமுடன் கூறும் இதர இறையியல் அம்சங்கள், அவரது இரட்சிப்பின் கிரியையும், மீட்பராக அவர் வகித்தப் பங்கும் ஆகும். எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துப் பேசிய தீர்க்கதரிசியாகிய அன்னாளைக் குறித்து அவர் எழுதியிருக்கிறார் (2:38). இயேசுவானவர் இஸ்ரவேலை மீட்டு ரட்சிப்பவர் என்று தாங்கள் நம்பியிருந்ததாக எம்மாவூருக்குச் சென்ற சீஷர்கள் சொன்னதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மீட்பின் செயல்முறை தேவனால் ஏற்படுத்தப்பட்டதும், யூதர்களிடையே நன்கறியப்பட்டதுமாயிருந்தது. இம்முறையானது, ஏற்கெனவே விற்கப்பட்ட ஏதாவது ஒன்றை (அல்லது யாராவது ஒருவரை) விற்றவரின் நெருங்கிய உறவினர் அல்லது சுதந்தரவாளி மீண்டும் வாங்குவதைப் போன்ற அர்த்தம் பொதிந்துள்ளது. இம்முறையில் அதனுடைய முதற்கண் உரிமையாளருக்கு மீண்டும் கையளிக்கப்படுகிறது (ரூத்தின் புத்தகம் காண்க). "மீட்கிறவர்" உதவியை நாடுபவருக்கு உறவின்முறையான் அல்லது சுதந்தரவாளியாக இருக்க வேண்டும்.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. லூக்கா சுவிசேஷத்தின் ஆக்கியோனாகிய லூக்கா பவுலின் நண்பரும், அவரோடு நெருங்கிப் பழகினவரும், அவருடைய அநேகம் சுவிசேஷப் பிரயாணங்களில் அவருடன் சென்றவருமாயிருந்தார். அவர் உயர் கல்வி கற்றவரும், மருத்துவத்தில் கைதேர்ந்தவரும், பவுலின் பெயர்பெற்ற உடன்ஊழியர்களில் ஒருவருமாயிருந்தார்.

லூக்கா

2. இயேசுவின் மானிடப் பிறப்பு, இளம்பருவம், வளர்ச்சி, போஜனம் புசிப்பதற்கான பசி, இயேசுவின் மனுஷீக உணர்ச்சிகள் போன்றவற்றை லூக்கா குறிப்பிடுவதின் மூலம் இயேசுவின் மனுஷீக இயல்பை வலி யுறுத்தியிருக்கிறார்.

3. இயேசுவின் வாழ்க்கைச் சரித்திரம் சம்பந்தப்பட்டவைகளையும் லூக்கா விவரித்திருக்கிறார். இயேசுவின் பிறப்பின் காலத்தில் பாலஸ்தீனாவில் நிகழ்ந்த முக்கியச் சம்பவங்களையும்; யோவான் ஸ்நானன் ஊழியத்தைத் துவங்கிய காலத்தில் ஆளுகையிலி ருந்த இராஜாக்கள் மற்றும் பிரதான ஆசாரியர் ஆகியோரின் பெயர்களையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

4. இயேசுவை "மனுஷகுமாரனாக" அடிக்கடி குறிப்பிட்டு, அவர் ஆற்றிய இரட்சிப்பின் கிரியையும், மனுக்குலத்தின் மீட்பராக அவரது பங்கையும் லூக்கா எழுதியிருப்பதிலிருந்து இயேசுவின் ஜீவியத்திலுள்ள இறையியல் அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

சிறப்பு அம்சங்கள்

குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் லூக்காவிலும் உள்ளன. இயேசுவின் ஜீவியத்தில் ஸ்திரீகள், பிள்ளைகள், எளியவர்கள் போன்றக் குறிப்பிட்டக் கூட்டத்தினர் வகித்த பங்கு இச்சுவிசேஷத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இது தவிர, இதில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளும், இடம்பெற்றுள்ள விவரங்களும் இதின் ஆக்கியோன் மருத்துவப் பணியுடன் தொடர்புடையவர் என்பதைப் புலப் படுத்துகின்றன.

உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த கிறிஸ்துவின் செய்தி, மற்றும் பரிசுத்த ஆவியானவரின் கிரியை ஆகியவற்றின் பாலுள்ளப் பேராவலை இதன் பக்கங்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும், அனைத்து சுவிசேஷங்களைக் காட்டிலும் லூக்காவில்தான் இலக்கிய நயம் மிகுந்துள்ளது. அழகானப் பாட்டுகள் பல, கவிதைகள், சொல்வளம் ஆகியவை இதில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் லூக்கா சுவிசேஷத்திற்குத் தனிப் பொலிவூட்டுகின்றன.

1. ஸ்திரீகள், பிள்ளைகள், எளியவர்களின் பங்கு: இயேசுவின் ஜீவியத்திலும், ஊழியத்திலும் பங்கேற்ற ஸ்திரீகள், பிள்ளைகள் பற்றிய விவரங்களை, மாற்கு, மத்தேயு இருவரையுங் காட்டிலும் லூக்கா முழுமையாகக் கொடுத்திருக்கிறார். மரியாளையும், இயேசுவின் பிறப்பையும் பற்றி அவர் விவரிக்கையில், தேவதூதன் பேசியபொழுது மரியாள் கலங்கினதாகக் கூறுகிறார். பரிசுத்த ஆவியால் இயேசு கர்ப்பத்தில் உருவானதைக் குறிப்பிடுகிறார். யோசேப்பை விவாகஞ் செய்யும்படி மரியாள் நியமிக்கப்பட்டிருந்ததைத் தெரிவிக்கிறார். இந்த விவரங்கள் ஏதும் மத்தேயுவில் இடம் பெறவில்லை. யவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்பட்ட சம்பவத்தில், அவள் அவனுடைய ஒரே குமாரத்தி எனக் குறிப்பிடும் ஒரே ஒருவர் லூக்கா ஆவர்.

இதர சுவிசேஷங்களில் இடம் பெறாததான தரித்திரம் மற்றும் ஐசுவரியம் பற்றிய அநேகம் கதைகளையும், உவமைகளையும் இவர் எழுதியிருக்கிறார். உண்மையான ஐசுவரியங்களைக் கண்டுபிடிக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஐசுவரியவானாகிய மதிகேடனின் கதையும் இதில் அடங்கும் (12:13-34).

லூக்கா

2. ஓர் வைத்தியனின் உள்நோக்கு. லூக்கா சுவிசேஷம் மருத்துவர் ஒருவரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான நிரூபணங்கள் உண்டு என அநேக வேதாகம வல்லுநர்கள் கருதுகின்றனர். மாற்கு, மத்தேயு ஆகியோரைக் காட்டிலும் கூடுதலாக இவர் வியாதியஸ்தர்களில் கவனம் செலுத்தியிருக்கிறார். இவர் வியாதியஸ்தர் பற்றிக் கூறும் போது அவர்களைப் பற்றிய கூடுதலான விவரங்களைத் தருகிறார்: லூக்கா 4:38-படி சீமோனின் மாமி "கடும் ஜீரமாய்க் கிடந்தாள்" (மாற்கு 1:30-இல் "ஜீரம்" என்றிருக்கிறது). லூக்கா 5:12-இன் படி "குஷ்டரோகம் நிறைந்த" ஒரு மனுஷன் (மாற்கு 1:40-இல் "குஷ்டரோகி" என்றிருக்கிறது). லூக்கா 6:6-இன்படி "சூம்பின வலது கை" (மாற்கு 3:1-இல் "சூம்பின கை" என்றிருக்கிறது). லூக்கா 22:50,51-இல் இயேசு, காது வெட்டப்பட்டவனின் "காதைத் தொட்டு அவனைச் சொஸ்தப்படுத்தினார்" என்றிருக்கிறது. (மாற்கு 14:47-இல் "காதற வெட்டினான்" என்பதோடு முடிந்துள்ளது).

3. உலகளாவிய நோக்கு. இயேசுவின் ஜீவியம் மற்றும் கிரியையின் உலகளாவிய முக்கியத்துவத்தை எளிய முறையில் எழுத லூக்கா விரும்பினார். யூத வரலாற்றில் வாழ்ந்தவராக மாத்திரமின்றி எல்லா மனுஷரின் இரட்சகராகவும் இயேசு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அநேகந் தடவைகளில் அவருடைய அற்புதங்களும், போதனைகளும் புறஜாதியாரின் தேசங்களிலிருந்து வந்தவர்களுக்காயிருந்தது. எடுத்துக்காட்டாக:

அ. மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் (3:6).

ஆ. தேவனால் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டவனும், மனுக்குலத்தின் தகப்பனுமாயிருந்த ஆதாமின் சந்ததியில் இயேசு தோன்றினார் (3:38).

இ. எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் சுகம் பெற்ற ஒரே குஷ்டரோகி சீரியா தேசத்தானாகிய நாகமான் (4:27).

ஈ. பிறன் யார் என்பது பற்றி சொல்லப்பட்ட உவமையில் நல்லவனாயிருந்தவன் சமாரியன் (10:25-37).

உ. இயேசுவை மகிமைப்படுத்தும்படி திரும்பி வந்த ஒரே குஷ்டரோகி சமாரியன் (17:16).

ஊ. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டும் (24:47).

4. பரிசுத்த ஆவியின் கிரியை. சமநோக்கு சுவிசேஷங்களில், லூக்காவில்தான் பரிசுத்த ஆவியின் கிரியை பற்றிய ஏராளமான குறிப்புகள் உள்ளன. எவ்வளவாகப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஈடுபாடு உடையவராயிருந்தார் என்பதை அவர் காட்டுகிறார். குறிப்பிடத்தக்க மற்றவர்களின் வாழ்க்கையிலும் நிகழ்ந்த பரிசுத்த ஆவியின் ஊழியத்தின் நல் அம்சங்களை அவர்

5. இலக்கிய நயம். நேர்த்தியான நான்கு தீர்க்கதரிசனப் பாடல்களை லூக்கா தனது சுவிசேஷத்தில் சேர்த்திருக்கிறார்: மரியாளின் பாடல் (1:46-55), சகரியாவின் பாடல் (1:67-69), தூதர்களின் பாடல் (2:14), சிமியோனின் ஜெபம் (2:29-32). இவை ஒவ்வொன்றும் பிரஸ்தாபத்திலும், துதிப்பதிலும் தலைசிறந்ததாகும். இது தவிர, இயேசுவின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றி எழுதிய பாணியிலும், போதகரின் உவமைகளையும்,

லூக்கா

வசனம்	நபர்	ஆவியின் கிரியை
1:15	யோவான் ஸ்நானன்	தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான்
1:35	மரியாள்	பரிசுத்த ஆவி அவள் மேல் வந்தது.
1:35	இயேசு	பரிசுத்த ஆவியால் கருவானார்.
1:41,42	எலிசபெத்து	பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டு, அவள் தீர்க்கதரிசனம் உரைத்தாள்.
1:67	சகரியா	பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டு, அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான்.
2:25,26	சிமியோன்	இயேசுவைப் பற்றிய வெளிப்படுத்தலை இவனுக்குக் கொடுத்தார்.
3:22	இயேசு	இவர்மீது புறா ரூபத்தில் இறங்கினார்.
4:1	இயேசு	இவர் வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.
4:14,18	இயேசு	ஊழியத்திற்கான வல்லமையை இவருக்குக் கொடுத்தார்.
10:21	இயேசு	இவரைக் களிகூரப்பண்ணினார்.
24:49	சீஷர்கள்	இவர்கள் உன்னதத்தின் பலத்தினால் தரிப்பிக்கப்பட்டார்கள்.

லூக்கா

போதகங்களையும் எடுத்தெழுதும் விதத்திலும் லூக்காவின் இலக்கியத் திறமை புலப்படுகிறது. காணாமற் போன மகனும் அவனுடைய கோபமடைந்த சகோதரனும் என்ற உவமை *(15:11-32)*; மற்றும் சுயநீதியுடைய பரிசேயனும் துக்கமடைந்த ஆயக்காரனும் என்ற உவமை *(18:9-14)* ஆகியவற்றின் தெளிவான விளக்கங்கள் குறிப்பிடத்தக்கது.

சம்பவங்களை விவரிக்கும் லூக்காவின் பாங்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. துக்கமுகமுள்ளவர்களாய் எம்மா ஊருக்குச் சென்ற சீஷர்களுக்கு இயேசு தரிசனமானதை எளிய நடையில் எழுதியிருப்பதை நாம் வாசிக்கும்பொழுது நம் உள்ளங்கள் எவ்வளவாகத் தொடப்பட்டு நாம் மகிழ்வடைகிறோம்! *(24:13-32)*.

பொருளடக்கம்

லூக்காவிலுள்ள தொடர் சம்பவங்கள் எல்லாம் மத்தேயு, மாற்கு சுவிசேஷங்களில் காணப்படும் பொதுவான மாதிரியின்படி அமைந்துள்ளன. லூக்கா மட்டும் எடுத்தெழுதியிருக்கும் கணிசமான சம்பவங்களும் உள்ளன. இயேசுவை உலக இரட்சகராக வெளிப்படுத்துவதுதான் லூக்காவின் பிரதான இலக்காகும்: இவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், கிரியையினாலும் ஊழியஞ் செய்த பூரண மனுஷனாயிருந்த இரட்சகர். சமநோக்கு சுவிசேஷங்களுள் இவருடைய சுவிசேஷத்தில் மாத்திரமே இயேசுவுக்கு "இரட்சகர்" என்னும் குறிப்பிட்டப் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது *(2:11)*. கீழே காணும் பிரிவு 3-இல் உள்ள பொருளில் பெரும்பான்மையானவை லூக்கா சுவிசேஷத்தில் மாத்திரம் இடம்பெற்றுள்ளது என்பது வியப்புக்குரியது:

(9:51-56; 10:38-42; 11:37-54; 12:13-21; 12:54- 13:17; 13:22-29 14:1-35; 15:8-18:14; 19:1-27).

லூக்கா: இரட்சகரின் சுவிசேஷம்

1. இரட்சகர் ஆயத்தப்படுத்தப்படுகிறார் *(1:1-4:13)*.
2. இரட்சகர் ஊழியஞ் செய்கிறார் *(4:14-9:17)*.
3. இரட்சகர் எதிர்ப்புகளைச் சகிக்கிறார் *(9:18-19:27)*.
4. இரட்சகர் இரட்சிப்பை சுதந்தரிக்கிறார் *(19:28-24:53)*.

முக்கியத் தகவலின் மறுபார்வை

1. லூக்கா சுவிசேஷத்திலுள்ள உவமைகளும், கதைகளும், இயேசுவின் ஜீவியத்தில் பங்கு வகித்த ஸ்திரீகள், பிள்ளைகள் மற்றும் எளியவர் மீது இச்சுவிசேஷத்தின் ஆக்கியோனுக்கிருந்த பேராவலை வெளிப்படுத்துகின்றன.

2. சரீரத்தில் நோயுற்றவர்கள் சம்பந்தப்பட்டக் கூடுதல் விவரங்களை லூக்கா சுவிசேஷம் *(4:38; 5:12; 6:6; 22:50,51)* நமக்களிக்கிறது. ஓர் வைத்தியனின் உள்ளார்ந்த நோக்குடன் இது

எழுதப்பட்டது என்பதை இது சுட்டிக் காண்பிக்கிறது. இவ்விவரங்களில் பல இதர சுவிசேஷங்களில் விடுபட்டுள்ளன.

3. லூக்கா சுவிசேஷத்தின் ஆக்கியோன், இயேசுவின் ஜீவியம் மற்றும் கிரியையின் உலகளாவிய முக்கியத்துவத்தை எளிய முறையில் எழுத விரும்பினார்:

லூக்கா

அ. "மாம்சமான யாவரும்" தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் (3:6).

ஆ. "முழு மனுக்குலத்துக்கும்" தகப்பனாயிருந்த ஆதாமிலிருந்து இயேசு தோன்றினார் (3:38).

இ. எலிசா காலத்தில் குணமாக்கப்பட்டக் குஷ்டரோகி ஓர் "சீரியன்" (4:27)

ஈ. இயேசுவின் உவமையில் நன்மை செய்த பிறன் ஓர் "சமாரியன்" (10:25-37).

உ. இயேசுவை மகிமைப்படுத்தும்படி திரும்பி வந்த ஒரே குஷ்டரோகி ஓர் "சமாரியன்" (17:16).

ஊ. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் "சகல தேசத்தாருக்கும்" அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டும் (24:47).

4. கீழ்க்கண்டுள்ள அட்டவணை காட்டுவதைப் போன்று, கிறிஸ்துவின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும், மற்றும் அவருடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டக் குறிப்பிடத்தக்கவர்களின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியின் ஈடுபாடு இருந்ததை லூக்கா வெளிப்படுத்தியிருக்கிறார்:

5. லூக்கா சுவிசேஷத்திலுள்ள பாடல்கள் மற்றும் கவிதைகளிலும் (1:46-55; 67-69; 2:14; 2:29-32); இயேசுவின் வாழ்க்கைச் சம்பவங்களை அவர் எழுதியிருக்கும் விதத்திலும் (15:11-32; 18:9-14); உள்ளத்தைத் தொடும் சம்பவங்களை எழுதும் அவரது திறமையிலும் இலக்கிய நயம் மிளிர்ந்துள்ளது (24:13-32).

6. லூக்கா சுவிசேஷத்தின் பொருளடக்கம் இயேசுவே 'இரட்சகர்' என்பதை மையமாகக் கொண்டுள்ளது. இரட்சகர் ஆயத்தப் படுத்தப்படுகிறார், ஊழியஞ் செய்கிறார், துன்பங்களைச் சகிக்கிறார், இரட்சிப்பை வாகை சூடுகிறார்.

லூக்கா

வசனங்கள்	நபர்	பரிசுத்த ஆவியின் கிரியை
1:35	இயேசு	இவர் கருவானார்.
3:22	இயேசு	இவர் மீது புறா ரூபத்தில் இறங்கினார்.
4:1	இயேசு	இவர் வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.
4:14,18	இயேசு	இவருக்கு ஊழியத்திற்கான வல்லமையை அருளினார்.
10:21	இயேசு	இவரைக்களிகூரப்பண்ணினார்.
1:15	யோவான்	இவர் பிறக்கும் முன்னே ஸ்நானன் நிரப்பப்பட்டார்.
1:35	மரியாள்	இவள் மீது வந்திறங்கிற்று.
1:41,42	எலிசபெத்து	இவள் நிரப்பப்பட்டுத் தீர்க்கதரிசனம் உரைத்தாள்

வசனங்கள்	நபர்	பரிசுத்த ஆவியின் கிரியை
1:67	சகரியா	இவன் நிரப்பப்பட்டுத் தீர்க்கதரிசனம் உரைத்தான்.
2:25,26	சிமியோன்	இவருக்குக் கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்டது.
24:49	சீஷர்கள்	இவர்கள் வல்லமையால் தரிப்பிக்கப்பட்டார்கள்.

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

முன்னுரை

அ. காபிரியேலின் அறிவிப்பு நித்தியமான நல்ல ஈவுகளை நம் ஒவ்வொருவருக்கும் அளிக்கிறது.

ஆ. இன்றைய நமது வேத பாகத்தில், மரியாள் எனப்பட்ட கன்னியின் கர்ப்பத்தில் இயேசு உருவாக்கப்பட்டார் என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவனுடைய வல்லமையினால், பரிசுத்த ஆவியானவர் மூலமாக இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட, அற்புதமான கருத்தரித்தல் உண்டாயிருக்கிறது. இயேசு, திரித்துவத்தில், நித்திய இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார். அவர் மனிதனாகக் கருவில் உருவான போது, அவர் குமாரனாகிய தேவனாகவே தொடர்ந்து இருக்கிறார். ஆகவே கருவில் அவர் உருவானபோது முற்றிலும் தேவத்தன்மையும், முற்றிலும் மானிடத் தன்மையும் உடையவராக இருந்தார். இவையாவும், காபிரியேல் தூதனால், மரியாளுக்கு முன்னறிவிக்கப்பட்டது.

1. ஒரு கன்னிகை, தேவனிடத்தில் கிருபை பெற்றாள். (1:26,28-30,36)

அ. வச. *26,36*. "ஆறாம் மாதத்தில்" (யோவான் ஸ்நானன் கருத்தரிக்கப்பட்டதிலிருந்து ஆறுமாதங்களுக்குப் பின் (வச *36*) இந்த நேரத்தைத்தான் தேவன், காபிரியேல் தூதனை மரியாளிடம் அனுப்ப தெரிந்துகொண்டார்.

ஆ. யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்யவும், பூமியில் அவர் வருகையை அறிவிக்கவும் வேண்டிய அவசியம் இருந்தது. இதுவே ஆதியிலிருந்து தேவனுடைய திட்டமாக இருந்தது. இதை ஏசாயா தீர்க்கதரிசி மூலமாய், அவர் தெரியப்படுத்தினார்: "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள்...என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று" (ஏசாயா. *40:3,4*)

இ. யோவானுடைய தகப்பனாகிய சகரியா, யோவான் பிறந்தபோது கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகளும் இதில் உள்ளடங்கும்: "நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி எனப்படுவாய். நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ண... அவருக்கு முன்னாக நடந்து போவாய்". (லூக்கா *1:76,77*)

ஈ. வச. *26*. எனவே எலிசபெத்து, யோவானை ஆறுமாதம் கர்ப்பம் தரித்திருக்கும்போது, "தேவன் காபிரியேல் தூதனை நாசரேத் என்ற ஊருக்கு அனுப்பினார்". மரியாளுக்கும் யோசேப்பிற்கும் நாசரேத் சொந்த ஊர். புதிய ஏற்பாடு முழுவதிலும், இயேசுவின் சொந்த ஊர் நாசேரேத் என்று அறியப்பட்டிருந்தது உண்மையில், அநேகர் அவரை "நசரேயனாகிய இயேசு" என்று அழைத்தார்கள்:

1. எரிகோவிற்குச் செல்லும் பாதையில் இயேசு கடந்து சென்றபோது திரள்கூட்டமான மக்கள் இவ்வாறு அழைத்தார்கள். (லூக்கா *18:37*)

2. பிலாத்து ஒருமேல் விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். (யோவான் *19:19*)

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

3. சப்பாணியான பிச்சைக்காரனை, பேதுருவும், யோவானும் குணப்படுத்தினபோது. (அப்போஸ்தலர் 3:6)

4. பிசாசுகள் இயேசுவைப் பார்த்தபோது (மாற்கு 1:24)

உ. காபிரியேல் என்ற அதே தூதன் தான் யோவான் ஸ்நானகனுடைய பிறப்பை அறிவிக்க அனுப்பப்பட்டான். (லூக்கா 1:11). இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்களுக்கு அறிவிக்க அனுப்பப்பட்டவனும் அதே தூதன் தான். (லூக்கா 2:9)

ஊ. வச. 28. "காபிரியேல் மரியாளிடம், "நீ கிருபை பெற்றாய்" என்று கூறினான்". இது, தேவன் மரியாளிடம் விசேஷித்த கிருபையும் கனத்தையும் வைத்தார் என்று பொருள்படும். மகா உன்னத தேவனுடைய ஒரேபேறான குமாரனைப் பெற்றெடுக்க தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக இருக்க, அவள் பிரித்தெடுக்கப்பட்டாள்.

எ. வச. 29. "மிகவும் கலங்கி" காபிரியேல் அவளிடம் பேசிய வார்த்தைகளினால் மரியாள் முழுவதும் அதிர்ந்துபோய்விட்டாள். அவள் திகிலடைந்தாள். அவனுடைய உரையாடலை தொடர்வதற்குமுன் காபிரியேல் அவளை ஆறுதல்படுத்த அவசியமாயிற்று. மகா உன்னத தேவனுக்கும் அவளுக்கும் இடையே என்ன நிகழப்போகிறது என்பதை முழுவதும் கிரகித்துக்கொள்ள அவளால் கூடாமல் இருந்தபோதிலும், தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிய முன்வந்தாள். (வச. 38)

ஏ. இன்று என்னையும் உங்களையும் போல் மேரி, கர்த்தருடைய ஊழியக்காரி. அது நேர்மாறாக இருப்பினும் அல்லது அசாதரணமாக இருந்தபோதிலும், அநேக நேரங்களில், சுவிசேஷத்தின் நிமித்தமாக ஏதேனும் வேறு இடங்களுக்குச் செல்லவும் அல்லது ஏதாவது ஒரு காரியத்தை செய்யவும், கர்த்தர் நம்மிடம் பேசுகிறார். மேரியைப்போல நாமும், தேவனுடைய அதின் காரணத்தையும், நோக்கத்தையும் எதற்காகச் செய்யும்படி கூறினார் என்பதையும் நாம் பூரணமாக விளங்கிக்கொள்ளாவிட்டாலும், நாம் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்!

2. ஒரு கன்னிகை ஒரு குமாரனைப் பெறுவாள். (1:27,34-35)

அ. வச. 27,34. மரியாள், "விவாகத்திற்காக நியமிக்கப்பட்ட ஒரு கன்னிகை." மரியாள் ஒரு கன்னிப்பெண். அவள் ஒருபோதும், ஒரு மனிதனிடம் பாலின தொடர்பு கொள்ளாதவள். இதை அவள் வச. 34இல் திட்டவட்டமாக அழுத்தமாகக் கூறுகிறாள்: "நான் புருஷனை அறியேனே"

ஆ. இது, 700 ஆண்டுகளுக்குமுன், ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தையும் ஒத்ததாகவும் இருக்கிறது: "இதோ ஒரு கன்னிகைக் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் (தேவன் நம்மோடு இருக்கிறார்) என்று பேரிடுவாள்." (ஏசாயா 7:14)

இ. இது மத்தேயு சுவிசேஷத்தையும் ஒத்ததாக இருக்கிறது: "தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்." (மத்தேயு 1:22-23)

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

ஈ. மரியாள், யோசேப்புக்கு விவாகம் பண்ணும்படி நியமிக்கப்பட்டிருந்தாள். இன்று, நாம் அவள் திருமணம் செய்ய நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறாள் என்று கூறுவோம். அவர்கள் விவாகம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கையில், யூத தம்பதிகள் பாலினதொடர்புகொள்ளமாட்டார்கள். இருந்தபோதிலும், நவீன கால நிச்சயத்தார்த்தத்தைவிட அதிக கட்டுப்பாடுடையது. ஏனெனில் இதை விலக்கிவிட வேண்டுமானால் தள்ளுதற்சீட்டைக் கொடுக்கவேண்டும். (மத்தேயு 1:19)

உ. வச. 35. மரியாளிடம் அந்த தூதன் பேசி, இவ்வாறு கூறினான். "பரிசுத்த ஆவி உன்மேல்வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறப்பது பரிசுத்தமுள்ளது, தேவனுடைய குமாரன் எனப்படும்". இதன் பொருள்:

1. கன்னிப் பிறப்பைச் சாத்தியமாக்கிய, இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்தக் கிரியை, தேவனுடைய வல்லமையினால் ஏற்பட்டது.

2. பரிசுத்த ஆவியானவர் மூலமாக, இயேசு மரியாளுடைய கர்ப்பத்தில் கருத்தரிக்கப்பட்டார். பரிசுத்த ஆவியானவர் அவள் மீது வந்து, தேவன் தாமே, மேகம்போல் அவள்மீது நிழலிட்டபோது (மிகப்பிரகாசமாக) இது நடைபெற்றது. எனவே தேவனாக (ஒரு ஆவியாக) எப்போதும் ஜீவித்த இயேசு, ஒரு குழந்தையாக, ஒருபோதும், ஒரு மனிதனிடம் பாலினத் தொடர்பு கொள்ளாத மரியாளுடைய கர்ப்பத்தில் உருவானார்.

அவர் இயற்கைக்கு அப்பால் அற்புதமாக உண்டாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையினால், பிதாவின் மூலமாக மானிடனாக வாழ கொண்டுவரப்பட்டார். அவர் இப்பூமியின் மீது, தேவனுடைய ஆவியுடைய மானிட சரீரத்தில் வாழ்ந்தார்; தேவன் - மனிதன்; "இம்மானுவேல் - தேவன் நம்மோடிருக்கிறார்".

ஊ. வசனம் 35. "உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது, தேவனுடைய குமாரன் எனப்படும்". இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுவார். ஏனெனில் அவர், உண்மையில் பிதாவிடமிருந்து வந்தார். அவருடைய பிறப்பு, தேவனுடைய நேரடியான, இயற்கைக்கு அப்பாற்பட்ட, அற்புத கிரியையின் விளைவு.

எ. பிதாவாகிய தேவனுக்கு இது ஒரு முக்கிய நிகழ்ச்சி. இது, மானிடரை மீட்க அவருடைய வழி. இக்காரணத்தினாலேயே, யோவான், நம்மிடம், இவ்வாறு கூறுகிறார்: "......மாம்சத்தில் வந்த (பரத்திலிருந்து) இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. ஆனால் மாம்சத்தில் வந்து (பரலோகத்திலிருந்து) இயேசுவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும், தேவனால் உண்டானதல்ல". (1யோவான் 4:2-3; பிலிப்பியர் 2:6-6 வசனங்களைப் பார்க்கவும்). அவருடைய இரத்தத்தை நம்முடைய பாவங்களுக்காகச் சிந்தி, நமது இரட்சகரும், பிரதான ஆசாரியருமாக மாற, இயேசு அவருடைய தெய்வீகத் தன்மையுடன், மாம்சமும் இரத்தமும் உடையவரானார்!

ஏ. எனவே நாம் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த அடிப்படை கொள்கை சத்தியத்தை மறுக்கும் அநேகர் இன்று கள்ளத்தீர்க்கதரிசிகளும், போதகர்களுமாக உலகத்தில் இருக்கிறார்கள்.

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

இயேசுவைக் காட்டிலும் மரியாளை மகிமைப்படுத்துவதிலும் நாம் கவனமாக இருக்கவேண்டும். ஏராளமானவர்கள், உலகத்தில் இந்த பயங்கரமான தவறை செய்து கொண்டிருக்கிறார்கள். சாஸ்திரிகள் (ஞானிகள்) பெத்லெகேமுக்குச் சென்று, மரியாளையும், குழந்தையையும் கண்டு "சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்து கொண்டார்கள்" (மத்தேயு 2:11; 2:2)

3. குமாரனுடைய அரசாட்சிக்கும் அதிகாரத்திற்கும் முடிவிராது. (1:31-33)

அ. வசனம் 31. தூதன் மரியாளிடம், "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக........" என்றான். இயேசு, என்றால் "இரட்சகர், தேவன், அவரே இரட்சிப்பு". மானிட இனத்திற்கு இரட்சிப்பு அளிக்க, இயேசுவாகிய குமாரனாகிய தேவன், பரலோகத்திலிருந்து மாம்சத்தில், உலகிற்கு வந்தார். மத்தேயு இந்த வசனத்துடன், "ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்". என்று இந்த வார்த்தைகளையும் சேர்த்துக்கொண்டார். (மத்தேயு 1:21, லூக்கா 2:21, யோவான் 3:16-17) "இரட்சிக்க" என்றால், பத்திரமாகக் காக்க, பாவத்தின் கட்டுகளிலிருந்தும் வல்லமையிலிருந்தும் விடுவிக்க, பாதுகாக்க, கோபாக்கினையின்றும், அழிவிலிருந்தும் காப்பாற்றி, நல்ல நிலையில் காத்துக்கொள்ள, என்று பொருள்படும்.

ஆ. மானிடர்களின் பாவங்களுக்காக; நம் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக, இயேசு பிராயச்சித்த பலியானார். (ரோமர் 3:25). இது நம்முடைய பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டு, நமக்காகக் கல்வாரியில் தண்டனையும் மரணத்தையும் அனுபவித்தார். சிலுவையில் நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்டார். நம்முடைய பாவங்களுக்காகவும், தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நின்றதற்காகவும் நாம் கொலை செய்யப்படவேண்டும். அதனால் தான் இயேசுவைத் தங்கள் வாழ்க்கையிலிருந்து தள்ளிவிட்டு வாழுபவர்கள் அபாயத்தின் கரையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வருங்காலம் அபாயத்திலிருக்கிறது. நித்தியமாகச் சித்திரவதை செய்யப்பட்டு, தாங்கொண்ணா துயரத்தில் இருப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் பக்கமாகத் திரும்புகிறவர்கள், பாதுகாக்கப்பட்டு பாவத்தின் கட்டுகளிலிருந்தும், வல்லமையிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். நித்திய மோட்சலோகப் பாக்கியத்தைக் குறித்த நித்தியமுடையவர்களாயிருப்பார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5)

இ. வசனம் 32. "கர்த்தராகிய தேவன், அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்" என்றும் தூதன் கூறினான். எருசலேமில் தாவீது இராஜாவுடைய சிம்மாசனம் உள்ளது. அந்த சிம்மாசனத்திலிருந்தே, இயேசுவும் நித்தியமாக ஆட்சி செய்வார்:

1. "உன் வீடும், உன் இராஜ்ஜியமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் இராஜாசனம் என்றென்றைக்கும் நிலைப்பட்டிருக்கும். (2சாமுவேல் 7:16) என்று கர்த்தர் தாவீது இராஜாவிடம் கூறினார்.

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

2. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்....... தாவீதின் சிங்காசனத்தையும், அவனுடைய இராஜ்ஜியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும்....... அரசாளுவார்......" (ஏசாயா 9:6-7) மரியாளுடைய கணவனான யோசேப்பு, தாவீதின் சந்ததியில் வந்தபடியால், தாவீது இராஜா இயேசுவின் தந்தை என்று அழைக்கப்பட்டார். (லூக்கா 1:27; மத்தேயு 1:16)

ஈ. வசனம் 33. "அவர் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய இராஜ்ஜியத்திற்கு முடிவிராது". பூமியில் ஏழு வருட மகா உபத்திரவக் காலத்திற்குப் பின், இயேசு தாவீதின் இராஜ்ஜியத்தை அரசாளுவார். இந்தக் காரணத்தினால்தான் வெளிப்படுத்தின விசேஷத்தில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது: "உலகத்தின் இராஜ்ஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குரிய இராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் இராஜ்ஜியபாரம் பண்ணுவார்? (வெளிப்படுத்தின விசேஷம் 11:15)

நாகரீகம் தோன்றின காலத்திலிருந்து இராஜ்ஜியங்கள் எழும்புவதும், வீழ்ந்து போவதுமாக இருக்கிறது. எது ஒன்றும் நீண்ட காலத்திற்கு இருக்கவில்லை. ஆனால் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் என்றும் நிலைத்திருக்கும்.

உ. மரியாளுக்குக் கொடுக்கப்பட்ட காபிரியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகள், கிறிஸ்தவர்களுக்கு உற்சாகமூட்டுவதாக இருக்கிறது,

ஏனெனில் அவருடைய சிம்மாசனத்தில் அவருடன் சேர்ந்து அவர்கள் ஆளுகை செய்வார்கள்:

1. "நாம்...... சகித்தோமானால் (நம்முடைய விசுவாசத்தில்) அவரோடேகூட (இயேசு) ஆளுகையும் செய்வோம்". (2தீமோத்தேயு 2:12)

2. "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறான்..... இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்". (வெளிப்படுத்தின விசேஷம் 20:6) "இரட்சிப்பைப் பெற்றவர்கள்" (தேவகோபாக்கினையிலிருந்து பாதுகாக்கப்பட்டும், பாவக்கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்) பரலோகத்தில் நித்தியமாக வாழுவதுமல்லாமல், பூமியில், இயேசுவோடு ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்வார்கள். (வெளிப்படுத்தின விசேஷம் 20:1-6)

முடிவுரை

அ. தேவனைத் துதியுங்கள்:

1. ஒரு கன்னிகை தேவனிடம் கிருபைபெற்றாள். அவள் அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். அவர் இயேசு (இரட்சகர்) என்று அழைக்கப்பட்டார்.

2. ஆண்களும் பெண்களும் இப்பொழுது தேவனுடைய கோபாக்கினையிலிருந்தும், பாவம் மற்றும் பொல்லாத ஆவிகளின் வல்லமையிலிருந்தும் இயேசுவினால் விடுவிக்கப்படுகிறார்கள்.

3. பூமியின் மீது, அவருடைய பிதாவாகிய தாவீதின் சிம்மாசனத்திலிருந்து, இயேசு கிறிஸ்து நித்திய நித்தியமாய் ஆளுகை செய்வார்.

காபிரியேல் தூதன் இயேசுவின் கன்னிப் பிறப்பை அறிவித்தல்

லூக்கா 1:26-38

4. அவரில் விசுவாசம் வைத்து, அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்பவர்கள், அவருடன் சேர்ந்து ஆட்சி செய்வார்கள்.

ஆ. கிறிஸ்மஸ் காலங்கள், கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தைத் தருகிறது. இதுவே கிறிஸ்மஸின் உண்மையான பொருள். இது நம் ஒவ்வொருவருக்கும் நித்திய பலனைக் கொண்டுள்ளது.

இ. இங்குள்ளவர்களில் சிலர், இயேசு உலக இரட்சகர் என்றும், மக்களை இரட்சிக்கவும், பாவம் மற்றும் பொல்லாப்பு ஆகியவைகளின் சக்தியிலிருந்து விடுவித்து அவர்களை பாதுகாக்க, பரலோகத்திலிருந்து வந்து மனிதனாகப் பிறந்தார் என்பதையும் தெளிவாக அறிந்து கொள்ளாமல் இருக்கக்கூடும்.

நீ அவரை உன்னுடைய கர்த்தரும், இரட்சகருமாக (பாவத்தின் கட்டுகளிலிருந்து விடுவித்து உன்னைப் பாதுகாப்பவராக) இருக்க அவரை வேண்டிக்கொள். நீ இவ்வாறு செய்வாயானால் அவருடைய நித்திய இராஜ்ஜியத்தில், அவருடன் சேர்ந்து நீயும் ஆட்சி செய்வாய்.

இயேசுவின் பிறப்பில் மேய்ப்பர்களும் தூதர்களும்

லூக்கா 2:8 - 19

முன்னுரை

அ. இயேசுவின் பிறப்பில், தூதர்கள் மேய்ப்பர்களுக்குத் தோன்றினபோது, தேவனைத் துதித்துப்பாடினார்கள்.

ஆ. ரோம சாம்இராஜ்ஜியம் முழுவதிலும் குடிமதிப்பு எடுக்கப்பட்டபடியால், யோசேப்பும், மரியாளும் குடிமதிப்பெழுதப்படும் படிக்கு பெத்லகேமுக்குச் சென்றார்கள். அவர்கள் அங்கு இருக்கும்போது குழந்தை இயேசு பிறப்பதற்கான நேரம் வந்தது. மரியாள் இயேசுவைத் துணிகளில் சுற்றி முன்னணையில் (மிருகங்கள் உண்ணும் வைக்கோல் முதலியன போடும் இடம்) கிடத்தினாள். ஏனெனில் அவர்களுக்குச் சத்திரத்தில் இடம் இல்லை. இது நடந்து கொண்டிருக்கும்போது, பெத்லகேமின் வயல்வெளிகளில் இருந்த மேய்ப்பர்களுக்கு தேவதூதர்கள் தோன்றி இவ்வாறு பாடினார்கள்: "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக...."

ஜனங்களுக்கு விளக்கிக் கூறினான். நிச்சயமாகவே அவன் இயேசுவைக் குறித்தே பேசினான்!

1. இயேசு வல்லமையுள்ளவர் அவர் பயபக்திக்கும், கனத்திற்கும் பாத்திரமானவர். (3:16)

அ. "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்" என்று கூறி, யோவான் மேசியாவை விவரிக்கிறான். இதை, அவன் தன்னையும் இயேசுவையும் ஒப்பிட்டு விளக்குகிறான். இயேசு,

1. என்னைக் காட்டிலும் பலமுள்ளவர்

2. அதிக வல்லமையும், அதிகாரமும் உடையவர்

3. எனக்குள்ளதைக் காட்டிலும் அதிக தைரியம் உடையவர்

ஆ. வச. 16 "அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல". யோவான் "இயேசுவின் பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கும் அளவான தகுதியை நான் பெறவில்லை" என்று கூறுகிறான். இயேசு அபிஷேகிக்கப்பட்ட, தேவனுடைய குமாரன் என்பதை நன்றாக அறிந்திருந்தான். இயேசு உன்னதமானவர், அவன் தாழ்ந்தவன் என்பது அவனுக்குத் தெரியும். எனவே, இதை அவர்கள் விளங்கிக் கொள்ளுவதற்கு ஏற்றாற்போல் சொல்லுகிறான்.

இ. யோவானுடைய காலத்தில், அவர்களிடம் பணம் இல்லாமல் இருந்தபடியால், மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக, அவருக்கு உதவியாக சில காரியங்களைச் செய்வார்கள். ஆசிரியர்களுடைய பாதரட்சைகளின் வாரைக் கட்டுவதும், அவிழ்ப்பதும் அவர்களுடைய கௌரவத்திற்குக் கீழானது என்று மாணவர்கள் கருதுவார்கள். ஆகவே யோவான் இவ்வாறு கூறுகிறான்: "எல்லாரும், மானிடர்களின் மதிப்பிற்குக் கீழானதாகக் கருதும் வேலையைக் கூட, இயேசுவுக்கு நான் செய்ய தகுதி இல்லாதவன்".

இயேசுவின் பிறப்பில் மேய்ப்பர்களும் தூதர்களும்
லூக்கா 2:8 - 19

ஈ. 1. தேவனுடைய குமாரனாகிய இயேசு, பூலோகத்திற்கு மனிதனாக வந்தார் என்றும், 2. நம்முடைய பாவங்களை அவமான சிலுவையில் மரித்து மன்னிக்க அவர் வந்தார் என்றும் நாம் ஒருமுறை விளங்கிக்கொள்வோமானால், நாமும் யோவானைப்போல, கீழ்க்கண்டவாறு உணர்வுடையவர்களாயிருப்போம்:

1. அவர் பெலமுள்ளவர், நாம் பலவீனமானவர்கள்.

2. அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்க தகுதியற்றவர்கள்

3. அவர் உன்னதமானவர், நாம் தாழ்ந்தவர்கள்.

2. இயேசு, பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் (3:15-16)

அ. வச. 15 "யோவானைக் குறித்து: இவன் தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் ... தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்" யூத மக்கள் ஒரு மேசியாவை எதிர்பார்த்தார்கள்.

1. தேவனால் அபிஷேகிக்கப்பட்ட, ஆவிக்குரிய ஒருவர்,

2. அவர்களுடைய விரோதிகளிடமிருந்து அவர்களை விடுவிக்க ஒரு இரட்சகர் வருவார்.

3. நீதியோடு ஆளுகை செய்யும் நித்திய இராஜ்ஜியத்தை நிலைநாட்டும் ஒருவர்.

சிலர், யோவான் ஸ்நானன், அந்த நபராக இருக்கக்கூடும் என்று நினைத்தனர். (யோவான் 1:19-20,25)

ஆ. வச. 16 எனவே "நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்று யோவான் அவர்களிடம் கூறினான். அவர்களுடைய பாவங்களுக்காக உண்மையாக மனஸ்தாபப்பட்டவர்களுக்கு மட்டும் (அதைவிட்டு திரும்பினவர்கள்) யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான். (மத்தேயு 3:11) ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை நடையில், அவர்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பினதற்கான அடையாளம் காணப்படாவிட்டால், அவன் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டான். (மத்தேயு 3:7-8)

இ. வச. 16. "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" இங்கு யோவான் உண்மையில் கூற விரும்புவது என்னவென்றால், மேசியாவாகிய தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவரை (இயேசு) வரும்போது கொடுக்கும் ஞானஸ்நானத்தை விட ஜலத்தினால் அவன் கொடுக்கும் ஞானஸ்நானம் தகுதியில் குறைந்ததாக இருக்கும். ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்குப் பதிலாக, அவர், "பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்."

ஈ. வச. 16. "அவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." "ஞானஸ்நானம்" என்றால், தண்ணீரில் முற்றிலும் மூழ்கி இருப்பது, நீரினால் முழுவதும் மூடி இருப்பது அல்லது ஈரமாக்குவது, ஒருவரின் பிரசன்னத்தினால் முழுவதும் அமுத்தப்படுவது, உன்னுடைய வாழ்க்கை முழுவதும் மற்றொருவரின் சமூகத்தினால் பூரணமாக மறைந்துவிடுவது.

இயேசுவின் பிறப்பில் மேய்ப்பர்களும் தூதர்களும்

லூக்கா 2:8 - 19

உ. "நீ" என்றால், நீங்கள் எல்லாரும், நீ யார் என்றும், நீ எங்கிருந்து வந்தாய் என்றும் கருதாமல், எல்லா மனிதர்களும் என்று பொருள்படும். நீ இவ்விரண்டில் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்று பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் முற்றிலும் மூழ்கி அல்லது பூரிதமாக இருப்பாய், அல்லது அக்கினியில் நீ முற்றிலும் மூழ்கி அல்லது பூரிதமாக இருப்பாய். விதிவிலக்குகள் ஒன்றுமில்லை. இயேசுவிடமிருந்து, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள் அல்லது அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

ஊ. "அவர் பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும்படி அவரை வேண்டிக்கொள்பவர்கள், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள் :

1. இயேசுவை அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்ட யாவரும், தேவனுடைய குடும்பத்தின் குமாரர்களும் குமாரத்திகளுமாகிறார்கள். அதனால், அவர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார். (அப்போஸ்தலர் 2:1-4) பரிசுத்த ஆவியானவரின் சமுகத்தாலும் வல்லமையினாலும் அவர்கள் முழுவாழ்க்கையும் பூரணமாக நிறைந்திருக்கும். (அப்போஸ்தலர் 1:8)

அவருடைய மக்களின் வாழ்க்கை, அவருக்குச் சொந்தமானது என்பதைக் காட்டும் முத்திரை இதுவே. கிறிஸ்துவுக்குள் நித்திய சுதந்திரவாளிகளாவதற்கும் இதுவே உத்திரவாதம். (எபேசியர் 1:13-14, 2கொரிந்தியர் 1:22, 5:5)

2. எல்லா மக்கள் மீதும் அவருடைய ஆவியை ஊற்றுவேன் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் இதில் நிறைவேற்றப்படுகிறது. (இயேசுவை விசுவாசிக்கிற யாவர் - மீதும் - யோவேல் 12:28, ஏசாயா 44:3, எசேக்கியேல் 36:26, 39:29)

எ. "அவர், உங்களுக்கு அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்." இயேசுவிடம் இவ்வாறு கூறுகிறவர்கள்,

1. உம்மை, என்னுடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்க, நான் விரும்பவில்லை.

2. என்னுடைய பாவ மன்னிப்பிற்று, உம்முடன் வர நான் மறுக்கிறேன்.

அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

ஏ. "அக்கினி" தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு ஒரு அடையாளம். (லூக்கா 3:7) வேதம் இவ்வாறு கூறுகிறது: "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராஜ்ஜியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13:41-42; மத்தேயு 18:8-9; 2தெசலோனிக்கேயர் 1:8-9)

இயேசுவின் பிறப்பில் மேய்ப்பர்களும் தூதர்களும்

லூக்கா 2:8 - 19

ஒ. ஆகவே ஒவ்வொருவரும், எடுக்க வேண்டிய தீர்மானம் ஒன்று உண்டு. அவர்கள், ஒன்று, இயேசுவை தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புறக்கணிக்க வேண்டும். அவர்களுடைய பாவமன்னிப்பிற்காக அவரிடம், அவர்கள் வேண்டிக்கொள்ள வேண்டும் அல்லது அவ்வாறு கேட்க மறுக்க வேண்டும். அவர்கள் எடுக்கும் தெரிந்துகொள்ளுதல், அவர்களுக்கு நேரிடப்போவதைப் பாதிக்கும்:

1. அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

2. அவரைப் புறக்கணிப்பவர்கள், அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள். நீ தெரிந்து கொள்! அது உன்னுடைய தீர்மானம்!

3. தூற்றுக் கூடை அவர் (இயேசு) கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்குவார். (3:17)

அ. "இயேசு அவருடைய களத்தை விளக்குகிறார்" "களம்" என்பது சமமான, கற்களில்லாத மண் அல்லது பாறையிலான தரை. இதில் உழவர்கள் தானியக்கதிர்களைப் போடுவார்கள். பின் அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வார்கள்:

1. எருது அல்லது பசு கதிர்களைக் காலால் மிதிக்கும்.

2. பெரிய சக்கரங்கள் உள்ள வண்டி அவற்றின் மீது உருளும்.

3. வேலைக்காரர்கள் பெரிய, தட்டையான சுத்தியல்களினால் தானியத்தை நசுக்குவார்கள்.

கோதுமை மற்றும் வாற்கோதுமை ஆகிய இவைகளில் உள்ள உமியைப் (உலர்ந்த வெளி உறை) பிரித்தெடுக்க இவ்வாறு செய்வார்கள்.

ஆ. "அவருடைய கையில் தூற்றுகிற முள்கரண்டி உள்ளது". "தூற்றும் முள்கரண்டி" என்பது "பொருக்கி எடுக்கும் முள்கரண்டி" போன்றது. அல்லது "நீண்ட பிடியுள்ள ஒரு வகை மண்வெட்டி போன்றது" இதை, தற்காலத்தில் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். தானியக் களஞ்சியத்தின் (களம்) வழியாகக் காற்று அடிக்கும்போது, விவசாயிகள் எருது அல்லது பசுவினால் மிதிக்கப்பட்ட தானியத்தை வீசுவார்கள். உமி மற்றும் பதரை காற்று அடித்துக் கொண்டுபோய்விடும். தானியம் நேராகக் கீழே விழுந்துவிடும்.

இ. "கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்". உமியைக் காற்று அடித்துச் சென்றபின் மீதியிருக்கும் தானியத்தை விவசாயி சேகரித்து, களஞ்சியத்தில் சேர்த்துவைப்பான். இதுவே, உணவாகப் பயன்படும். தானியக் கதிர்களிலுள்ள நல்ல பாகம்.

ஈ. "பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" பதர் விவசாயினால் சேகரிக்கப்பட்டு, எரிக்கப்படும். ஏனெனில் இதனால் பயனில்லை. இதில் நம்மையானதொன்றும் இல்லை. எனவே உணவாகப் பயன்படுத்த முடியாது.

உ. இயேசுவைக் குறித்து கேட்டவர்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதை விளக்க, யோவான் இந்த நிகழ்ச்சியைக் கூறுகிறார்:

இயேசுவின் பிறப்பில் மேய்ப்பர்களும் தூதர்களும்

லூக்கா 2:8 - 19

1. அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் களஞ்சியத்தில் சேர்க்கப்படுவார்கள். (கோதுமையைப்போல) அவர்கள் தேவகோபாக்கினையினின்று பாதுகாக்கப்படுவார்கள்.

2. அவரைப் புறக்கணிப்பவர்கள், அக்கினியினால் சுட்டெறிக்கப்படுவார்கள் (பதரைப்போல). அவர்கள் பாவிகள் என்று நியாயந்தீர்க்கப்பட்டு, நரக அக்கினியில் போடப்படுவார்கள்.

முடிவுரை

அ. இவ்வாறாக, யோவான் இயேசுவைக்குறித்து மூன்று காரியங்களைக் கூறுகிறார்.

1. அவர் வல்லமையானவர். நம்முடைய பயபக்திக்கும், மரியாதைக்கும் உரியவர்

2. அவர் நம் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியினாலாவது, நியாயத்தீர்ப்பின் அக்கினியினாலாவது ஞானஸ்நானம் கொடுப்பார்.

3. அவர் தூற்றும் முன் மண்வெட்டி ஒன்றை தம்முடைய கரத்தில் வைத்திருக்கிறார். அவருடைய போரடிக்கும் களத்திலிருந்து எல்லாவற்றையும் நீக்கிக் காலி செய்கிறார்.

ஆ. நீ இயேசுவுடன் என்ன செய்ய தீர்மானித்திருக்கிறாய்?

1. அவரை உன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வாயா அல்லது புறக்கணிப்பாயா?

2. உன்னுடைய பாவங்களை மன்னிக்க அவரை வேண்டிக்கொள்ளுவாயா அல்லது அவர் கொடுப்பதை பெற்றுக்கொள்ள மறுத்துவிடுவாயா?

நீ எடுக்கும் தீர்மானம் நித்தியமான பலனைக் கொடுக்கும் என்பதை தயவாக ஞாபகப்படுத்திக்கொள்!

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து நமக்குக் கூறுகிறார்

லூக்கா 3:15-17
மத்தேயு 3:11-12
மாற்கு 1:7-8

முன்னுரை

அ. வேதத்தின் பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தில் தேவனுடைய தீர்க்கதரிசிகள், யோவான் ஸ்நானன் தோன்றப்போவதைக் குறித்து, முன் அறிவித்துள்ளார்கள். இந்தத் தீர்க்கத்தரிசிகளில் ஒருவர் ஏசாயா. அவர் "வனாந்தரத்திலே கூப்பிடுகிற ஒருவருடைய சத்தம்" இவ்வாறு கூறிற்று:

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், தேவனுடன் உங்கள் காரியங்களை சரிப்படுத்துங்கள், தேவனுடைய இரட்சிப்பு மானிடர்கள் யாவருக்கும் வெளிப்படுத்தப்படும்". (ஏசாயா 40:3-5)

ஆ. யூத மக்கள், அவர்களுடைய விரோதிகளிடமிருந்து தங்களை விடுவித்து, எருசலேமிலிருந்து அவருடைய அரசாட்சியை நிலை நாட்டுவார் என்று எதிர்பார்க்கும் மேசியாவாகிய, தேவனால் அபிஷேகிக்கப்பட்ட ஒருவருக்காக, ஆவலோடு காத்திருந்தார்கள். ஆகவே, அவர்களில் சிலர், யோவான் அந்த நபராக இருக்கலாம் என்று நினைத்தார்கள்.

இ. இக்காரணத்தினால்தான், அவர்கள் எதிர்பார்க்கும் மேசியா, தான் அல்ல என்பதை யோவான் மக்களுக்குத்தெளிவாக விளக்கிக் கூறினான். அவன், "வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம்" என்று ஏசாயா தீர்க்கதரிசியால் முன்னுரைக்கப்பட்டவன். அப்பொழுது, அவன் மேசியா வரும் போது, அவரை எப்படி இனங்காணலாம் என்பதை

ஜனங்களுக்கு விளக்கிக் கூறினான். நிச்சயமாகவே அவன் இயேசுவைக் குறித்தே பேசினான்!

1. இயேசு வல்லமையுள்ளவர் அவர் பயபக்திக்கும், கனத்திற்கும் பாத்திரமானவர். (3:16)

அ. "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்" என்று கூறி, யோவான் மேசியாவை விவரிக்கிறான். இதை, அவன் தன்னையும் இயேசுவையும் ஒப்பிட்டு விளக்குகிறான். இயேசு,

1. என்னைக் காட்டிலும் பலமுள்ளவர்

2. அதிக வல்லமையும், அதிகாரமும் உடையவர்

3. எனக்குள்ளதைக் காட்டிலும் அதிக தைரியம் உடையவர்

ஆ. வச. 16 "அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல". யோவான் "இயேசுவின் பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கும் அளவான தகுதியை நான் பெறவில்லை" என்று கூறுகிறான். இயேசு அபிஷேகிக்கப்பட்ட, தேவனுடைய குமாரன் என்பதை நன்றாக அறிந்திருந்தான். இயேசு உன்னதமானவர், அவன் தாழ்ந்தவன் என்பது அவனுக்குத் தெரியும். எனவே, இதை அவர்கள் விளங்கிக் கொள்ளுவதற்கு ஏற்றாற்போல் சொல்லுகிறான்.

இ. யோவானுடைய காலத்தில், அவர்களிடம் பணம் இல்லாமல் இருந்தபடியால், மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக, அவருக்கு உதவியாக சில காரியங்களைச் செய்வார்கள்.

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து நமக்குக் கூறுகிறார்

லூக்கா 3:15-17
மத்தேயு 3:11-12
மாற்கு 1:7-8

ஆசிரியர்களுடைய பாதரட்சைகளின் வாரைக் கட்டுவதும், அவிழ்ப்பதும் அவர்களுடைய கௌரவத்திற்குக் கீழானது என்று மாணவர்கள் கருதுவார்கள். ஆகவே யோவான் இவ்வாறு கூறுகிறான்: "எல்லாரும், மானிடர்களின் மதிப்பிற்குக் கீழானதாகக் கருதும் வேலையைக் கூட, இயேசுவுக்கு நான் செய்ய தகுதி இல்லாதவன்".

ஈ. 1. தேவனுடைய குமாரனாகிய இயேசு, பூலோகத்திற்கு மனிதனாக வந்தார் என்றும், 2. நம்முடைய பாவங்களை அவமான சிலுவையில் மரித்து மன்னிக்க அவர் வந்தார் என்றும் நாம் ஒருமுறை விளங்கிக்கொள்வோமானால், நாமும் யோவானைப்போல, கீழ்க்கண்டவாறு உணர்வுடையவர்களாயிருப்போம்:

1. அவர் பெலமுள்ளவர், நாம் பலவீனமானவர்கள்.

2. அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்க தகுதியற்றவர்கள்

3. அவர் உன்னதமானவர், நாம் தாழ்ந்தவர்கள்.

2. இயேசு, பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் (3:15-16)

அ. வச. 15 "யோவானைக் குறித்து: இவன் தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் ... தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில்" யூத மக்கள் ஒரு மேசியாவை எதிர்பார்த்தார்கள்.

1. தேவனால் அபிஷேகிக்கப்பட்ட, ஆவிக்குரிய ஒருவர்,

2. அவர்களுடைய விரோதிகளிடமிருந்து அவர்களை விடுவிக்க ஒரு இரட்சகர் வருவார்.

3. நீதியோடு ஆளுகை செய்யும் நித்திய இராஜ்ஜியத்தை நிலைநாட்டும் ஒருவர்.

சிலர், யோவான் ஸ்நானன், அந்த நபராக இருக்கக்கூடும் என்று நினைத்தனர். (யோவான் 1:19-20,25)

ஆ. வச. 16 எனவே "நான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்று யோவான் அவர்களிடம் கூறினான். அவர்களுடைய பாவங்களுக்காக உண்மையாக மனஸ்தாபப்பட்டவர்களுக்கு மட்டும் (அதைவிட்டு திரும்பினவர்கள்) யோவான் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான். (மத்தேயு 3:11) ஆகவே, அவர்களுடைய வாழ்க்கை நடையில், அவர்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பினதற்கான அடையாளம் காணப்படாவிட்டால், அவன் ஞானஸ்நானம் கொடுக்கமாட்டான். (மத்தேயு 3:7-8)

இ. வச. 16. "அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" இங்கு யோவான் உண்மையில் கூற விரும்புவது என்னவென்றால், மேசியாவாகிய தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவரை (இயேசு) வரும்போது கொடுக்கும் ஞானஸ்நானத்தை விட ஜலத்தினால் அவன் கொடுக்கும் ஞானஸ்நானம் தகுதியில் குறைந்ததாக இருக்கும்.

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து நமக்குக் கூறுகிறார்

லூக்கா 3:15-17
மத்தேயு 3:11-12
மாற்கு 1:7-8

ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பதற்குப் பதிலாக, அவர், "பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்."

ஈ. வச. 16. "அவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்." "ஞானஸ்நானம்" என்றால், தண்ணீரில் முற்றிலும் மூழ்கி இருப்பது, நீரினால் முழுவதும் மூடி இருப்பது அல்லது ஈரமாக்குவது, ஒருவரின் பிரசன்னத்தினால் முழுவதும் அழுத்தப்படுவது, உன்னுடைய வாழ்க்கை முழுவதும் மற்றொருவரின் சுழகத்தினால் பூரணமாக மறைந்துவிடுவது.

உ. "நீ" என்றால், நீங்கள் எல்லாரும், நீ யார் என்றும், நீ எங்கிருந்து வந்தாய் என்றும் கருதாமல், எல்லா மனிதர்களும் என்று பொருள்படும். நீ இவ்விரண்டில் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்று பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் முற்றிலும் மூழ்கி அல்லது பூரிதமாக இருப்பாய், அல்லது அக்கினியில் நீ முற்றிலும் மூழ்கி அல்லது பூரிதமாக இருப்பாய். விதிவிலக்குகள் ஒன்றுமில்லை. இயேசுவிடமிருந்து, ஒவ்வொருவரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள் அல்லது அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

ஊ. "அவர் பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும்படி அவரை வேண்டிக்கொள்பவர்கள், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள் :

1. இயேசுவை அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்ட யாவரும், தேவனுடைய குடும்பத்தின் குமாரர்களும் குமாரத்திகளுமாகிறார்கள். அதனால், அவர் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார். (அப்போஸ்தலர் 2:1-4) பரிசுத்த ஆவியானவரின் சுழகத்தாலும் வல்லமையினாலும் அவர்கள் முழுவாழ்க்கையும் பூரணமாக நிறைந்திருக்கும். (அப்போஸ்தலர் 1:8) அவருடைய மக்களின் வாழ்க்கை, அவருக்குச் சொந்தமானது என்பதைக் காட்டும் முத்திரை இதுவே. கிறிஸ்துவுக்குள் நித்திய சுதந்திரவாளிகளாவதற்கும் இதுவே உத்திரவாதம். (எபேசியர் 1:13-14, 2கொரிந்தியர் 1:22, 5:5)

2. எல்லா மக்கள் மீதும் அவருடைய ஆவியை ஊற்றுவேன் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் இதில் நிறைவேற்றப்படுகிறது. (இயேசுவை விசுவாசிக்கிற யாவர் - மீதும் - யோவேல் 12:28, ஏசாயா 44:3, எசேக்கியேல் 36:26, 39:29)

எ. "அவர், உங்களுக்கு அக்கினியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்." இயேசுவிடம் இவ்வாறு கூறுகிறவர்கள்,

1. உம்மை, என்னுடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்க, நான் விரும்பவில்லை.

2. என்னுடைய பாவ மன்னிப்பிற்று, உம்முடன் வர நான் மறுக்கிறேன்.

அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து நமக்குக் கூறுகிறார்

லூக்கா 3:15-17
மத்தேயு 3:11-12
மாற்கு 1:7-8

ஏ. "அக்கினி" தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு ஒரு அடையாளம். (லூக்கா 3:7) வேதம் இவ்வாறு கூறுகிறது: "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய இராஜ்ஜியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13:41-42; மத்தேயு 18:8-9; 2 தெசலோனிக்கேயர் 1:8-9)

ஒ. ஆகவே ஒவ்வொருவரும், எடுக்க வேண்டிய தீர்மானம் ஒன்று உண்டு. அவர்கள், ஒன்று, இயேசுவை தங்களுடைய மீட்பராக ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது புறக்கணிக்க வேண்டும். அவர்களுடைய பாவமன்னிப்பிற்காக அவரிடம், அவர்கள் வேண்டிக்கொள்ள வேண்டும் அல்லது அவ்வாறு கேட்க மறுக்க வேண்டும். அவர்கள் எடுக்கும் தெரிந்துகொள்ளுதல், அவர்களுக்கு நேரிடப்போவதைப் பாதிக்கும்:

1. அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

2. அவரைப் புறக்கணிப்பவர்கள், அக்கினியினால் ஞானஸ்நானம் பெறுவார்கள். நீ தெரிந்து கொள்! அது உன்னுடைய தீர்மானம்!

3. தூற்றுக் கூடை அவர் (இயேசு) கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்குவார். (3:17)

அ. "இயேசு அவருடைய களத்தை விளக்குகிறார்" "களம்" என்பது சமமான, கற்களில்லாத மண் அல்லது பாறையிலான தரை. இதில் உழவர்கள் தானியக்கதிர்களைப் போடுவார்கள். பின் அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வார்கள்:

1. எருது அல்லது பசு கதிர்களைக் காலால் மிதிக்கும்.

2. பெரிய சக்கரங்கள் உள்ள வண்டி அவற்றின் மீது உருளும்.

3. வேலைக்காரர்கள் பெரிய, தட்டையான சுத்தியல்களினால் தானியத்தை நசுக்குவார்கள்.

கோதுமை மற்றும் வாற்கோதுமை ஆகிய இவைகளில் உள்ள உமியைப் (உலர்ந்த வெளி உறை) பிரித்தெடுக்க இவ்வாறு செய்வார்கள்.

ஆ. "அவருடைய கையில் தூற்றுகிற முள்கரண்டி உள்ளது". "தூற்றும் முள்கரண்டி" என்பது "பொருக்கி எடுக்கும் முள்கரண்டி" போன்றது. அல்லது "நீண்ட பிடியுள்ள ஒரு வகை மண்வெட்டி போன்றது" இதை, தற்காலத்தில் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். தானியக் களஞ்சியத்தின் (களம்) வழியாகக் காற்று அடிக்கும்போது, விவசாயிகள் எருது அல்லது பசுவினால் மிதிக்கப்பட்ட தானியத்தை வீசுவார்கள். உமி மற்றும் பதரை காற்று அடித்துக் கொண்டுபோய்விடும். தானியம் நேராகக் கீழே விழுந்துவிடும்.

இ. "கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார்". உமியைக் காற்று அடித்துச் சென்றபின் மீதியிருக்கும் தானியத்தை விவசாயி சேகரித்து,

யோவான் ஸ்நானன் இயேசுவைக் குறித்து நமக்குக் கூறுகிறார்

லூக்கா 3:15-17
மத்தேயு 3:11-12
மாற்கு 1:7-8

களஞ்சியத்தில் சேர்த்துவைப்பான். இதுவே, உணவாகப் பயன்படும். தானியக் கதிர்களிலுள்ள நல்ல பாகம்.

ஈ. "பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெறிப்பார்" பதர் விவசாயினால் சேகரிக்கப்பட்டு, எரிக்கப்படும். ஏனெனில் இதனால் பயனில்லை. இதில் நம்மையான தொன்றும் இல்லை. எனவே உணவாகப் பயன்படுத்த முடியாது.

உ. இயேசுவைக் குறித்து கேட்டவர்களுக்கு எப்படி இருக்கப்போகிறது என்பதை விளக்க, யோவான் இந்த நிகழ்ச்சியைக் கூறுகிறார்:

1. அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் களஞ்சியத்தில் சேர்க்கப்படுவார்கள். (கோதுமையைப்போல) அவர்கள் தேவகோபாக்கினையினின்று பாதுகாக்கப்படுவார்கள்.

2. அவரைப் புறக்கணிப்பவர்கள், அக்கினியினால் சுட்டெறிக்கப்படுவார்கள் (பதரைப்போல). அவர்கள் பாவிகள் என்று நியாயந்தீர்க்கப்பட்டு, நரக அக்கினியில் போடப்படுவார்கள்.

முடிவுரை

அ. இவ்வாறாக, யோவான் இயேசுவைக்குறித்து மூன்று காரியங்களைக் கூறுகிறார்.

1. அவர் வல்லமையானவர். நம்முடைய பயபக்திக்கும், மரியாதைக்கும் உரியவர்

2. அவர் நம் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியினாலாவது, நியாயத்தீர்ப்பின் அக்கினியினாலாவது ஞானஸ்நானம் கொடுப்பார்.

3. அவர் தூற்றும் முன் மண்வெட்டி ஒன்றை தம்முடைய கரத்தில் வைத்திருக்கிறார். அவருடைய போரடிக்கும் களத்திலிருந்து எல்லாவற்றையும் நீக்கிக் காலி செய்கிறார்.

ஆ. நீ இயேசுவுடன் என்ன செய்ய தீர்மானித்திருக்கிறாய்?

1. அவரை உன்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்வாயா அல்லது புறக்கணிப்பாயா?

2. உன்னுடைய பாவங்களை மன்னிக்க அவரை வேண்டிக்கொள்ளுவாயா அல்லது அவர் கொடுப்பதை பெற்றுக்கொள்ள மறுத்துவிடுவாயா?

நீ எடுக்கும் தீர்மானம் நித்தியமான பலனைக் கொடுக்கும் என்பதை தயவாக ஞாபகப்படுத்திக்கொள்!

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

**(லூக்கா 4:1 - 13
மத்தேயு 4:1 - 11
மாற்கு 1:12 - 13)**

முன்னுரை

அ. இஸ்ரவேல் மக்களின் 40 வருட வனாந்தர பயணத்தை, இயேசுவின் உபவாசம் மற்றும் சோதனை மூலமாக நோக்கினால், அசையும் படம் போலக் (சினிமா படம்) காணலாம். (யாத்திராகமம் 13:17-18). எகிப்திலிருந்து வெளியேறிய பின், மத்தியதரைக் கடற்கரை வழியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் சென்றிருக்கலாம். இது, 100 மைல்கள் தூரம் மட்டுமே இருந்தது. சில வாரங்களில், அவர்கள் அங்கு போய் சேர்ந்திருக்கலாம். இருந்தபோதிலும், பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக, அவர்கள் வனாந்தர மார்க்கமாக வழி நடத்தப்பட்டார்கள். பாலஸ்தீனம் நாட்டிற்குள் பிரவேசிக்கும் போது அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய யுத்தத்திற்கு ஆயத்தப்பட, விசுவாசத்தில் பலப்பட்டு கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளுவார்கள் என்பது, தேவனுடைய நம்பிக்கை.

ஆ. யோர்தான் நதியில், அவருடைய ஞானஸ்நானத்தின்போது, ஆவியால் அபிஷேகிக்கப்பட்டு, தேவனுடைய குமாரன் என்று அவருடைய தெய்வீகத் தன்மை அறிவிக்கப்பட்ட பின், நேரடியாக அவருடைய ஊழியத்திற்குள், இயேசு சென்றிருக்கலாம். இருந்தாலும், அவர் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு தேவ ஆவியானவரால் வனாந்தரத்திற்குள் வழிநடத்தப்பட்டார்.

இ. இதே தத்துவம் இன்று நமக்கும் உண்மையாக இருக்கிறது. பொல்லாத சக்திகளோடு செய்யப்படும் ஆவிக்குரிய போராட்டத்தில் பிரவேசிக்கும் முன்பாக, வனாந்தர அனுபவம் நமக்கு அவசியம். நம்முடைய வாழ்க்கையில், விசுவாசமும், விடாமுயற்சியும், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிதல், மற்றும் முற்றிலுமாக தேவன் பேரில் சார்ந்திருப்பது ஆகிய இவைகள் வளர்ச்சியடைய வேண்டும். அப்பொழுது நாம், கிறிஸ்துவைபோல், பிசாசுடன் போராடுகையில் வெற்றிபெறுவோம். நாம் ஆவிக்குரிய வீரர்களாக, தொடர்ந்து, மக்களுடைய வாழ்க்கையில் பிசாசின் கிரியைகளை அழிக்கிறவர்களாக, கிறிஸ்து கல்வாரியில் சம்பாதித்த வெற்றியை பெற்றுக் கொள்ளுவோம்.

1. நாம் உபவாசித்து ஜெபிக்கும்போது, நாம் தேவனை முற்றிலும் சார்ந்திருப்போம். (4:1-2)

அ. வச. 1 "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் ... ஆவியானவராலே கிறிஸ்துவின் வாழ்க்கையில் ஆரம்பகாலத்திலேயே பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தார். சோதிக்கப்பட வனாந்தரத்திற்கு, இயேசுவை வழிநடத்தினது தவிர, அவர் கீழ்க்கண்ட காரியங்களையும் செய்தார்.

1. இயேசு கருவில் உருவாக்கப்படக் காரணமாக இருந்தார். (மத்தேயு 1:18)

2. இயேசு பிறந்தபோது, அவருடைய பிரசன்னத்தால் அவர் (இயேசு) நிரப்பப்பட்டார்.

3. யோர்தான் நதியில், இயேசு தேவகுமாரன் என்ற அவருடைய தெய்வீகத் தன்மைக்கு உறுதியளித்தார்.

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

(லூக்கா 4:1 - 13 மத்தேயு 4:1 - 11 மாற்கு 1:12 - 13)

4. இயேசு ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றபின் அவரை அபிஷேகம் செய்தார்.

நாம் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கும்போது, நாமும்கூட, 1. அவரால் வழிநடத்தப்படுவோம், 2. நம்முடைய வாழ்க்கையில் அவர் கிரியை செய்வதைக் காண்போம், 3. சுவிசேஷத்தை அறிவிக்க அவரால் அபிஷேகம் செய்யப்படுவோம்.

ஆ. வச. 1. "வனாந்தரத்திற்கு" வனாந்தரம் பிசாசின் கிரியைகளோடு சம்பந்தப்பட்டது என்று வேதத்தில் உள்ளது. (மத்தேயு 12:43, வெளிப்படுத்தின விசேஷம் 18:2) இங்குதான் இஸ்ரவேல் மக்கள் மிகப்பெரிய, ஆரம்பகால சோதனைகளை அனுபவித்தார்கள். இஸ்ரவேலாகிய தம்முடைய குமாரனை சோதித்ததுபோல, அவருடைய குமாரனாகிய இயேசுவை, வனாந்தரத்தில் சோதிக்க, தேவன் தெளிவாக திட்டமிட்டார். (உபாகமம் 8:2-5; யாத்திராகமம் 4:22) இஸ்ரவேலாகிய அவருடைய குமாரனையும், அவருடைய குமாரனாகிய இயேசுவையும், சோதிக்க வனாந்தரத்திற்கு வழிநடத்தினதுபோல, பிசாசினால் சோதிக்கப்பட, அவர் ஒவ்வொருவரையும், அவ்வாறே வனாந்தரத்திற்கு வழிநடத்துகிறார். நாம் ஆவியில் முதிர்ச்சியடைந்து, தேவனுக்கு அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கீழ்க்கண்ட காரியங்களை செய்யமுடியும்.

1. ஆவிக்குரிய போராட்டத்தில் விரோதியோடு எதிர்த்து நிற்கமுடியும்.

2. பரீட்சைகளையும், சோதனைகளையும் சகித்து, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சுதந்தரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இ. வச. 2. "நாற்பது நாட்கள் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்" அவர் உபவாசம் இருந்த நாட்களில் இடைவிடாமல் ஜெபித்துக் கொண்டிருந்தார் என்பதற்கு சந்தேகமில்லை. நாம் உபவாசிக்கும்போது முற்றிலும் தேவன்மீது சார்ந்திருப்பதை உண்மையில் வெளிப்படுத்த வேண்டும் மற்றும் ஜெபத்தில் எல்லாவற்றையும் அவரிடம் எடுத்துச்செல்லவேண்டும். கிறிஸ்துவின் சரீரதேவைகளும், உடலின் சகிக்கும் தன்மையும் அபாயகரமான நிலையில் இருந்திருக்கும். இயேசுவின் இந்த உபவாசம் கீழ்க்கண்டவர்களின் நீண்டகால உபவாசத்தை ஒத்தது:

1. சீனாய் மலையில், தேவனோடு மோசே இருந்தபோது 40 நாட்களில் உபவாசித்தான். *(யாத்திராகமம் 34:28; உபாகமம் 9:9)*

2. அப்பம் மற்றும் தண்ணீர் மட்டும் புசித்தும், குடித்தும் 21 நாட்களுக்கு உபவாசம் செய்த தானியேல் *(தானியேல் 10:2-3)*

3. தமஸ்குவிற்குச் செல்லும் சாலையில் இயேசுவோடு அவன் பெற்ற அனுபவத்திற்குப் பின் மூன்று நாட்கள் உபவாசம் செய்த பவுல் *(அப்போஸ்தலர் 9:9)*

ஈ. வச. 2. "பிசாசினால் சோதிக்கப்பட்டார்". சாத்தான், நம்முடைய ஆத்துமாக்களைச் சோதிப்பவன் என்பதில், யாதொரு சந்தேகமும் இருக்கவேண்டாம். சாத்தான் ஒருவன் இருக்கிறான், பிசாசுகளும் அநேகம் உண்டு! இவைகள் நம்மில் ஒவ்வொருவரையும் சோதிக்கும். வேறுவிதமாக போதனை செய்யும்,

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

(லூக்கா 4:1 - 13
மத்தேயு 4:1 - 11
மாற்கு 1:12 - 13)

வேதாகம ஆசிரியர்கள் மற்றும் பண்டிதர்களால் ஏமாற்றப்பட வேண்டாம்! எப்படியிருப்பினும், நம்முடைய நன்மைக்காக தேவன் பரீட்சைகளையும், சோதனைகளையும் நமக்கு வர அனுமதிக்கிறார்.

ஆத்துமாக்களுக்காக, சத்துருவுடன் சாவுக்கேதுவான போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன், நாம் நம்முடைய விசுவாசம் விடாமுயற்சி, கீழ்ப்படிதல் மற்றும் தேவனுடைய வார்த்தையைப் பற்றி அறிகிற அறிவு, ஆகிய இவைகளில் முதிர்ச்சி அடைய வேண்டும் என்பது முற்றிலும் அவசியமானது.

உ. நம்முடைய வாழ்க்கையில் உபவாச ஜெபத்தை ஒரு வழக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று தேவன் நம்மிடம் விரும்புகிறார். இது, அவர் மீது பூரணமாகச் சார்ந்திருப்பதை வெளிப்படுத்துகிறது. நாம் உபவாசிக்கிறோம், அதைச் செய்வதற்காக தேவன் பலனளிக்கிறார். அவர்:

1. உபவாசிப்பவர்களுக்கு ஈவுகளை அளிக்கிறார், கொடுக்கிறார், மேலும் கொடுக்கிறார், உள்ளாகக் கொடுக்கிறார், அதிகமாகக் கொடுக்கிறார், திரும்பக் கொடுக்கிறார்!

2. உபவாசிப்பவர்களுக்கு அற்புதங்களை நடப்பிக்கிறார்.

3. நாம் உபவாசிக்கும்போது, பரலோகச் சேனைகளை, ஆகாய மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சக்திகளுக்கு எதிராக அனுப்புகிறார். (தானியேல் 10:12-14; மத்தேயு 6:18)

ஊ. ஆகவே, நீ உபவாச ஜெபத்தில் நேரத்தைச் செலவிடாமல் இருக்கும் நிலையில், தேவனுடைய ஆவிக்குரிய வீரர்கள் மத்தியில் நீ இருக்கமுடியாது. உபவாசிப்பதிலும், ஜெபிப்பதிலும் நீ போதுமான நேரம் செலவிடாவிட்டால், சாத்தானோடும், அவனுடைய திரள் சேனையான பிசாசுகளுக்கும் எதிரான போராட்டத்தில் விசுவாசிகளின் இந்த சரீரமாகிய சபையில் எந்த ஒரு வெற்றியும் ஒருபோதும் இருக்கமுடியாது. ஜெபத்திலும் உபவாசத்திலும் நேரங்களை நீ செலவிடாவிட்டால், பிசாசின் கட்டுகள் மற்றும் அடிமைத்தனத்திலிருந்து முழுவதும் விடுவிக்கப்பட்ட ஒரு ஆவிக்குரிய வீரனாக ஒருபோதும் இருக்கமாட்டாய்!

நாம் உபவாசிக்கும்போது, நாம் பிசாசினால் சோதிக்கப்படுவோம். (4:3-12)

அ. வச. 3. "நீர் தேவனுடைய குமாரனேயானால்..." இது உண்மையில் இவ்வாறு பொருள்படும். "நீர் தேவனுடைய குமாரனாக இருப்பதினால்" அவனுடைய சோதனையில் ஆரம்பத்தில், சாத்தான் கிறிஸ்துவினுடைய தெய்வீகத்தன்மை மற்றும் குமாரத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறான். எப்படி இருப்பினும், நீ உபவாசிக்கும்போது, சத்துரு உன்னைச் சோதிக்கிறான் என்பதை நீ பார்க்க வேண்டும். ஆகவே, இதற்கு ஆயத்தமாயிரு! நம்முடைய சரீரத்தின் சகிக்கும் ஆற்றல், கிறிஸ்துவிடம் இருந்ததுபோல உச்சநிலையை அடையும்போது, சாத்தான் நம்மிடம் வருகிறான். கீழ்க்கண்டவாறு நம்மை சோதிக்கிறான்:

1. தேவனுடைய கரிசனையையும், பாதுகாப்பையும் சந்தேகிக்க,

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

(லூக்கா 4:1 - 13 மத்தேயு 4:1 - 11 மாற்கு 1:12 - 13)

2. சன்மார்க்கபாவங்களைச் செய்யும்படியாக அவனுடைய தொழிலில் அவன் பயன்படுத்தாத தந்திரம் ஒன்றும் இல்லை!

ஆ. வச. 3-4 "இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும்" கிறிஸ்து கீழ்க்கண்டவைகளைத் தள்ளிவிடும்படி செய்வதே சாத்தானுடைய முதல் சோதனை:

1. தேவன் பேரில் அவர் சார்ந்திருப்பதிலிருந்து விலகி தனித்து செயல்பட.

2. சுயநம்பிக்கையுடன் இருத்தல்

3. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும், இந்த வாழ்க்கையின் தேவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல்.

இதே மாதிரியான சோதனைகளால் நாமும்கூட சோதிக்கப்படுவோம்! கிறிஸ்துவின் பதில், அவர் பூரணமாக தேவனைச் சார்ந்திருந்தார் என்றும், அவருடைய வார்த்தையின்படி கீழ்ப்படிந்து கிரியை செய்வார் என்றும் காட்டுகிறது. அவருடைய பதில், நேரடியாக வேதத்திலிருந்து எடுக்கப்பட்டது. "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" (மத்தேயு 4:4; உபாகமம் 8:2-3; மத்தேயு 6:33)

இ. வச. 5-8 "உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் ... இவைகள் எல்லாவற்றின் மேலுமுள்ள அதிகாரத்தையும், இவைகளின் மகிமையை உமக்குத் தருவேன்". கீழ்க்கண்டவைகளை அவர் செய்யும்படி முயற்சித்ததே, சாத்தானுடைய இரண்டாம் சோதனை:

1. சிலுவையில் பாடுபடுவதற்குப் பதிலாக, உலகத்தைக் கைப்பற்ற, இயேசு அவனை வணங்கும்படியாக செய்வது.

2. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட, கிறிஸ்து தானாக மனமுவந்து கீழ்ப்படிவதைத் தடுக்க இந்த சோதனைக்குரிய பதிலும், வேதத்திலிருந்து நேரடியாக மேற்கோளாக எடுக்கப்பட்டது. "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்". (உபாகமம் 6:13-17)

ஈ. இந்த உலகம் கொடுக்கும் மகிமையையும் அதிகாரத்தையும் தேடி அலைவதும் உண்மையில் சாத்தான் ஆராதனை என்று இயேசுவுக்குத் தெரியும். இதைக் கொண்டு அவர் செய்யப்போவது ஒன்றுமில்லை! நாமும் கூட அப்படித்தான் இருக்க வேண்டும்! தேவன் ஒருவரே ஆராதிக்கப்படவேண்டும். (யாத்திராகமம் 23:20-33)

உ. வச. 9-12 "இங்கேயிருந்து தாழக்குதியும்" அவனுடைய கடைசி சோதனையில், இயேசு கீழ்க்கண்ட காரியங்களைச் செய்யுமாறு, பிசாசு இயேசுவைச் சோதித்தான்:

1. பொருத்தமில்லாத அவசியமற்ற காரியங்களைச் செய்யும்படி அவரிடம் உரிமையுடன் கேட்பதினால் தேவகோபத்தை தூண்டும்படியாக.

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

**(லூக்கா 4:1 - 13
மத்தேயு 4:1 - 11
மாற்கு 1:12 - 13)**

2. மற்றவர்கள்முன், தேவனிடம் தனக்கு இருக்கும் சிறப்பான சலுகைகளை, இயேசு எடுத்துக்காட்டும்படி அவன்(பிசாசு) முயற்சித்தான்.

அவன் இம்மாதிரியாகவே, இன்று நமக்குச் செய்கிறான். அற்புதமான பாதுகாப்பிற்காக, உரிமையுடன் கட்டளையிடுவதின் மூலம் தேவனுடைய கரிசனையை நிரூபிக்க தூண்டுகிறான்! தேவனை சோதிப்பதை வேதம் தடுக்கிறது. இயேசுவின் பதிலுக்கு இதுவே காரணம்: (வேதம் கூறுகிறது) "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" (உபாகமம் 6:16)

ஊ. 40 நாள் உபவாசமும், பிசாசின் சோதனைகளும், கிறிஸ்துவின் ஆவிக்குரிய போராட்டத்திற்கு ஆரம்பம் மாத்திரமே. நம்பிக்கைக்கும், கீழ்ப்படிதலும் ஒரு மாதிரி நிலைநாட்டப்பட்டுவிட்டது. தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தி எவ்வாறு பிசாசை எதிர்த்து நின்று அவன் ஓடிப்போகும்படி செய்யலாம் என்பதை இந்த முதல் அனுபவத்தில் பெற்றுக்கொண்டார். (யாக்கோபு 4:7) ஆவிக்குரிய யுத்தத்திற்கான போராயுதங்களை தம்மீது தரித்துக்கொண்டார்!

எ. நாம் உபவாசித்து ஜெபிக்கும்போது, சத்துரு நம்மை சோதிக்கப்போவதை நாம் எதிர்பார்க்கலாம். கிறிஸ்து 40 நாற் உபவாசம் செய்தபோது, சாத்தான் அவரைச் சோதிக்க தேவன் அனுமதித்தார்.

நாம் உபவாசம் செய்யும்போது, சாத்தான் நம்மை சோதிக்க அவர் அனுமதிப்பார். நமது மிகக்கடினமான நேரங்களிலும் சரீரபிரகாரமான மிக அதிக பலவீனமான நேரங்களிலும், சாத்தான் நமக்கு எதிராக வந்து, நம்மைச் சோதிப்பான்.

தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் (அதற்கு முடிவுகொண்டு வருவார்) உண்டாக்குவார். (1கொரிந்தியர் 10:13) அவர் தம்முடைய பரிசுத்த தூதர்களை நமக்கு உதவிசெய்ய அனுப்புவார். அவைகளுடைய தொடுதல், ஆவிக்குரிய உற்சாகத்தையும், நம்முடைய சரீரங்களுக்கு உடல்சம்பந்தமான பலனையும் கொடுக்கும். நாம் உபவாசித்து ஜெபிக்கும்போது, நம்முடைய ஆத்துமாக்களின் சத்துரு தோல்வியடையும்படியாக எதிர்த்து நிற்போம்.

3. நாம் உபவாசித்து ஜெபிக்கும்போது நாம் பிசாசைத் தோற்கடிப்போம். (4:13)

அ. "பிசாசு அவரைவிட்டு போனான்" விசுவாசமும், தேவன்மீது முற்றிலும் சார்ந்திருப்பதும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதும், பிசாசின் மீது நமக்கு வெற்றிதரும். இவ்வாறுதான் கிறிஸ்து எதிர்த்து நின்றார். இவ்வாறாகவே நாமும் பிசாசிற்கு எதிர்த்து நிற்கவேண்டும். அப்பொழுது, சோதனை காலத்தில் பிசாசு எவ்வாறு கிறிஸ்துவை விட்டுப் போய்விட்டானோ அவ்வாறே நம்மை விட்டும் ஓடிவிடுவான்!

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

**(லூக்கா 4:1 - 13
மத்தேயு 4:1 - 11
மாற்கு 1:12 - 13)**

ஆ. "சில காலம்" எப்படி இருப்பினும் சாத்தான் அவருடைய ஊழியக்காலம் முழுவதிலும் தொடர்ந்து இதைப்போன்ற சோதனைகளாலேயே இயேசுவை சோதித்தான்.

முழுவதும் சோதனைகளற்றதாக இருக்கவில்லை. அவரைப் பின்பற்றிச் சென்றவர்களின் ஜீவியகாலத்திலும் சோதனைகளிலிருந்து விடுபட்டதாக இருக்க முடியாது. இக்காரணத்தினால்தான் "சோதனைக்குட்படப்பண்ணாமல், (லூக்கா 11:4) என்று தினந்தோறும் ஜெபிக்கவேண்டும் என்று, இயேசு நம்மை ஊக்குவிக்கிறார்".

ஈ. இதனால்தான் பேதுரு நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "(இடைவிடாமல்) தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்.... எதிர்த்து நில்லுங்கள்... உறுதியாய் நில்லுங்கள்...." (1 பேதுரு 5:8-9). இக்காரணத்தினாலேதான் பவுல் நமக்கு இவ்வாறு இருக்கும்படி கூறுகிறார். "தெளிந்தவர்களாயிருந்து.....கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.....தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்..... செய்து முடித்தவர்களாய் நிற்கவும்...... உறுதியாய் நில்லுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:8; எபேசியர் 6:10-11, 13-14) "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று யாக்கோபு கூறுவதற்கும், இதுவே காரணம் (யாக்கோபு 4:7).

உ. 40 நாள் உபவாசத்திற்கும், சாத்தானின் சோதனைக்களுக்கும் பிற்பாடு, தேவதூதர்கள் வந்து இயேசுவிற்குப் பணிவிடைசெய்தார்கள் என்று, மத்தேயு சுவிஷேத்தில், வேதம் கூறுகிறது (மத்தேயு 4:11) "பணிவிடை செய்தார்கள்" என்றால், "ஆகாரம் கொடுத்து பலப்படுத்தினார்கள்" என்று பொருள்படும். எனவே, நாம் உபவாசித்து பசியாயிருக்கும்போதும், சாத்தானுடன் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போதும், நமக்கு ஊழியம் செய்யும்படியாக தேவன் நமக்கும் தூதர்களை அனுப்புவார். எபிரெய நிருபத்தின் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்: "இரட்சிப்பை சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் (தூதர்கள்) அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" (எபிரெயர் 1:14). தானியேல் நீண்ட நாட்கள் உபவாசத்தில் செலவிட்டபோதும், தேவதூதன் வந்து அவனைத் தொட்டு பலப்படுத்தினான். (தானியேல் 10:18-19).

ஊ. இயேசு அவருடைய உபவாசம் மற்றும் சாத்தானின் சோதனை காலம் முழுவதிலும் அவருடைய தெய்வீக அல்லது சிறப்பான திறமைகளையாவது பயன்படுத்தவில்லை. நாம் எவ்வாறு செய்யவேண்டுமோ அவ்வாறே அவர், ஆவிக்குரிய போராட்டத்தில் கீழ்க்கண்டவாறு, சாத்தானை சந்தித்தார்.

1. உபவாசிப்பதின் மூலம்

2. ஜெபிப்பதினால்

3. அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலமாக,

இயேசுவின் 40 நாள் உபவாசமும் சோதனையும்

(லூக்கா 4:1 - 13
மத்தேயு 4:1 - 11
மாற்கு 1:12 - 13)

4. தேவனுடைய உண்மைத்தன்மை மற்றும் அவருடைய வார்த்தையின் மீது முற்றிலும் சார்ந்திருப்பதினால்.

அதன்பின், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிசாசுகளை விரட்டி, வியாதியுள்ளவர்களை குணமாக்கி, அற்புதங்களை நடப்பித்து, அவனுடைய இராஜ்ஜியத்திற்குள் படையெடுத்துச் சென்று, சிறைப்பட்டவர்களை விடுவித்து எடுத்துக்கொண்டு, அவர் (இயேசு) அவனை (சாத்தானை) வெளிப்படையாக எதிர்த்து நின்று வென்றார்.

எ. பிசாசு நம்மைச் சோதிக்கும்போது, இயேசுவைப்போல நாமும் வெற்றிபெறுவோம். நாம் முடிவாக அவனைத் தோற்கடிப்போம். அவனுடைய இராஜ்ஜியத்தின் மீது படையெடுத்துச் சென்று அவனால் சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவித்து நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுவோம். சாத்தான் நம் முன்னால் தோன்றி, இந்த உலகத்தின் சோதனைகளால் நம்மை நேருக்கு நேர் சந்திக்கும் போது, நாம் உறுதியாக நிற்க முடியும். இயேசுவின் நாமத்தில் நாம் அவனை எதிர்க்கிறோம்.

முடிவுரை

அ. நாம் உபவாசிக்கும் போது, அவருடைய வல்லமை, அவருடைய பலத்தின்மீதும் நாம் முற்றிலும் சார்ந்திருக்கிறோம். நாம் உபவாசிக்கும்போது சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் நம்மை சோதிப்பதை, எதிர் பார்க்கலாம். எப்படியிருப்பினும், நாம் உபவாசிக்கும் போது, சத்துருவின் வல்லமையின் மீதும் வெற்றிபெறுவோம். நாம் உலகமெங்கும் செல்லும் தேவனுடைய பராக்கிரமமான சேனையின் ஒரு அங்கமாகி, ஆண்கள் மற்றும் பெண்கள் வாழ்க்கையில் உள்ள சாத்தானின் கிரியைகளை அழிக்கிறவர்களாகிறோம்.

ஆ. கிறிஸ்துவிற்கு எதிராக சாத்தான் பயன்படுத்தின சாத்தானின் சோதனைகள் யாவை? இப்பொழுது சாத்தான் உன்னை எவ்வாறு சோதிக்கிறான்? மற்றவர்களின் அதிகப்படியான ஜெப உதவி உனக்கு அவசியமா?

நியாயந்தீர்த்தலும் கொடுத்தலும்
லூக்கா 6:37-38

முன்னுரை

அ. இந்த வசனங்கள், 27-36 வசனங்களைத் தொடர்ந்து (உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்) கிறிஸ்து அவருடைய சீடர்களிடம் எப்படிப்பட்ட தயவை எதிர்பார்க்கிறார் என்பதை விவரிக்கிறது; அதாவது உண்மையாய் மனந்திரும்பியவர்களிடமிருந்து இவைகள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வாழ்பவர்களின் கொள்கைகள்.

1. மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள் (6:37)

ஆ. "நியாயத்தீர்க்காதிருங்கள், நீங்களும் நியாயந்தீர்க்கப்படமாட்டீர்கள்". "நியாயந்தீர்ப்பது"என்றால் உங்கள் தீர்மானத்தின் அடிப்படையில் மற்றொருவரை குற்றவாளி என்று உங்கள் மனதில் நியாயந்தீர்த்து, (ஒருவரை நீதிமன்றத்தில் விசாரணை செய்வதுபோல்) அதற்கேற்ற தண்டனையை நிர்ணயிப்பது, என்று பொருள்படும். மற்றவர்களிடம் வழக்கமாக குற்றங்காணுவதும், கடினமாக குறைகளை எடுத்துக்கூறுவதும், என்றும் இது பொருள்படும். கீழ்க்காணும் பலகாரணங்களுக்காக, இம்மாதிரியாக மற்றவர்களை நியாயந்தீர்ப்பவர்களைக் கிறிஸ்து கண்டனம் செய்கிறார்.

1. இது, யாருக்கு எதிராகக் கூறப்படுகிறதோ, அவர்கள் சோர்வடையும்படியாகவும், அவமானப்படுத்தப் படுவதாகவும் இருக்கிறது.

2. இது, யார் இதைச் செய்கிறார்களோ, அவர்களுடைய சுயநீதியை உயர்த்துவதாக இருக்கிறது, (மற்றவர்களைவிட தங்களை மேன்மைப்படுத்துவது).

3. இது, மற்றவர்களை, இதேவிதமான குற்றங்கண்டுபிடிக்கும் பழக்கத்தில் மனம்போல் ஈடுபட தூண்டுவதாகவும் இருக்கிறது).

ஆ. இந்தக் காரியத்தைக் குறித்து, அவருடைய மலைப்பிரசங்கத்திலும், கிறிஸ்து விவரிக்கிறார். (மத்தேயு 7:1). மற்றவர்களைக் குற்றப்படுத்தி நியாயந்தீர்ப்பவர்கள், மற்றவர்களைக் குரூரமாக குறைகூறுபவர்கள், நியாயந்தீர்க்கும் மனப்பான்மையுடையவர்கள், ஆகிய இவர்களும் நியாயந்தீர்க்கப்படுவார்கள், மற்றவர்களால் அல்ல. ஆனால் தேவனால் மற்றவர்களுக்கு நியாயாதிபதி நிலையைத் தன்மேல் எடுத்துக்கொள்ளும் சீடன் தேவனுடைய அதிகாரத்தையும், பதவியையும், அபகரித்துக்கொள்கிறவனாக இருக்கிறான் (யாக்கோபு 4:11-12; ரோமர் 14:10-13) இதுவே, ஆதியிலிருந்து சாத்தானுடைய ஆசை (ஏசாயா 14:12-14) எனவே இம்மாதிரியான மனப்பான்மை சாத்தானுடைய ஆசை (ஏசாயா 14:12-14) எனவே இம்மாதிரியான மனப்பான்மை சாத்தானுடையது!

இ. மற்றவர்களை நியாயந்தீர்த்து, குற்றப்படுத்தி சபிப்பதற்குப் பதிலாக, நாம் "ஆசீர்வதிக்க" வேண்டும். (செழிப்பாக விருத்தியடைய, ஈவுகளைப்பெற, ஆரோக்கியத்திற்காக, சமாதானத்திற்காக, ஞானம், ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் நீண்ட ஆயுளுக்காக, தனிநபர்கள், குடும்பங்கள், பட்டணங்கள், அரசாங்கங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகிய இவைகளுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்) (உபாகமம் 30:19-20)

நியாயந்தீர்த்தலும் கொடுத்தலும்
லூக்கா 6:37-38

ஈ. வசனம் 37 "அப்பொழுது, நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்" நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்காவிட்டால், தேவனும் நம்மை நியாயந்தீர்க்கமாட்டார். இங்கு கூறப்படுவது என்னவென்றால், நாம் உண்மையாக மனந்திரும்பியிருந்தால், மற்ற விசுவாசிகளை (அல்லது அவிசுவாசிகள்) வழக்கமாகக் குற்றம் கண்டுபிடித்து, நியாயந்தீர்க்க மாட்டோம். தேவனுக்கு விரோதமான நம்முடைய பாவம் மற்றும் முரட்டாட்டம் ஆகிய இவற்றின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்பட மாட்டோம் (கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தினால்) என்பதை நாம் ஒரு முறை அறிந்து கொண்டோமானால், நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கும் அளவிற்குத் திறமையும், தகுதியும் உடையவர்கள் அல்ல என்று முடிவு செய்துவிடுவோம்.

உ. நாத்தானுடைய கதையில் கூறப்பட்ட ஐசுவரியவானை நியாயந்தீர்த்து, குற்றப்படுத்தியபோது, தாவீது இதை அறிந்து கொள்ளமுடிந்தது. (2 சாமுவேல் 12:1-14) அவன் தன்னை மன்னிக்கும் நற்பயனைப் பெற்றிருந்தான்!

ஊ. வசனம் 37 "மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்". "ஆக்கினைக்குள்" என்றால், எரித்து தரைமட்டமாக்குவது (ஒரு வீட்டைப்போல்) முழுவதும் அல்லது அடியோடு குற்றப்படுத்துவது என்று பொருள்படும்.

அவனுடைய அயலானை நியாயந்தீர்க்கும் ஒருவனுடைய மனதில் நடைபெறும் காரியங்களில் இது ஒரு பாகம்! எரித்துத் தரைமட்டமாகக்கப்பட்ட ஒரு வீடுபோல அவர்கள் அழிக்கப்படவேண்டும், முற்றிலும் எரிக்கப்படவேண்டும் என்று நீ கூறுகிறாய். (மனதில்) உன்னுடைய அயலானை நீ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காவிட்டால் தேவன் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டார். (உன்னை நரக அக்கினியில் முற்றிலும் அழித்துப் போடமாட்டார்). அடுத்தபடியாக நியாயந்தீர்ப்பது மற்றும் ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதுமான ஆவி, உண்மையாக மறுபடியும் பிறந்தவர்கள், தேவனுக்கு விரோதமாக அவர்களுடைய பாவமும், முரட்டாட்டங்களும் மன்னிக்கப்பட்டவர்களுமாயிருக்கிறவர்களிடத்தில் இருக்காது. இது தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஜீவிப்பது!

எ. வசனம் 37 "விடுதலை பண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள்." "விடுதலைபண்ணுவது" என்றால், ஒருவனைக் கட்டவிழ்த்து விடுவது, (நீதிமன்றத்தில் நடைபெறுவதுபோல்) அவர்களை விடுவிப்பது, தள்ளிவிடுவது, அல்லது உன்னைத் தவறாக நடத்தியவர்களை மன்னித்துவிடுவது நியாயந்தீர்த்து, ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதற்கு பதிலாக, மன்னித்துவிடுவதையே (கட்டவிழ்த்து, தண்டனையிலிருந்தும், குற்றத்திலிருந்தும் விடுவிப்பது) கிறிஸ்து அவருடைய சீடர்களிடம் எதிர்பார்க்கிறார்! இது நாம் பரமபிதாவிற்கு விரோதமாக செய்தவைகளிலிருந்து மன்னிக்கப்படுபவை பலனாகத் தருகிறது! (விடுதலையாக்கப்படுவது, கட்டவிழ்க்கப்படுவது, தண்டனை நீக்கப்பட்டு மன்னிக்கப்படுவது, மத்தேயு 6:14) நாம் இரட்சிக்கப்பட்ட பிறகு, நம்முடைய பரமபிதாவிற்கு விரோதமாகச் செய்த பாவங்களை இது குறிக்கும். (1யோவான் 2:1-2; 1:9)

நியாயந்தீர்த்தலும் கொடுத்தலும்

லூக்கா 6:37-38

2. கொடுங்கள், உங்களுக்கும் கொடுக்கப்படும். (6:38)

அ. "கொடுங்கள்," "கொடுப்பது" என்றால் உன்னிடத்தில் உள்ள ஏதாவதொரு பொருளை, மற்றொருவருக்கு கிரயம் அல்லது பதிலுக்கு ஒன்றை பெற்றுக்கொள்ளாமல், கைமாற்றம் செய்வது, பரிசாக கொடுப்பது என்று பொருள்படும்.

ஆ. "உங்களுக்குக் கொடுக்கப்படும்" இது தொடர்பாக விலைமதிப்புள்ள, மேன்மையானதொன்றை நாம் பெற்றுக்கொள்ளுவோம் என்பதை இது நிச்சயப்படுத்துகிறது. நமக்குக் கிடைக்குப்போகும் வெகுமதி மற்றமனிதர்களிடமிருந்து அல்ல தேவனிடமிருந்து வருகிறது. அவர் ஒரு சமயம் நமக்குக் கொடுக்க மனிதர்களை பயன்படுத்தலாம். ஆனால் அந்த ஈவு அவருக்குச் சொந்தமானதிலிருந்தே வருகிறது!

இ. மலைப்பிரசங்கத்தில், இயேசு இவ்வாறு நமக்குக் கூறுகிறார்: "நீயோ தர்மஞ்செய்யும் போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்." (மத்தேயு 6:3-4) "பலனளிப்பார்" என்ற வார்த்தை இந்த வேத பாகத்தில், உனக்கு அற்புதமானவற்றை நடப்பிப்பார், உனக்கு வெகுமானம் தருவார், கொடுப்பார், அதிகம் கொடுப்பார், உள்ளடங்கக் கொடுப்பார், மேலும் தருவார், திரும்ப கொடுப்பார்!

ஈ. இந்தக் காரணத்தினால்தான் பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாய் விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக் கடவோம்." (கலாத்தியர் 6:10) மற்றும் கொரிந்திய விசுவாசிகளுக்கு, இவ்வாறு அவருடைய வார்த்தைகள் இருக்கிறது: "அவனவன்... தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்." (எருசலேமிலுள்ள சபைக்காக) (1 கொரிந்தியர் 16:2-3; எபிரெயர் 6:10)

3. கொடுப்பதற்கு எந்த அளவை நீங்கள் பயன்படுத்துகிறீர்களோ, அதுவே நீங்கள் பெற்றுக்கொள்வதைத் தீர்மானிக்கும் (6:38)

அ. "அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்." ஒரு "நல்ல" அளவு நாம் பயன்படுத்துவதற்கு மேன்மையானதும் அழகானதுமாயிருக்கும். நல்ல பயனைக்கொடுக்கும் ஒன்று! "அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்" என்பது, வெளி ஆடையிலுள்ள மடிப்பில் அல்லது பையில் (இடுப்பைச்சுற்றியுள்ள பட்டை அல்லது கச்சை (பெல்ட், **Belt**) மீது தொங்கும் ஆடையினாலானது) தானியத்தைப் போடுவதைக் குறிக்கும். இந்தப் பையில் தானியத்தை அமுக்கிக் குலுக்கி, மேலேயிருந்து தானியம் நிரம்பி வழியும்வரை தொடர்ந்து கொட்டப்படும்! நாம் மற்றவர்களுக்கு இரகசியமாகக் கொடுக்கும்போது, இவ்வாறாக நமது பரலோகத் தந்தை நமக்குக் கொடுக்கிறார்!

ஆ. "நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்".

நியாயந்தீர்த்தலும் கொடுத்தலும்

லூக்கா 6:37-38

ஈ. நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுப்பது, அமுக்கிக்குலுக்கி, சரிந்து விழும்படி இருக்குமானால், அப்பொழுது உங்கள் பரமதந்தையிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்வதும் அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி இருக்கும்! "நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ?" என்றால், நீ கொடுப்பதற்கு பயன்படுத்தும் பாத்திரத்தின் வடிவமைப்பை இங்கு குறிக்கிறது." நாம் பரமபிதாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஈவு ஆவிக்குரியதா அல்லது உலகப்பொருளா என்றும் சரீரத்திற்கு அடுத்ததா என்றும் நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை இரண்டையும் குறிக்கலாம்!

இ. முக்கிய குறிப்பு: நீ பயன்படுத்தும் பாத்திரத்தின் அளவு, (பாகம்) (நீ கொடுக்கும் அளவு, உன்னுடைய வரவுக்குத்தக்கதாக) தேவன் உனக்குக் கொடுக்கப்பயன்படுத்தும் பாத்திரத்தின் அளவை (பாகத்தை) நிர்ணயிக்கும்.

ஈ. எப்படியிருப்பினும், நாம் கொடுத்தலில் ஆவிக்குரிய ஞானம் பயன்படுத்தப்பட வேண்டும், நமக்கும், நமது குடும்பங்களுக்கும் மட்டும் போதுமான அளவு மட்டும் நமக்கு இருக்குமானால், நாம் தேவையிலிருப்பவர்களுக்கு கொடுக்க முடியாது. நாம் நம்முடைய தசமபாகத்தை மட்டும் கொடுத்தால் அது நல்லது நாம் மற்றவர்களுக்கு சிறிதளவே கொடுக்கக்கூடுமானால், நாம் பயன்படுத்தும் பாத்திரமும் சிறிதாகவேயிருக்கும். ஆனால், தேவன் நமக்குள்ளவற்றிற்கு ஏற்றாற்போல், நாம் கொடுப்பதைப் பார்க்கிறார், அதற்கேற்றாற்போல், அதன் அடிப்படையில் பலனளிக்கிறார்! அது, பெரிய அளவாகக் காணப்படும், அதற்கேற்றாற்போல் ஈவுகளைக் கொடுப்பார்.

அதிகமாகப் பெற்றிருப்பவர்கள், அவர்களுக்குள்ளதற்கு ஏற்றாற்போல் கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். (1 தீமோத்தேயு 6:17-18)

முடிவுரை

அ. தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஜீவிப்பது நமக்குள்ளதற்கு ஏற்றாற்போல் மற்றவர்களுக்குக் கொடுப்பதும், நமக்கு விரோதமாக தீங்கிழைப்பவர்களை மன்னிப்பதும், கிறிஸ்துவின் நல்ல சீடர்களாக வாழும் ஜீவியத்தின் ஒரு பாகம். இதில் நியாயந்தீர்ப்பதும், கண்டனம் செய்வதும் மன்னிக்க முடியாமல் மனக்கசப்பை மனதில் பேணிவைப்பதும் சேர்க்கப்படமாட்டாது.

இயேசு யவீரின் குமாரத்தியை உயிரோடு எழுப்புகிறார்.

லூக்கா 8:40-42, 49-56 மத்தேயு 9:13-26; மாற்கு 5:22-43)

முன்னுரை

அ. ஒரு சாத்தியமற்ற சூழ்நிலையில், சுகமளிக்கும் ஊழியத்தைச் செய்ய இயேசு தீர்மானித்தபின் அவர், அவருடைய மனதை மாற்றமாட்டார்.

ஆ. சீமோன் பேதுருவின் சொந்த ஊராகிய கப்பர்நகூமில், இயேசு தங்கியிருந்து ஊழியம் செய்து வந்தார். கலிலேயாக் கடலைக் கடந்து, பிசாசுபிடித்த மனிதனைச் சந்தித்த கெனசரேத்து நாட்டிற்கு வந்தார். அந்த மனிதனிடமிருந்த பிசாசுகளைத் துரத்தினதற்குப் பின், பன்றிக் கூட்டத்திற்கு நேரிட்ட சம்பவத்தைக் கண்டு அந்த மக்கள் பயந்து, இயேசுவை அங்கிருந்து போகும்படியாகக் கேட்டுக் கொண்டனர். *(8:22, 26, 37;* மத்தேயு *8:28, 34).* கப்பர்நகூமிற்கு திரும்பினபோது, அவருக்காக எதிர்பார்த்துக்கொண்டிருந்த திரள்கூட்டமான மக்களால் வரவேற்கப்பட்டார். அச்சமயத்தில்தான், யவீரு என்ற ஜெப ஆலயத்தலைவன், மரிக்கும் தருவாயில் இருந்த அவனுடைய மகளுக்கு உதவிசெய்யுமாறு, அவரிடம் வந்து வேண்டுதல் செய்தான்.

இ. இது, உண்மையில் இரண்டு குணமளிக்கும் சம்பவங்களின் விளக்கச் சுருக்கம். யவீரின் மகளுக்கு உதவிசெய்ய சென்று கொண்டிருக்கும் வழியில், பன்னிரண்டு வருடகாலமாக பெரும்பாடுள்ள ஒருபெண் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு உடனடியாகக் குணமாக்கப்பட்டாள்.

இந்த இரண்டு சம்பவங்களும், சுகமளிப்பதற்கும், மரித்தோரை உயிரோடெழுப்புதற்கும் இயேசுவுக்கு இருந்த அதிகாரத்திற்குச் சாட்சியாயிருக்கிறது.

வாழ்க்கையில் எதிராகவரும் கடூரமான மேற்கொள்ளக் கூடாத சூழ்நிலையில் வெற்றிபெறும்போது, ஞானமுள்ளவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து பணிந்து கொள்வான். (8:40-42)

அ. வசனம் 40. "இயேசு திரும்பி வந்தபோது ஜனங்களெல்லாரும் அவருக்காகக் காத்திருந்தபடியால், அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள்". கலிலேயா பிரதேசத்துக் கடலுக்கு (கப்பர் நகூமில் இருந்த) அப்பால் இருந்த கெனசரேத்து நாட்டிலிருந்து இயேசு, திரும்பி வந்து கொண்டிருந்தார். பிசாசுகளை விரட்டியது மற்றும் அதை அடுத்து, அந்தப் பிசாசுகள் பிடித்த பன்றிக் கூட்டம் கடலில் மூழ்கியது ஆகிய இச்செய்திகள், அவர் திரும்பி, கப்பர் நகூமை அடைவதற்கு முன்பாகவே, அங்கு வந்து எட்டியது. கப்பர் நகூமில் இயேசுவின் புகழோடு, இதுவும் சேர்ந்து, மக்களெல்லாரும் அவர் திரும்பிவரும்போது ஆவலோடு காத்திருந்து சந்தோஷத்தோடு ஏற்றுக் கொள்ளக் காரணமாயிருந்தது.

ஆ. வசனம் 41. "அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து ......" "ஜெபஆலயத்தலைவன்" என்றால், உள்ளூர் ஜெபஆலயத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஒரு பொதுமனிதன். அவன் சாதாரணமாக, சமுதாயத்தில் யாவரும் அறிந்த ஒரு மனிதனாயிருப்பான். அவனுடைய பொறுப்புகள்,

1. ஜெப ஆலயக் கட்டடத்தைப் பராமரிப்பது.

இயேசு யவீரின் குமாரத்தியை உயிரோடு எழுப்புகிறார்.

லூக்கா 8:40-42, 49-56 மத்தேயு 9:13-26; மாற்கு 5:22-43)

2. ஆராதனைக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதும் அதில் பங்கு கொள்ளவேண்டியவர்களைத் தெரிந்து கொள்வதும். (ஜெபம், வேதவாசிப்பு, பிரசங்கம் ஆகியவற்றை நடத்துபவர்கள்)

இ. யவீரு இயேசுவின் பாதத்தில் விழுந்தான் என்று வேதம் கூறுகிறது, அவன் முன்னால் சென்று இயேசுவின் பாதத்தில் முகங்குப்புற விழுந்தான், என்று பொருள்படும். அவன் அவர் முன் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தான்.

ஈ. வசனம் 41-42. "பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக்கொண்டான்". "வேண்டிக் கொண்டான்" என்றால், ஒருவரை நோக்கிக் கூப்பிடுவது, அருகில் வரும்படி ஊக்கமாக அழைப்பது, சத்தமிட்டுக் கூப்பிடுவது, அழுகையுடன், உண்மையாகக் கெஞ்சிக் கேட்பது, என்று பொருள்படும். யாவரும் அறிந்த முக்கியமான ஜெப ஆலயத்தலைவன், முகங்குப்புற இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவனுடைய வீட்டிற்கு வந்து, அவனுடைய குமாரத்தியை குணமாக்கும்படி, இயேசுவை நோக்கி, சத்தமிட்டுக் கதறி, ஆர்வமுடன் கெஞ்சி வேண்டுதல் செய்கிறான். அவன் வேண்டிக் கொண்டதை மக்களெல்லாரும் கேட்கும் அளவிற்கு அதிக சத்தமாக இருந்திருக்க வேண்டும். இந்த சிறு பெண்,

1. அவனுடைய ஒரே மகள்.

2. பன்னிரண்டு வயதே நிரம்பியவள்.

3. அவளுடைய மரணத்திற்கேதுவான நிலை, ஜெப ஆலயத்தலைவனுக்கு நம்பிக்கையற்ற மிக துக்கத்தைக் கொடுத்தது.

உ. இது ஒரு சாத்தியமற்ற சூழ்நிலையை உண்டாக்கியது! அவனுடைய குமாரத்தி சுகமடையும்படியாக, மனிதரால் செய்யக் கூடிய எல்லாவற்றையும், ஜெப ஆலயத்தலைவன் உண்மையாகவே முயற்சி செய்து பார்த்துவிட்டான். உள்ளூர் போதகரினால் (ரபி) அவளை எண்ணெய் பூசி ஜெபிக்கவும், அவன் ஒரு சமயம் அவளுக்கு செய்திருப்பான். வியாதியஸ்தர்களை சந்தித்து, அவர்களுடைய கரத்தை அவர்கள் மீது வைத்து எண்ணெய் பூசுவது (ஆதிகாலத்தில் சுகவீனத்தை குணமாக்க பயன்படுத்தப்பட்டது மத்தேயு 25:43) யூத மூப்பர்களின் பூர்வகால வழக்கம்.

ஜெப ஆலயத்தலைவன் இயேசுவிடம், "என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள். அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள் மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள்'' என்று கூறினான் என்று, மாற்கு சுவிசேஷத்தில் எழுதப்பட்டுள்ளது (மாற்கு 5:23)

2. சுகமளிப்பது கூடாத காரியம் என்று சூழ்நிலையில், இயேசு உதவிசெய்ய தீர்மானித்துவிட்டபின், அவருடைய மனதை மாற்றமாட்டார். 8:49-56.

அ. வசனம் 49 "அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவனை (யவீரிடம்) நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்த வேண்டாம், என்றான்"

இயேசு யவீரின் குமாரத்தியை உயிரோடு எழுப்புகிறார்.

லூக்கா 8:40-42, 49-56 மத்தேயு 9:13-26; மாற்கு 5:22-43)

பெரும்பாடு வியாதியாயிருந்து குணமாக்கப்பட்ட ஸ்திரீயிடம் இயேசு இன்னமும் பேசிக்கொண்டிருந்தார். அவர், அவளிடம், "மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ," என்றார். யவீரின் வீட்டிலிருந்து வந்த இந்த மனிதன், இயேசுவின் ஆளுகை, மரணத்திற்கும், கல்லறைக்கும் அப்பாலும் விரிவடைந்து தொடர்ந்து இருக்கிறது என்பதை அறியவில்லை. அவனுக்கு இயேசுவின் மீது விசுவாசம் இல்லாதது போலவே, ஆவிக்குரிய விளங்கிக் கொள்ளுதலும் இல்லை.

ஆ. வசனம் 50. "இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள், என்றார்". "இயேசு அதைக் கேட்டு" யவீரின் வீட்டிலிருந்து செய்தியைக் கொண்டு வந்தவன், யவீரின் குமாரத்தி மரித்துப்போனாள் என்று கூறியதை இயேசு கேட்டதைக் குறிக்கும். இயேசு இதைக் கேட்ட போது, அவர் அவனிடம், (அவர் முன்னால் நின்று கொண்டிருந்த யவீரிடம்) இவ்வாறு கூறினார்.

1. பயப்படாதே, - சிறு பிள்ளைக்கு நடந்ததைக் குறித்து, யவீரு பயப்படவோ அல்லது திகிலடையவோ கூடாது என்று இது பொருள்படும்.

2. "விசுவாசமுள்ளவனாயிரு" - கவலைப்படாமல் அவரைச் சார்ந்திரு, இயேசுவின் மீது விசுவாசமும் நம்பிக்கையுள்ளவனாயிரு; இயேசுவிடம் சிறு பெண்ணின் ஆவிக்குரிய மற்றும் சரீர நன்மைக்காக நம்பிக்கையுடன் கொடுத்து விடு; அவருடைய கவனிப்புக்கு அவளை ஒப்படைத்துவிடு என்று இது பொருள்படும். இயேசு, யவீரிடம் கூறியது, இவ்வாறு தைரியப்படுத்தி சொல்வது போல் உள்ளது: "விசுவாசத்தில் ஒரு அடி எடுத்துவை, விசுவாசத்தைக் கிரியையில் காட்டு; உன் விசுவாசத்தை என் மீது வை."

3. "அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள்" சிறு பெண் பாதுகாக்கப்படுவாள், அவள், இயேசுவினால் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பத்திரமாயிருப்பாள், இயேசுவினால் அவள் வாழ்க்கை தீமையிலிருந்து காக்கப்படும். அவள் சரீரத்தில் பூரண சுகம் உண்டாகும்.

இ. உண்மையில், யவீருக்கு வேறு எதையும் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. அவன் சமுதாயத்தில் முக்கியமான யாவரும் அறிந்த மனிதனாக இருந்த போதிலும், அவனுடைய சிறு பெண், சுகமாக்கப்பட, அவனுடைய விசுவாசத்தை இயேசுவில் வைக்க வேண்டிய அவசியமாயிற்று. தெய்வீக கிரியையே அவனுடைய ஒரே நம்பிக்கை. பன்னிரெண்டு வயதுள்ள ஒரே ஒரு குழந்தை மரித்துவிட்டது.

ஈ. வசனம் 51. "அவர் வீட்டில் வந்தபோது பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும், பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல் ----" இயேசுவினுடைய பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின் உள்வட்டத்தில், பேதுருவையும், யாக்கோபும் யோவானும் தொடர்ந்து காணப்படுகின்றனர். (மத்தேயு 17:1, 26:37) சிறு பெண்ணின் நன்மையைக் கருத்தில் கொண்டு, அது சிறு குழுவாக அமைக்கப்பட்டது, அவள் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு, அவள் ஆவி அவள் சரீரத்திற்குள் வரும்போது, அவள் அறிமுகமில்லாத கூட்டத்தின் மத்தியில் தான் இருப்பதாகப் பார்க்கக்கூடாது.

இயேசு யவீரின் குமாரத்தியை உயிரோடு எழுப்புகிறார்.

லூக்கா 8:40-42, 49-56 மத்தேயு 9:13-26; மாற்கு 5:22-43)

உ. வசனம் 52-53. "எல்லாரும் அழுது அவளைக்குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு "அழுது துக்கங்கொண்டாடுவது" என்றால், சத்தமிட்டு துக்கத்தை வெளிப்படுத்துவது. அங்கிருந்த மக்கள் அயலகத்தாரும், உறவினர்களும், ஜெப ஆலயத்தின் மற்ற குடும்ப நண்பர்களுமாவார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், துக்கங்கொண்டாடுவதைத் தொழிலாகக் கொண்ட "மாரடிப்பவர்கள்" இருப்பது போல், இங்கும் ஒரு சமயம் இருந்திருக்கலாம் (7:12). எனவே அழுது துக்கங்கொண்டாடுகிறவர்களின் சத்தம் மிகப்பலமாகவும், தொடர்ச்சியாகவும் இருந்திருக்கும். எப்படியிருப்பினும், இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கி இவ்வாறு கூறினார்:

1. "அழாதேயுங்கள்

2. அவள் மரித்துப் போகவில்லை"

ஊ. "நீங்கள் அழுகிறதை நிறுத்துங்கள், சிறு பெண் நித்தியமாக மரித்துப் போகவில்லை" (யோவான் 11:11-14) என்று பொருள்பட கூறினார். நாம் மரணம் என்று கருதுவது, இயேசுவுக்குத் தற்காலிகமாக, சரீரத்தை விட்டு ஆவி பிரிந்து செல்வதாகும். (அப்போஸ்தலர் 7:60) ஆனால், அந்த சிறுபெண் மரித்துவிட்டாள் என்று அறிந்திருந்தபடியினால் மக்கள் இயேசுவைப் பார்த்து இகழ்ச்சியாகச் சிரிக்க இது காரணமாயிற்று.

எ. வசனம் 54-55. "அவளுடைய கையைப் பிடித்து, பிள்ளையே எழுந்திரு, என்றார்." அவளுடைய ஆவி திரும்ப வந்தது. அவள் உடனே எழுந்து உட்கார்ந்தாள். யாவரும் அறிய இயேசு, மூன்று அப்போஸ்தலர்கள் மற்றும் பிள்ளையின் தாயும் தகப்பனும், சிறு பெண் படுத்திருந்த அறைக்குள் சென்றனர். இயேசு சிறு பெண்ணிடம் பேசின போது, அவளுடைய ஆவி அவளுக்குள் திரும்ப வந்தது. அவள் காலூன்றி நின்றாள். ஒரு அற்புதம் அவர்கள் கண்களுக்கு முன் நடைபெற்றது. இயேசு பெற்றோரிடம் அச்சிறு பெண்ணிற்கு ஏதாவது ஆகாரம் சாப்பிடும்படி கொடுக்கக் கூறினது, அற்புதம் நிகழ்ந்ததை மேலும் உறுதிப்படுத்திற்று.

ஏ. ஒரு சாத்தியமற்ற சூழ்நிலையில், சுகமளிக்கும் ஊழியத்தைச் செய்ய இயேசு தீர்மானித்தப்பின், அவர் தம்முடைய மனதை மாற்றமாட்டார். மனிதர்கள் அவருக்கு முன்பாகச் சாஷ்டாங்கமாய் விழுந்து, ஊக்கமாக, நம்பிக்கையிழந்த நிலையை உணர்ந்து ஆழ்ந்த துக்கத்துடன் கிருபைக்காக அவரை நோக்கிக் கூப்பிடும்போது சுகமளித்து உதவிசெய்ய தீர்மானிக்கிறார்.

1. குஷ்டரோகியான ஒரு மனிதன் அவருக்கு முன்பாகப் பணிந்து கேட்கிறான். (மத்தேயு 8:2)

2. இரண்டு குருடர்கள் அவர் பின்னால் சென்று, நம்பிக்கையிழந்த நிலையில் துக்கத்துடன், "எங்களுக்கு இரங்கும்" என்று கூப்பிட்டார்கள் (மத்தேயு 9:27)

3. ஒரு கானானிய ஸ்திரி, அவளுடைய பிசாசு பிடித்த மகளுக்காக விடாமல் சத்தமிட்டுக் கூப்பிட்டாள். (15:22)

4. ஒரு மனிதன், அவனுடைய பிசாசு பிடித்த மகனுக்காக, இயேசுவின் முன் முழங்கால் படியிட்டு, கிருபைக்காக கெஞ்சி வேண்டிக்கொண்டான். (17:14-15)

இயேசு யவீரின் குமாரத்தியை உயிரோடு எழுப்புகிறார்.

லூக்கா 8:40-42, 49-56 மத்தேயு 9:13-26; மாற்கு 5:22-43)

5. சீடர்கள், அவர்களுடைய படவு மூழ்கி, அவர்கள் அமிழ்ந்து போய்விட்டார்கள் என்று சத்தமிட்டு அவரை நோக்கி கதறினார்கள். (லூக்கா 8:23-24)

6. சில மனிதர்கள், கூரையில் திறப்புண்டாக்கி, அவர்களுடைய சிநேகிதனை இயேசுவின் முன்னால் இறக்கினார்கள். (மாற்கு 2:4)

ஓ. அந்தச் சிறு பெண்ணின் ஆவி பரலோகத்திலிருந்து திரும்பிவந்து, அவளுடைய சரீரத்தில் பிரவேசித்ததுபோலவே, இயேசு, சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக்கொள்ள வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு நடைபெறும்! (1தெசலோனிக்கேயர் 4:14-17)

ஓ. வசனம் 56. "அவள் தாய் தகப்பன்மார் ஆச்சரியப்பட்டார்கள்". இது அவர்கள் அப்பொழுது அவர்களுடைய கண்களால் பார்த்ததைக் கிரகித்துக் கொள்ள முடியாமல், அவர்கள் வாய் திறந்தவர்களாய் ஸ்தம்பித்து நின்றார்கள், என்று பொருள்படும். அவர்கள் அவர்களுடைய சுயமதியை இழந்தவர்கள்போல் இருந்தனர். நிலை தடுமாறினர், திகைத்து நின்றனர். இயேசுகிறிஸ்துவின் சுகமளிக்கும் மற்றும் உயிரோடு எழுப்பும் ஊழியத்தைக் கண்ட ஒவ்வொருவருடைய பிரதிக்கிரியையும் இவ்வாறே இருக்கும்.

முடிவுரை

அ. கர்த்தராகி இயேசுவின் முன் சாஷ்டாங்கமாய் விழுந்து, கிருபைக்காக கூப்பிடும்போது இயேசு எத்தனை முறையானாலும் சுகமளிக்க அல்லது சாத்தியமற்ற சந்தர்ப்பங்களிலிருந்து விடுதலையளிக்கும் ஊழியத்தைச் செய்ய தீர்மானிக்கிறார்.

ஆ. சாத்தியமற்ற சூழ்நிலையில் ஊழியம் செய்ய அவர் தீர்மானித்துவிட்டால், அவருடைய மனதை அவர் மாற்றமாட்டார்! அவர் வந்து, அவர் என்ன செய்யக்கேட்டுக்கொள்ளப்பட்டாரோ, அதைச் செய்வார்! வானத்திலும் பூமியிலும் அவருக்கு எல்லா அதிகாரமும் இருப்பதினால் சாத்தியமற்ற சூழ்நிலைகளில் அவரால் உதவி செய்ய முடியும். (மத்தேயு 28:18) எப்படி இருப்பினும், மனிதர் அவரில் விசுவாசம் வைத்து, அவரை, அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு, அவர் அவர்களுக்குக் கொடுக்கும் நித்திய ஜீவனை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

பெரும்பாடுள்ள ஸ்திரி

லூக்கா 8:42-48
(மத்தேயு 9:20-22,
மாற்கு 5:24-34)

முன்னுரை

அ. இந்த வேதாகம வரலாற்றின் ஆவிக்குரிய மொத்தக் கருத்து - இயேசுவைத் தொடுவது, அவருடைய சுகமளிக்கும் வல்லமையை வெளிப்படுமாறு செய்து, வேதனையிலிருந்து விடுவிக்கிறது.

ஆ. இது ஒரு நிர்பந்தமான பெண்ணின் கதை. அவள் சரீரப்பிரகாரமான வேதனையை அனுபவித்தும், பன்னிரண்டு வருடகாலமாக இரத்தக் கசிவினால் மெதுவாக அவளுடைய பெலனை படிப்படியாக இழந்தும் வந்தது மட்டுமல்லாமல், அவளுக்கு, குறிப்பாக அவளுடைய இந்த நிலைமைக்கும் பொருத்தமான பழைய ஏற்பாட்டின் நிபந்தனைகளைக் (கற்பனைகள்) கைக்கொள்ள முயற்சித்துப் பாரப்பட்டவளாக இருந்தாள். இதற்கும் மேலாக, அநேக வைத்தியர்களின் பராமரிப்புக்குக் கீழ் அதிக துன்பம் அனுபவித்தவளாகவும், அவளுக்கு உண்டான எல்லாவற்றையும் செலவழித்தபோதிலும், நல்ல நிலைக்கு வருவதற்குப் பதிலாக இன்னும் மோசமான நிலையை அடைந்தவளாயிருந்தாள். (மாற்கு 5:26)

1. நம்பிக்கையிழந்து வேதனையில் இருப்பவர்கள் இயேசுவைத் தொடும்படியாக முயற்சிக்கின்றனர். (8:42-45)

அ. வசனம் 42. "--- அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள்."

"நெருக்கினார்கள்" என்றால், கடல் போன்ற திரளான மக்கள் ஒருவரையொருவர் இடறி மிதிக்கத்தக்கதாக, அமிழ்ந்து மூச்சுத்திணறி மரிக்க வேண்டிய நிலையில், இயேசுவும் அவருடைய சீடர்களும், அப்பொழுதுதான் கப்பர் நகூமிற்கு (சீமோன் பேதுருவின் சொந்த ஊர் அங்குதான் நிச்சயமாக இயேசு தங்கியிருந்திருக்க வேண்டும்) கெனசரேத்து நாட்டிலிருந்து வந்திருந்தனர். இந்த ஆதிகாலத்துப் பட்டணத்தின் வீதிகள் மிகக் குறுகலாக இருந்தபடியால், அவரைப் பின்பற்றிவந்த திரள்கூட்டமான மக்களினால் இயேசு நெருக்கப்பட்டார்.

ஆ. வசனம் 43. "அப்பொழுது பன்னிரண்டு வருடமாய்ப் பெரும்பாடுள்ளவளாயிருந்த ---" இந்த பெரும்பாடு (இரத்தக் கசிவு) இரத்தக் குழாய் உடைவதால் ஏற்படுவது, கர்ப்பப்பையில் ஏற்படும் நோய். இந்த இரத்தக் கசிவு, நிற்காமல் பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து காணப்பட்டது! இந்தப் பெண் சரீரப்பிரகாரமாக நம்பிக்கையிழந்த வேதனையான நிலையில் இருந்தாள்.

இ. இதில் மிக மோசமான காரியம் என்னவென்றால், அவள், அவளுடைய கணவன், பிள்ளைகள், சிநேகிதர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தாரால் அசுத்தமானவளாகக் கருதப்பட்டு ஒதுக்கப்பட்டிருந்தாள். (லேவியராகமம் 15:19-33) அவள் தேவாலய ஆராதனைகளிலும் பங்கெடுக்க அனுமதிக்கப்பட்டிருக்கமாட்டாள். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இந்தப் பெண் இவ்வாறு வாழ்ந்திருக்கிறாள் என்பதை நினைவுகூர வேண்டும்! "அசுத்தமானவள் என்றால், அழுக்கான, கறைபட்ட, தீட்டான, சடங்காச்சாரப்படி தகுதியற்ற, மாசுபட்ட, அல்லது தோஷமுள்ள சமுதாயம் மற்றும் பக்தி சமயத்தாரால் தள்ளப்பட்டவள்!

பெரும்பாடுள்ள ஸ்திரி

லூக்கா 8:42-48
(மத்தேயு 9:20-22,
மாற்கு 5:24-34)

ஈ. மாற்குவின் விளக்கக் குறிப்பில், அந்தப் பெண், ஜனக்கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு அந்த வழியாக உள்ளே சென்று, (அவளுடைய பலவீனமான நிலையில், இயேசுவை சுற்றி பெருங்கூட்டம் நசுக்கிக் கொண்டிருக்கும்போது) அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். இந்த ஸ்திரி, இயேசுவைப் பற்றியும் அவருடைய சுகமளிக்கும் ஊழியத்தைக் குறித்தும் தெளிவாகக் கேள்விப்பட்டிருந்தாள். மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்ட செய்தி, ஒரு சிநேகிதி மூலமாக அல்லது உறவினர் மூலமாக அவளுக்குச் சொல்லப்பட்டிருக்கவும் தருணம் உண்டு. (மத்தேயு 11:28-30)

உ. வசனம் 44. அந்த ஸ்திரி இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டவுடனே இரத்தக் கசிவு நின்று போயிற்று: "அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை, அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்". (மாற்கு 5:29) இயேசுவினுடைய வஸ்திரம் நீண்ட சதுரவடிவில், ஒவ்வொரு கரையின் ஓரத்திலும் குஞ்சங்கள் இணைக்கப்பட்டு (நீல நிற நூல்களால் ஆனது) அது இடது தோள் பட்டை மேலிருந்து பின்னால் கீழே தொங்கும். (எண்ணாகமம் 15:38-39) அவள் ஒரு சமயம் இந்த வஸ்திரத்தின் குஞ்சத்தைத் தொட்டிருக்கலாம். (நீண்ட வெளி ஆடையின் ஓரத்தி, கூட்டம் அதிகமாக இருந்தபடியால் தொட முடியாதபடியால்) அவள் குணமாக்கப்பட்டாள். இரத்தக் கசிவிலிருந்து பூரணமாகச் சுகமானாள்.

ஊ. வசனம் 45. "என்னைத் தொட்டது யார்?" என்று இயேசு கேட்டார். எல்லோரும் அதை மறுத்தபோது பேதுரு இயேசுவிடம், "ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே---" மாற்கு இவ்வாறு கூறும்போது, இந்த வசனத்தை மேலும் தெளிவாக விளங்கும்படியாகக் கூறுகிறார்: "அவருடைய சீடர்கள் அவரை நோக்கி திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை, நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே, என்றார்கள்".

2. நம்பிக்கையிழந்த நிலையில் உள்ளவர்கள், இயேசுவைத்தொடும்போது குணமளிக்கும் வல்லமை வெளிப்படுகிறது 8:46-48

அ. வசனம் 46. "அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு, என்றார்". இயேசு மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடந்து சென்றபோது, அநேகர் அவரை இடித்துக் கொண்டுபோயிருக்கக்கூடும். ஆனால் ஒருவர், ஒரு நோக்கத்தோடு அவரை தொட்டிருக்கிறார், என்று அவர் அறிவார். ஒருவர் அவரை உரசி செல்வதற்கும், அவரை நெருங்கிச் சென்று ஒரு நோக்கத்தோடு அவரைத் தொட்டதற்குமுள்ள வேறுபாடு இயேசுவுக்குத் தெரியும்!

ஆ. அவருடைய சரீரத்திலிருந்து வல்லமை புறப்பட்டுச் சென்றதை அவர் உணர்ந்தபடியால், ஒருவர், அவரைத் தொட்டதை அறிந்தார். "வல்லமை" என்றால் தேவனுடைய அற்புதமான சக்தி, இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமை, மிகுந்த அதிகாரம், வல்லமை மற்றும் பெலன், வல்லமையான அதிசய கிரியை, ஒரு அதிசயம், என்று இங்கு பொருள்படும்.

பெரும்பாடுள்ள ஸ்திரி

லூக்கா 8:42-48
(மத்தேயு 9:20-22,
மாற்கு 5:24-34)

இயேசு, "வல்லமை என்னிலிருந்து புறப்பட்டுச் சென்றது" என்று கூறும் போது, அவருக்குள்ளிருந்து (அவரிடமிருந்து, அல்லது சரீரத்திலிருந்து) அது வெளிச்சென்றது என்று பொருள்படும்.

இ. இயேசுவினுடைய இந்த சுகமளிக்கும் அற்புதத்திற்கு முன், இயேசு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் திரும்பினார். (யோர்தான் நதியண்டை தேவ ஆவியானவர் புறாவைப்போல், அவர் மீது இறங்கினார்) என்று லூக்கா நமக்குக் கூறுகிறார். (லூக்கா 4:14) பேதுருவும், நமக்கு இவ்வாறு கூறுகிறார். "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்". (அப்போஸ்தலர் 10:38)

ஈ. இன்று நமது கூட்டத்தில், பரிசுத்த ஆவியானவராக, நம் மத்தியில் பிரசன்னமாயிருக்கிறார். நம்பிக்கையிழந்த நிலையில் அவரை நெருங்கிச் சேர்ந்து அவரைத் தொடுபவர்களை துன்பங்களிலிருந்தும், வியாதிகளிலிருந்து, பலவீனங்களிலிருந்தும் விடுவிக்கவும், சுகமளிக்கவும், அவர் இங்கு இருக்கிறார்.

உ. வசனம் 47. "அப்பொழுது அந்த ஸ்திரி தான் மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கி வந்து, அவர் பாதத்தில் விழுந்தாள்".

அந்த ஸ்திரி ஏன் ஒருவரும் அறியாமல் சென்றுவிட விரும்பினாள்? (மறைந்து, அவள் இருப்பதை மக்கள் அறியாதபடி) ஏனெனில் அவளுடைய வியாதியின் தன்மை அப்படிப்பட்டதாக இருந்தது, மற்றும் அது சம்பந்தமான பழைய ஏற்பாட்டுச் சட்டமும் அவ்வாறு இருந்ததினால் இருக்க கூடும்! அவள் குற்றம் செய்தவள் போலும், அவமானமும் அடைந்தவள் போலும் உணர்ந்தாள்! இக்காரணத்தினால் தான் அவள் திரும்பவந்து இயேசுவின் முன் "நடுங்கி" (திகிலடைந்து, பயப்பட்டு) முகங்குப்புற விழுந்தாள்! அவர் அவளுடைய சுகமாக்கப்பட்ட அனுபவத்தைத் தன்னை விட்டு எடுத்துவிடக்கூடும் என்று அவள் நினைத்திருக்கலாம்?

ஊ. வசனம் 47. "...தான் அவரைத் தொட்ட காரணத்தையும், உடனே தான் சொஸ்தமானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக, அவருக்கு அறிவித்தாள்". அந்தப் பெண் விடுதலையாக்கப்பட இயேசு விரும்பினார். அவள் நீண்ட காலமாக மறைவிலும் அவமானத்திலும் போதுமான அளவு இருந்திருக்கிறாள்! அவள் தேவாலயத்திலிருந்து, சிநேகிதர்கள், அயலகத்தாரிடமிருந்தும் பழைய ஏற்பாட்டின் சடங்காச்சார சட்டங்களில் கூறப்பட்டவைகளை நீண்ட நாட்களுக்கு போதுமான அளவு பின்பற்றியுள்ளாள்! எனவே, அவள் குணமாக்கப்பட்டது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளுவது அவசியம், அவளுடைய சுகம் நிரந்தரமானது என்றும் அவளைவிட்டு நீங்காது என்றும் உறுதிப்படுத்தவும் அவர் விரும்பினார்! அத்துடன் மற்றவர்களுக்கும் இவ்வாறே அவர் செய்யக்கூடும் என்று அவர்கள் அறிந்து கொள்ள, அவர் விரும்பினார்!

எ. வசனம் 48. "மகளே" "மகளே" என்பது இங்கு ஒரு கனிவான சொல். இது உறவையும், கருணையையும் குறித்துக் கூறுகிறது. அந்த ஸ்திரி;

பெரும்பாடுள்ள ஸ்திரீ

லூக்கா 8:42-48
(மத்தேயு 9:20-22,
மாற்கு 5:24-34)

இந்த முக்கியமான வேளையில், கேட்கத் தேவையான சரியான வார்த்தை. நாம் தொல்லை நிறைந்த நிலையில் இருக்கும் போது அல்லது கர்த்தரின் தொடுதல் அவசியமான, சமயத்தில், நாம் ஒவ்வொருவரும் கேட்க விரும்பும் சொல் இதுவே.

ஏ. வசனம் 48. "...... உன் விசுவாசம் உன்னை இரட்சித்து? சமாதானத்தோடே போ, என்றார்". "விசுவாசம்" (இயேசு உனக்கு உதவிசெய்ய முடியும் என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நம்புவது. நான் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று கூறியவர் மீது, சார்ந்திருப்பது) கீழ்க்கண்டவற்றைக் கொடுக்கும்.

1. சுகமளிக்கும் - நம்மைப் பாதுகாக்கும், சரீரப்பிரகாரமாக பூரணமாக இருக்கச் செய்யும், நம் வாழ்க்கையை தீங்கு அணுகாமல் காக்கும்.

2. சமாதானம் - ஆவியிலும், வாழ்க்கையிலும் அமைதலாக, இளைப்பாறச் செய்யும்.

முடிவுரை

அ. இயேசுவைத் தொடுவது, அவருடைய சுகமளிக்கும் வல்லமையை வெளிப்படப்பண்ணுகிறது மற்றும் நம்முடைய சரீரம் மற்றும் உணர்ச்சிகளில் படும் வேதனைகளிலிருந்து நம்மை விடுவிக்கிறது.

இது, நம்மை பாதுகாத்து, பூரண சுகத்துடன் சரீரத்தைக் காத்துக்கொள்கிறது, அத்துடன் நம்முடைய ஆவி மற்றும் வாழ்க்கை அமைதலாக இளைப்பாறச் செய்கிறது.

ஆ. இந்த ஸ்திரீ திரள் கூட்ட மக்களைத் தள்ளி, உள்ளே சென்று இயேசுவைத் தொட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை! இன்று, இங்கே இந்தப் பெண்ணைப்போல், தள்ளி முன்சென்று, அவர்களை உபத்திரவப்படுத்தும் காரியங்களிலிருந்து குணமாக்கவும், விடுதலை - பெறவும், இயேசுவைத் தொடவேண்டும் என்ற உணர்வுடன் அநேகர் இருப்பீர்கள்.

இ. இன்று, இந்த நம்முடைய கூட்டத்தில் நம்பிக்கையிழந்த நிலையில் தம்மை நெருங்கி தொடுபவர்களை சுகமாக்கவும், துன்பத்திலும், வியாதி வறண்ட நிலையிலிருந்தும் விடுதலையாக்க அவர் பரிசுத்த ஆவியானவராக இங்கு பிரசன்னமாயிருக்கிறார்.

இயேசுவை பின் செல்பவர்கள் செலுத்தும் கிரயம்

லூக்கா 9:57-62 (மத்தேயு 8:19-22)

முன்னுரை

அ. இயேசு, சாலை வழியாகக் கூட்டமான மக்களுடன் நடந்து செல்லும்போது இதைக் குறித்த தர்க்கம் நடைபெற்றது. பின் சென்று கொண்டிருந்தவர்களில் சிலர், அவர்கள் இயேசுவைப் பின்செல்லுபவர்களாக இருக்க ஆயத்தமாயிருப்பதாக அறிவித்தார்கள். ஆகவே கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுவது என்றால் என்ன என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டனரா என்பதை நிச்சயப்படுத்த விரும்பினார். இவ்வாறு கூறியவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஊழியம் செய்யும், ஒருவர் மீதுள்ள பாரம் மற்றும் உரிமையுடன் கேட்கப்படும் கிரயம் இன்னதென்பதை, ஒரு வேளை அவர்கள் அறியாமலிருந்திருக்கலாம்.

1. இயேசுவைப் பின்பற்றும் முன்பாக அதற்கான கிரயத்தைக் குறித்து ஆலோசனை செய்ய வேண்டும். (9:57)

அ. "அவர்கள் வழியிலே நடந்து போகையில்" எருசலேமிற்குப் போகும் வழியில், அவர்கள் சமாரியாவில் இருந்தார்கள். (9:51-53). "நடந்து போகையில்" பணம் குறைவாக இருப்பவர்கள் சாதாரணமாக நடந்து பயணம் செய்தனர். இயேசுவைப் பின்பற்றின அநேகருக்குப் பயணம் செய்யக் கிடைக்கும், இந்த குறைந்த எல்லைக்குட்பட்ட முறை, ஒரு அடையாளமாக இருக்கும்.

ஆ. "ஒருவன் அவரை நோக்கி" "அந்த ஒருவன்", வேதபாரகன் என்று மத்தேயு 8:19 வசனத்தில் சொல்லப்படுகிறது, அவன் இயேசுவை "ஆண்டவரே" என்று அழைக்கிறான். அது போதகர் அல்லது ஆசிரியர் என்று பொருள்படும். ஒரு பரிசேயன் அத்துடன் வேதபாரகன், இயேசுவை அவனுடைய போதகராகவும், ஆசிரியராகவும், அவருடன் இணைந்து இருக்க விரும்புவது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான பரிசேயரும், வேதபாரகர்களும், இயேசுவைக் கொலை செய்ய விரும்பி, தேவதூஷணம் அவர் கூறுவதாகக் குற்றம் சாட்டினார்கள்.

இ. "... நீர் எங்கேபோனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான்." "பின்பற்றி வருவேன்" என்றால், அதே வழியில் நடப்பது, உடன் செல்வது, ஒருவருக்குச் சீடனாவது (கற்றுக்கொள்பவன் - மாணவன்) இந்தக் கூற்று சன்மார்க்க ரீதியில் கவனிக்கத்தக்கது. அதாவது இயேசு நடக்கும் அதே சன்மார்க்க வழியில் (வாழ்க்கை நடை) நடப்பது.

ஈ. மலைப்பிரசங்கத்தில், வேதபாரகர், பரிசேயர்களின் போதனைகளைவிட, இயேசுவின் உபதேசங்கள் மிக உன்னதமானதாக இருந்ததை நாம் பார்த்தோம்:

1. "கொலை செய்யாதிருப்பாயாக" என்பது, "கோபங்கொள்ளாதிருப்பாயாக" என்றாயிற்று.

2. "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்பது "ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்காதே" என்றாயிற்று.

3. "பலவிதமான காரணங்களினிமித்தம் தள்ளுதல் சீட்டைக் கொடு" என்பது, "வேசித்தன முகாந்திரத்தினிமித்தமாத்திர மேயன்றி, மற்ற காரணத்திற்காக மனைவியை/கணவனைத் தள்ளிவிடுகிறவர்கள் விபச்சாரம் செய்கிறார்கள்".

இயேசுவை பின் செல்பவர்கள் செலுத்தும் கிரயம்

லூக்கா 9:57-62 (மத்தேயு 8:19-22)

4. "ஆணையை மீறாதிருப்பாயாக" என்பது, "ஆணையிடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டுமென்றாயிற்று".

5. "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்" என்பது, "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்" என்று மாறிற்று.

6. "பகைஞனைப் பகைப்பாயாக" என்பது, "உன் சத்துருக்களில் அன்பு கூருவாயாக" என்று மாறிற்று. இந்தப் பெரிய ஆழமான ஆவிக்குரிய உள் கருத்துக்கள், ஒரு சமயம், கிறிஸ்துவின் பக்கமாக இந்த வேதபாரகனை இழுத்திருக்கக் கூடும். இயேசு பழைய ஏற்பாட்டின் வேதவாக்கியங்களில் அடங்கிய உள்ளான நோக்கங்களையே ஆதியிலிருந்து போதித்துவந்தார்! *(மத்தேயு 22:37-40)*

உ. ஆகவே, இயேசுவைப் பின்பற்றுவது என்பது சாலை வழியாக அவரோடு செல்வதற்கும் மேலானது. அது இவ்வாறும் பொருள்படும்.

1. அவரை, உன்னுடைய வழிகாட்டியாகவும், போதகராகவும் ஏற்றுக்கொள்வது, அர்ப்பணிக்கப்பட்ட மாணவனாகவும், கற்றுக் கொள்கிறவனாகவும் மாறுவது, இயேசுவின் பாதத்தண்டை அமர்வது.

2. இயேசு வாழ்ந்த அதே வாழ்க்கை நடையில் வாழுவது.

3. நாம் பார்க்கப்போவது போல், இது புறக்கணிக்கப்படுவது, துன்பப்படுவது மற்றும் சிநேகிதர்கள், குடும்பத்திலிருந்தும் பிரிக்கப்படுவது, இத்துடன் உள்ளடங்கும். எனவே, "நீர் எங்கு சென்றாலும், நான் உம்மைப் பின்செல்வேன்" என்று கூறுவதற்கு முன், இந்தக் கிரயத்தைக் குறித்து சிந்தித்துப் பார்ப்பவனை ஞானம் உள்ளவனாகக் கருத இடமுண்டு! *(லூக்கா 14:25-35)*

2. இயேசுவைப் பின்பற்றினால், அதன் விளைவு புறக்கணிக்கப்படுதல் மற்றும் துன்பத்தை அடைவது (9:58)

அ. "அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு..." இயேசுவின் பதிலின் முதல் பாகம் சாதாரண இயற்கை நிகழ்ச்சி. நரிகள், பறவைகள் மற்றும் மனுஷ குமாரனுக்கும், இயேசு பூமியில் அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியம் ஆகியவற்றின் ஒற்றுமையை ஆராய்ந்து பார்க்க இது கூறப்பட்டது.

ஆ. "மனுஷ குமாரன்" இந்தச் சொல்லை, ஒன்றிற்கும் மேற்பட்ட அநேக வழிகளில் தன்னை இணைத்து அறிமுகப்படுத்திக்கொள்ள, இயேசு பயன்படுத்துகிறார். இது, அவருடைய கீழ்க்கண்ட தன்மைகளைப் பற்றி சந்தேகத்திற்கிடமின்றி பேசுகிறது:

1. மேசியாவானவர் மற்றும் தெய்வீகத் தன்மையுடையவர். இயேசு இந்தச் சொல்லை, அவருடைய ஊழியத்தின் கடைசி நாட்களிலும், அவருடைய சீடர்களுடன் தனித்திருக்கும்போது, கடைசி காலங்களின் அடையாளங்களைக் குறித்துப் பேசும்போதும், அடிக்கடி பயன்படுத்துகிறார். *(மத்தேயு 19:27-28; 24:27,30; 26:63-64; தானியேல் 7:13-14)*

இயேசுவை பின் செல்பவர்கள் செலுத்தும் கிரயம்

லூக்கா 9:57-62 (மத்தேயு 8:19-22)

இ. தலை சாய்க்க இடமில்லை" நரிகளுக்குக் குழிகளும், பறவைகளுக்குக் கூடுகளும் இருப்பதுபோல அல்லாமல் இயேசுவுக்கு, இங்கே பூமியில் "வீடு" என்று சொல்லக் கூடிய ஓர் இடம் இல்லை. அவர் தூங்குவதற்கு நிரந்தரமான இடமில்லை. வெளியில் அல்லது சிநேகிதர்கள் மற்றும் பின்பற்றினவர்களின் வீடுகளில் அவர் தூங்கினார். இந்தச் சொல் கீழ்க்கண்டவற்றையும் குறிக்கிறது.

1. பெரும்பாலான மனிதர்களால் புறக்கணிக்கப்படுவார், துன்மார்க்க மனிதர்களால் உபத்திரவப்படுத்தப்பட்டு நிந்திக்கப்பட்டு துன்புறுத்தப்படுவார். (ஏசாயா 53:3; மத்தேயு 16:21)

2. எப்போதும் இடம்விட்டு இடம் சென்று கொண்டேயிருப்பார். (மத்தேயு 4:23-25; 9:35-38)

ஈ. கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷ ஊழியத்திற்கும் அர்ப்பணித்துக் கொண்ட யெல்லாருடைய வழியும் இவ்வாறாகவே இருக்கும். அவர்களுடைய நிரந்தர வீடு மோட்சமே. பூமியில் தற்போது வாசம்பண்ணுவது ஒரு பயணம் போன்றது. அவர்கள் இங்கு பரதேசிகள் போலும், அந்நியர்கள் போலும் ஜீவிக்கிறார்கள். (1பேதுரு 2:11; எபிரெயர் 11:13-16) பொல்லாத மனிதர்கள் கரங்களில் மிகுதியும் துன்பம் அனுபவிப்பார்கள், ஒரு வேளை இடம் விட்டு இடம் சென்று அதிக அசௌகரியத்தை அடைவார்கள்! (யோவான் 15:20)

3. இயேசுவைப் பின்பற்றிச் செல்லும்போது சிநேகிதர்களையும், குடும்பத்தையும் பிரிய வேண்டிய அவசியம் நேரிடும் (9:59-62)

அ. வசனம் 59. "--- ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் ---" நம்மில் ஒவ்வொருவரையும் அவரைப் பின்பற்றும்படி அவர் கேட்பது போலவே, இயேசு இந்த மனிதனிடமும் கேட்டார்! ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கடுத்த வேலைகளில், ஊழியம் செய்ய வேண்டும். சிலர் முழு நேர ஊழியர்களாக அழைக்கப்படுகிறார்கள் ஆனால் எல்லோரும் ஊழியம் செய்யும்படி அழைக்கப்படுகிறார்கள். (எபேசியர் 4:11)

ஆ. அவனுடைய பதில், "என்னுடைய தகப்பன் மரித்து அடக்கம் பண்ணப்படுமளவும் காத்திருக்கக்கட்டும் அதன் பின் நாம் உம்மைப் பின்பற்றுவேன்" என்று ஒரு சமயம் பொருள்படலாம். அழைக்கப்படுவதற்கும், தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேவிக்கிறதற்கும் இடையே, இவ்வளவு நீண்ட இடைவெளியை கிறிஸ்து அங்கீகரிக்கமாட்டார். இது, ஒரு அர்ப்பணிக்கப்படாத இருதயத்தை வெளிப்படுத்துகிறது! ஒருவன் எப்போதும் ஏதேனும் ஒன்றை செய்து கொண்டிருப்பான், அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவதை தாமதிக்கச் செய்ய ஏதாவது ஒரு விளக்கம், மற்றொன்றிக்கு முதல் இடம்!

இ. வசனம் 60. "அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ போய் தேவனுடைய இராஜ்ஜியத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார்". ஆவியில் மரித்தவர்கள், சரீரத்தில் மரித்தவர்களை அடக்கம் பண்ணட்டும் என்று பொருள்படும். ஆவியில் ஜீவிப்பவர்கள்

இயேசுவை பின் செல்பவர்கள் செலுத்தும் கிரயம்

லூக்கா 9:57-62 (மத்தேயு 8:19-22)

"நற்செய்தியை" அறிவிப்பதில் ஒரே எண்ணமாயிரு. தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலை. இது அவர்களுடைய வாழ்க்கையில் முதல் இடத்தைப் பெறவேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யும் போது, இரத்த சாட்சிகளின் மனப்பான்மையை உடையவர்களாகிறார்கள். அறிவிப்பது என்றால் பிரசங்கிப்பது என்று பொருள்படும், தெரிவிப்பது, தொலை தூர இடங்களுக்கும் அகன்று பரந்துள்ள பிரதேசங்களுக்கும் பிரகடனப்படுத்து. (அப்போஸ்தலர் 1:8)

ஈ. வசனம் 61. "பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான்". இது மிஞ்சிய வேண்டுகோளாகக் காணப்படவில்லை. ஆனால் இது ஒரு பிரிக்கப்பட்ட இருதயத்தைக் காட்டுகிறது. இந்த நபர் இயேசுவைப் பின்பற்றுவதில் முழுவதுமாக அர்ப்பணிக்கப்படவில்லை. அவன், கடந்த கால வாழ்க்கையையும் உறவுகளையும் எப்போதும் திரும்பிப் பார்க்கிறவனாக, லோத்தின் மனைவியைப்போல இருப்பான். (ஆதியாகமம் 19:26; மத்தேயு 6:24)

உ. வசனம் 62. "அதற்கு இயேசு: கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்".

உழுவதற்குச் சாதாரணமாக ஒரு எருது அல்லது பல எருதுகளுடன், ஒரு விவசாயி கலப்பையை இடது கையால் பிடித்து, வலது கையிலுள்ள பிரம்பினால் எருதுகளை முன் செல்ல தூண்டி உழுவான். அவன் திரும்பிப் பார்ப்பானானால் அவன் திட்டமாகக் கோணலாக பள்ளம் விழ உழுவான். அவன் சீராக அவன் வேலையை செய்ய முடியாது. ஒருவன் உழ ஆரம்பித்த பின், வேலைக்கு இடையே போய்விடுகிறவன், தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஊழியம் செய்யத் தகுதியுடையவன் அல்ல, அவன் கிறிஸ்துவின் சீடனாக இருக்கவும் தகுதியுடையவன் அல்ல.

முடிவுரை

அ. ஆகவே, ஒருவன் இயேசுவிடம், அவர் எங்கு சென்றாலும், அவரைப் பின்செல்வேன் என்று கூறுவதற்கு முன் செலுத்த வேண்டிய கிரயத்தைக் குறித்து சிந்தித்துப்பார்க்க வேண்டும். இயேசுவைப் "பின்பற்றுவது" என்பது, சாலையில் அவருடன் சேர்ந்து நடந்து செல்வதற்கும் அப்பாற்பட்டது என்பதை அவன் சீக்கிரத்தில் அறிந்து கொள்ளுவான். அத்துடன் கீழ்க்கண்டவைகளும் உள்ளடங்கும்.

1. கிறிஸ்துவின் அர்ப்பணிக்கப்பட்ட மாணவனாக மாறுவது.

2. அவர் நடந்த சன்மார்க்க நடத்தையில் நடப்பான்.

3. இந்த உலகத்தில் அந்நியனாகவும், பரதேசி போலவும் வாழ்ந்து, சுவிசேஷத்தை தொலை தேசங்களுக்கும், பரந்து விரிந்து தூரத்திலிருக்கும் பிரதேசங்களுக்கும் பிரசங்கிக்க வேண்டும்.

4. பொல்லாத மனிதர்களால் புறக்கணிக்கப்பட்டு துன்பத்தை அனுபவிக்க வேண்டும்

இயேசுவை பின் செல்பவர்கள் செலுத்தும் கிரயம்

லூக்கா 9:57-62 (மத்தேயு 8:19-22)

5. சிநேகிதர்கள் மற்றும் குடும்பத்தாரிடமிருந்து பிரிந்து வாழ நேரிடும்.

6. அசௌகரியங்களின் அளவு அதிகம்

ஆ. தேவனுடைய இராஜ்ஜியத்தில் முழுநேர ஊழியம் செய்பவர்களுக்காக மட்டுமே இது கூறப்பட்டதாகக் காணப்படும். அவரைப் பின்பற்றுவதைத் தெரிந்துகொள்ளுகிற யாவருக்கும், எப்படியிருப்பினும் இது அவசியம் என்பதே இதன் நோக்கம். இந்த போதனைகளில் அநேகம், ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் ஏதாவதொரு நேரத்தில், இது அவன் வாழ்க்கைக்குப் பொருந்தும்.

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

முன்னுரை

அ. இயேசுவானவர், அவருடைய சீடர்களில் 72 பேர்களை, இரண்டு, இரண்டு பேர்களாக, அவர் போகும்படி நினைத்த ஒவ்வொரு ஊர்களுக்கும், இடங்களுக்கும் அனுப்பினார். அவர் அவர்களிடம் கூறினது,

1. முக்கியமற்ற காரியங்களுக்காக கால தாமதம் செய்யாதபடி கவனமாயிருக்க வேண்டும்.

2. உங்களுடைய ஊழியம் முடியுமட்டும், ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரே வீட்டிற்குச் சென்று, அங்கேயே தங்கியிருக்க வேண்டும்.

3. நோயுற்றவர்களைக் குணமாக்கி, "தேவனுடைய இராஜ்ஜியம், உங்களுக்குச் சமீபமாயிருக்கிறது" என்று கூறவேண்டும்.

அந்த சீடர்கள் இயேசுவிடம் திரும்பி வந்து, "ஆண்டவரே (நோயுள்ளவர்களை குணமாக்கி, தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து அறிவிக்கவும் எங்களால் செய்ய முடிந்ததோடு) உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளுக்கும் எங்களுக்குச் கீழ்ப்படிகிறது", என்றார்கள்.

1. இயேசு, அவருடைய சீடர்களுக்கு சத்துருவின் சக்தியை மேற்கொள்ள அதிகாரம் கொடுத்தார். (10:17-20)

அ. இயேசுவினால் அனுப்பப்பட்ட 72 சீடர்களும், கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கு சென்று,

1. வியாதியுள்ளவர்களுக்கு சுகமளித்தனர். (வசனம் 9)

2. அநேகர் விசுவாசிக்கத் தக்கதாக சுவிசேஷத்தை பிரசங்கித்தனர். (வசனம் 9)

3. அற்புதங்களை நடப்பித்தனர். (வசனம் 13)

4. பிசாசுகளை விரட்டினர் (வசனம் 17)

"சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்". என்று இயேசு கூறுகையில் இப்பொருள்படவே கூறுகிறார். (வசனம் 19)

ஆ. இதற்குப் பின் இயேசு அவருடைய சீடர்களிடம் இவ்வாறு கூறுகிறார்: "பிதா என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்". அவர் (இயேசு) ஆவியானவரால், கீழ்க்கண்ட கிரியைகளை நடப்பிக்கும்படி அபிஷேகிக்கப்பட்டார்:

1. தரித்திரருக்கு நற்செய்தியை பிரசங்கிக்க.

2. நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்ட.

3. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையளிக்க.

4. இருளில் கட்டுண்ட சிறைப்பட்டவர்களை கட்டவிழ்க்கவும்

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

இதே வண்ணமாக நாமும் இக்காரியங்களை நடப்பிக்க, ஆவியானவரால் நாம் இப்பொழுது அபிஷேகிக்கப்பட்டிருக்கிறோம். (லூக்கா *24:49;* அப்போஸ்தலர் 1:4-8)

இ. இந்த தேசத்தில் ஒவ்வொரு பட்டணத்திலும், கிராமங்களிலும், இயேசு திட்டமிட்டு அவருடைய மக்களை நியமிக்கிறார். ஏனெனில் அவர்கள் கீழ்க்கண்டவற்றிற்குத் தேவைப்படுகிறார்கள்:

1. இழந்து போனவர்களை ஆதாயம் செய்ய.

2. ஆகாய மண்டலங்களில் ஆளுகை செய்யும் பிசாசுகளுக்கு எதிராக யுத்தம் செய்ய, இந்த தேசத்திலுள்ள சமுதாயத்திலுள்ள தெருக்களில், ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வேலை செய்யுமிடங்களிலும், பெரிய உத்தியோகஸ்தர்கள், தொழில் அதிபர்கள் அலுவலகங்களிலும், குறிப்பிட்ட வயதினர்கள் அடங்கிய குழுக்களுக்கும், விசுவாசிகள் சிறு குழுக்களாக மேற்கூறப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த சமுதாயத்திலுள்ள பொல்லாத ஆவிக்குரிய சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு. உங்களில் ஒவ்வொருவரும்; ஒவ்வொரு மாணாக்கனும் இயேசுவுக்குத் தேவையானவர்களே!

ஈ. ஆகவே, இயேசு செய்த காரியங்களைச் செய்து, நீங்கள் ஒவ்வொருவரும் தனி நபர்களாக, சாட்சி கூறுவதில், ஈடுபடாமல் இருப்பீர்களாகில், இந்த சமுதாயத்தில், "ஒப்புவிக்கப்பட்ட இந்த பெரிய ஊழியத்தின் அழைப்பு" நிறைவேற்றப்படாமல் போய்விடும். இந்த வேலையைச் செய்ய இயேசு வேறொருவரை அமர்த்திக் கொள்வார், அல்லது நீங்கள் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட எல்லைக்குரியவர்கள் உள்படத்தக்கதான இடங்களுக்கு, ஊழியம் செய்ய யாராவது ஒருவரை அழைப்பார்.

உ. ஆகாய மண்டலங்களில் ஆளுகை செய்யும் பொல்லாத ஆவிகளை மேற்கொள்வது, நம் சொந்த வாழ்க்கையில் சாட்சி கூறும் ஊழியம் ஆகிய இவற்றின் இடத்தை, வெறிநாடு மற்றும் உள்நாட்டு ஊழியங்களுக்கு பண உதவி செய்வது, ஈடு செய்வதாக இருக்க முடியாது. உலக முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வது என்பது, உங்களுடைய சிநேகிதர்கள், அயலகத்தார்கள், உடன்மாணவர்கள், உறவினர்கள் மற்றும் அறிமுகமானவர்களையும் உள்ளடக்கும்.

ஊ. சீடர்கள், "உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள். பிசாசுகள் என்றால், தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் எதிராகச் சாத்தான் கலகம் செய்யும்போது, அவனைப் பின்செல்லத் துணிந்த தூதர்கள் ஆவார்கள். (எசேக்கியேல் 28:12-19; ஏசாயா 14:12-14; மத்தேயு 12:24; வெளிப்படுத்தின விசேஷம் 12:7,16:13-14) வேதாகமத்தில் இவைகள் பொல்லாத தூதர்கள் என்றும், அசுத்த ஆவிகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

எ. "கீழ்ப்படிகிறவன்" என்றால், கீழ் அடங்குவது, சொற்படி செய்வது, கட்டுப்பாட்டிற்குள் அடக்கப்படுவது என்று பொருள்படும். பிசாசுகள்:

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

1. இயேசுவின் சீடர்களுக்குக் கீழ்ப்படியும்.

2. அவர்களுக்கு அடங்கியிருக்கும்

3. அவைகள் ஒரு கீழ்த்தரமான நிலையில் உள்ளதை அறிந்திருக்கிறது.

ஏ. வசனம் 18. "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுவதைக் கண்டேன்", என்று இயேசு கூறினார். "இது, சாத்தான், கீழே விழும் நிலையில்" இயேசு பார்த்தார் என்று பொருள்படும். இயேசவின் சீடர்களிடம் சாத்தான் தோல்வியடைந்தான், சாத்தானாலும் அவனுடைய பிசாசுகளாலும் அதை எதிர்க்க முடியவில்லை! சத்துருவின் வல்லமை, இயேசுவின் சீடர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவைகளாவது:

1. நோயாளிகள் குணமாக்கப்பட்டது.

2. அநேகர் விசுவாசிக்கத்தக்கதாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது.

3. அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டது.

4. பிசாசுகள் துரத்தப்பட்டது.

சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகள், அவர்களைத் தடுக்க முடியவில்லை!

வசனம் 19. "இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும்... உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்", என்றும் இயேசு கூறினார்.

1. "அதிகாரம்" என்றால் இந்த உலகத்தில் பொல்லாத சக்திகளையும், அவற்றின் ஆதிக்கத்தையும் மேற்கொள்ளும் திறமை, என்று பொருள்படும்.

2. "சர்ப்பங்களையும் தேள்களையும்" இச்சொற்கள், பொல்லாத ஆவிகளின் சக்தியைக் குறிக்கும் (சாத்தானையும் அவனுடைய பிசாசுகளையும்) "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன......சர்ப்பங்களை எடுப்பார்கள்........" என்று இயேசு கூறும்போது, ஒரு வேளை, இதைத்தான் இயேசு மனதில் நினைத்துக் கூறியிருப்பார். (மாற்கு 16:17-18) விசுவாசிகளுக்கு பொல்லாத சக்திகளின் மீது அதிகாரம் உண்டு.

3. "சத்துருவினுடைய சகல வல்லமையையும்". இந்த உலகத்தில், சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் மனிதர்கள் மேல் செலுத்தும் அதிகாரம். (எபேசியர் 6:12)

ஓ. மற்றொரு சந்தர்ப்பத்தில், இயேசு அவருடைய சீடர்களிடம், "பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்", என்று கூறினார். (மத்தேயு 16:19) அவீகள் அதிகாரத்தின் அடையாளங்கள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், யாவரும் காணும்படியாக, அவைகள் தோளின் மீது சுமக்கப்பட்டது. (ஏசாயா 22:20-22) நமக்கு அதிகாரம் இருக்கிறது. அது கீழ்க்கண்டவற்றை நடப்பிப்பதில் வெளிப்படும்.

1. பொல்லாத சக்திகளைக் கட்டும்போது.

2. சாத்தானுடைய அதிகாரத்திற்கும், ஆளுகைக்கும் உட்பட்டவர்களை விடுவிக்கும்போது.

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

ஐ. வசனம் 20. "ஆகிலும்", பிசாசுகளின் மீது அதிகாரமும், ஊழியத்தில் வெற்றியும், விசுவாசிக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஆனாலும் இதை விட மேலான மகிழ்ச்சி, இனிமேல் தான் வரப்போகிறது. ஒரு விசுவாசிக்கு, "அவனுடைய பெயர் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படுவதே" மிக முக்கியமான காரியம். இக்காரணத்தினால், நாம் கீழ்க்கண்டவை நிறைவேறும் நாளுக்காக எதிர்நோக்கியிருக்கலாம்:

1. கண்ணீர் யாவும் துடைக்கப்படும்.

2. சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போகும்.

3. உபத்தரவம், தனிமை, புறக்கணிக்கப்படுவது இனி ஒருபோதும் இல்லை.

4. சாத்தான், பிசாசுகள் அல்லது சோதனைகள் அல்லது பாவம் இனிமேல் இருக்க மாட்டாது.

2. சத்துருவின் வல்லமையை மேற்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதென்று, இயேசு பாலகருக்கு வெளிப்படுத்துகிறார். (10:21-22)

அ. வசனம் 21. "..... இயேசு ஆவியில் களிகூர்ந்து இயேசு அவர்களை அனுப்பும்போது, அவருடைய சீடர்கள்" கீழ்க்கண்டவற்றை நடப்பிப்பார்கள் என்று, இயேசுவுக்குத் தெரியும்:

1. மக்களுக்கு சுகமளிக்க.

2. அற்புதங்களைச் செய்ய.

3. அவர்களுடைய செய்தியை அநேகர் விசுவாசிப்பார்கள் என்று அவருக்குத் தெரியும்.

4. பிசாசுகள் அவர்களுக்குக் கீழ்ப்படியும்.

அவருடைய சீடர்கள் இவை யாவைற்றையும் செய்வதற்கு வேண்டிய பலன், அவர் மரணத்தினால் கிடைக்கும் என்று, இயேசுவுக்குத் தெரியும். "துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்" (கொலோசெயர் 12:15) "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்தார்......" (எபிரெயர் 2:14)

ஆ. எப்படியிருப்பினும் அவர் மகிழ்ச்சியினால் நிரப்பப்பட்டார், ஏனெனில்:

1. அவருடைய சீடர்கள், அவருடைய கட்டளைகளுக்கு பாலகர் போல் கீழ்ப்படிந்தனர்.

2. சிறு பிள்ளைகளுக்குரிய விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும், அவர்கள் உண்மையின்படியே, அவர்கள் எக்காரியங்களை நடப்பிக்க முடியும் என்று அவர் கூறினாரோ அதை அப்படியே செய்தார்கள். மற்றொரு சந்தர்ப்பத்தில் இயேசு அவருடைய சீடர்களைப் பற்றிக் கூறியவற்றை இத்துடன் இணைக்கலாம்: "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்...... பரலோக இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது." (மத்தேயு 19:14)

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

இ. இன்று, சபையில், இது ஒரு பெரிய பிரச்சினையாய் இருக்கிறது. இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள், தங்களுக்குக் கீழ்க்கண்டவற்றை நடப்பிக்கும் திறமை உண்டு என்று விசுவாசிப்பது கிடையாது:

1. குணமாக்க.

2. அற்புதங்களை நடப்பிக்க

3. வல்லமையோடு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க.

4. தேவதூதர்கள் வந்து யுத்தம் செய்யுமாறு, ஜெபித்து உபவாசிக்க!

5. பிசாசுகளுடன் பேசி, அவைகள் அவர்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய.

6. பல வேலைகள் செய்பவர்கள், உத்தியோகஸ்தர்கள், மற்றும் பல வயதுள்ள மக்கள் மத்தியில், தாங்கள், இயேசுவின் திட்டப்படி வைக்கப்பட்டுள்ளவர்கள் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. அவர்கள் கிறிஸ்துவினுடைய சொந்த இராஜதூதர்கள் என்றும், அவருடைய பிரதிநிதிகள் என்றும் அவர்கள் விளங்கிக்கொள்ளவில்லை.

7. அவர்கள் சிறுபிள்ளைகளுக்குரிய விசுவாசத்துடனும் கீழ்ப்படிதலுடனும் சாதாரணமாகக் காணப்படுவதில்லை. உலகத்தார்போன்ற ஞானமும், கல்வி மேதைகள் போலும் இருக்கும் தன்மையுடையவர்களாகின்றனர். உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படவும், உலகத்தார்போல் வாழவும் விரும்புகிறார்கள்.

ஈ. உலகம் சபையைப் பார்த்து இவ்வாறு கூறுவதில் ஆச்சரியம் இல்லை: "ஆகவே என்ன! சபையில் நடப்பதற்கும், சபைக்கு வெளியே நடைபெறும் காரியங்களுக்கும் இடையே தெளிவாகப் பார்க்கக்கூடிய வித்தியாசம் ஒன்றுமில்லை; விசுவாசிகள் நடப்பிக்கும் காரியங்களுக்கும், எங்களுடைய செய்கைகளுக்கும்!" தேவனே எங்களுக்கு உதவி செய்யும்! இன்று இயேசு, மிகக் குறைவான அளவே ஆவியில் களிகூருகிறார்!

உ. பெந்தெகொஸ்தே அனுபவத்திற்காக திடமனதோடு ஒருமனப்பட்டு, பேதுருவைப்போல் நிற்கவேண்டும். நம்முடைய பிள்ளைகள், கீழ்க்கண்டவற்றை நம்மில் காணவேண்டும்:

1. தசமபாகம் மற்றும் காணிக்கைகளை தேவனுடைய ஊழியத்திற்கு செலுத்துவதை,

2. பரிசுத்த ஜீவியம் செய்வதை,

3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதை,

4. ஆவியில் ஜெபிப்பதை,

5. ஆவியின் வரங்களை கிரியையில் நடப்பிப்பதை,

6. சுவிசேஷத்தை தைரியமாக அறிவிப்பதை.

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

7. வியாதிஸ்தர்களை குணமாக்குவதையும், அற்புதங்களைச் செய்வதையும்.

மற்றபடி, பெந்தேகொஸ்தே ஆவியும், அற்புதங்களும் அமெரிக்காவைவிட்டு (நமது நாட்டை) மறைந்துவிடும். நாம், பெரிய கிறிஸ்தவ இயக்கமாக இருப்பது மறைந்துவிடும்.

ஊ. வசனம் 21. "....இவைககளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால்......." சிறு பிள்ளைகளுக்கொத்த விசுவாசத்தைக் காத்துக் கொண்ட இயேசுவின் சீடர்கள் மட்டும், அவர் அந்த 72 சீடர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறிய காரியங்களை செய்ய முடியும். பார்வோனிடமிருந்து அவருடைய மக்களை விடுவிப்பதற்காக, தேவன் மோசேயை அழைத்தபோது, மோசே சிறுபிள்ளைகளைப் போன்ற விசுவாசத்துடன் கிரியை செய்தான்.

1. உன் கோலைக் கீழே போடு. (அது சர்ப்பமாக மாறிற்று)

2. சர்ப்பத்தின் வாலைப் பிடித்துத் தூக்கு.

3. உன் கையை மடியில் போடு. திரும்ப அதை எடு.

4. நைல் நதி நீரை மொண்டு தரையில் ஊற்று. அது இரத்தமாக மாறும்.

5. சாத்தானாகிய பார்வோனிடம் சென்று, ஜனங்களை அனுப்பிவிடுமாறு, கூறு. (யாத்திராகமம் 4:1-9)

எ. வசனம் 22. "...பிதா தவிர வேறொருவனும் குமாரன் இன்னாரென்று அறியான், குமாரனும், குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் தவிர வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான்". சிறு பிள்ளையினுடைய விசுவாசமும், மனப்பாங்கும் உடைய நபர்கள் மட்டுமே இயேசுவிடம் வந்து, இரட்சிக்கப்பட முடியும். (மத்தேயு 18:3; மத்தேயு 11:20, 25-26) குழந்தைக்கொத்த விசுவாசத்தைக் காத்துக் கொள்கிறவர்கள் மட்டுமே, அவர் அவர்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை எடுத்து பயன்படுத்தமுடியும். கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபத்தில் பவுல், இவ்வாறு கூறுகிறார்: "நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைபாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள், வல்லவர்கள் ...பிரபுக்கள் அநேகரில்லை.......தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை.... பலவீனமானவைகளை.....இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் தெரிந்து கொண்டார்." (1கொரிந்தியர் 1:26) நாம் முதன் முதலாவது இரட்சிக்கப்பட்டு, ஆவியினால் நிரப்பட்டபோது, நம்மில் அநேகர், சிறு பிள்ளையின் விசுவாசத்துடன் கிரியை நடப்பித்து, இயேசுவானவர் நம்மிடம் என்ன செய்யும்படி கூறினாரோ, அதன்படி செய்தோம். ஆனால், நம்மில் அநேகர், பெருமை, சுயநலம், தன்னையே சார்ந்து இருக்கும் உலகத்தாரைப்போலவும், திரள் கூட்டமக்களைப் பிரிப்படுத்துகிறவர்களாகவும் மாறிவிட்டோம். தேவனே எங்களுக்கு உதவி செய்யும்!

ஏ. இந்த உலகத்தில் ஞானிகளும் கல்விமான்களும், கீழ்க்கண்டவாறு இருக்கின்றனர்:

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

1. சிறு பிள்ளைக்குரிய விசுவாசத்துடன் கிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுவதை அதிகக் கடினமானதாகக் காண்கிறார்கள்.

2. விசுவாசத்தைக் காத்துக் கொள்வது அதிகக் கஷ்டமான காரியமாகப் பார்க்கிறார்கள்.

3. அற்புதங்கள், சாத்தான், பிசாசுகள் ஆகிய இவைகளைப் பற்றிய அவருடைய உபதேசங்களை சாதாரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

4. விசுவாசிகளுக்கு, சத்துருவின் சகல வல்லமைகளுக்கும் மேல் அதிகாரம் உண்டு என்ற வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

5. நாம் உபவாசித்து ஜெபிக்கும்போது, ஆகாய மண்டலங்களில் யுத்தம் செய்ய, தேவ தூதர்கள் அனுப்பப்படுகிறார்கள் என்பதை விசுவாசிக்க மாட்டார்கள். சிறுபிள்ளைகளுக்குரிய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் உடையவர்கள் மட்டுமே சீடத்துவத்தின் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளுவார்கள்.

3. பழைய காலத்துத் தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும், இயேசுவுக்கும் அவருடைய சீடர்களுக்கும், சத்துருவின் வல்லமையை மேற்கொள்ள இருந்த அதிகாரத்தைப் பார்க்கவும் கேட்கவும் விரும்பினார்கள். (10:23-24)

அ. வசனம் 23. "......நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்." பாக்கியமுடையவர்களாய் இருப்பது என்பது, மிக உன்னத நற்பயனைப் பெற்றுக்கொள்வது, செழிப்புடன் நன்றாக இருப்பது. அந்த 72 சீடர்களும், தேவனுடைய அபிஷேகிக்கப்பட்ட மேசியாவின் மகிமையை நேரடியாகக் கண்டார்கள். அவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்து கொள்ளத் துவங்கினார்கள்:

1. பரலோகத்திலும், பூமியிலும் இயேசுவுக்கு சர்வ அதிகாரமும் உண்டு. சத்துருவின் சகல சக்திகளையும் மேற்கொள்ள அதிகாரம் உடையவர். (வசனம் 19)

2. இயேசுவின் நாமத்தில் (அதிகாரத்தில்) மனிதர்கள் குணமாக்கப்படுகிறார்கள்; பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறார்கள், பிசாசுகள் கீழ்ப்படிகின்றன, அற்புதங்கள் நடைபெறுகிறது.

3. அவர்களுக்கும், அதே அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதே அபிஷேகம் (அழைப்பு) தங்களுக்கும் உண்டு என்பதையும் அறிந்து கொண்டனர்.

ஆ. இதைத்தான் இயேசு, அவருடைய உன்னத ஊழியத்திற்கான அழைப்பில், தமது சீடர்கள் கிரகித்துக்கொள்ள வேண்டும் என்று முயற்சித்தார்: "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், என்னுடைய அதிகாரத்தினாலும் வல்லமையினாலும் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்," (மத்தேயு 28:18-19)

இ. வசனம் 24. "அநேக தீர்க்கதரிசிகளும், இராஜாக்களும், (ஆதிகாலத்து) நீங்கள் காண்கிறவைகளைக் காணவும்,........கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பினார்கள்." பேதுரு இவ்வாறு கூறுகிறார்: '

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கத்தரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள், இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்." (1 பேதுரு 1:10-11) மோசே இவ்வாறு எழுதும்போது, மோசேக்கும் இந்த சத்தியம் உண்மையாயிருந்தது: "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்". (ஆதியாகமம் 3:15) இது, தாவீது இராஜா, (சங்கீதம் 22:12-18) எழுதியவைகளிலும், ஏசாயா தீர்க்கதரிசியின் (ஏசாயா 53:4-5) வார்த்தைகளிலும், யோவேலின் (யோவேல் 2:28-29) தீர்க்கதரிசன வசனங்களில் உண்மையாயிருக்கிறது.

ஈ. கிறிஸ்துவின் வருகை, நம்முடைய காலங்களுக்காக பிரத்யோகப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் பூரண மகிமையும், தேவனுடைய ஜனங்களின் சகல சத்துருக்கள் மேலும் அவருடைய அதிகாரமும் வல்லமையும் நம்முடைய நாளுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது.

சத்துருவின் சக்திகளை மேற்கொள்ள, அவரைப் பின்பற்றுகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரமும் வல்லமையும், நமது காலத்திற்காக ஒதுக்கி காக்கப்பட்டிருக்கிறது! ஆதிகாலத்துத் தீர்க்கதரிசிகள், தூரத்திலிருந்து பார்த்த காரியங்களைச் செய்வதற்கு, ஆவியின் வல்லமையையும், சிறு பிள்ளைகளுக்குரிய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் பெற்றுக்கொள்ள தேவன் நமக்கு உதவிசெய்வாராக.

முடிவுரை

அ. இழந்து போனவர்களை ஆதாயம் செய்யவும், பொல்லாத சக்திகளுடன் யுத்தம் செய்யவும் நாம் திட்டமிடப்பட்டு வைக்கப்பட்டுள்ளோம். அவருடைய சத்துருக்கள் யாவர் மீதும், அவருடைய சீடர்களுக்கு, இயேசு அதிகாரங்கொடுத்திருக்கிறார். சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகளின் சக்தியை மேற்கொள்ள, அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை அவருடைய சிறுபிள்ளைகளுக்கு அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஆதிகாலத்து தீர்க்கத்தரிசிகளும் இராஜாக்களும் பரிசுத்த ஆவியால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அவர்களுடைய தீர்க்கத்தரிசன வசனங்களைக் கூறும்போதும், எழுதும்போதும் இதைத்தான் எதிர் நோக்கியிருந்தனர்.

ஆ. இயேசுவானவர் சபையின் கரங்களில் கொடுத்திருக்கிற பொறுப்புகளிலிருந்து, நாம் பின்வாங்காமல் இருப்போமாக. இயேசு சத்துருவின் சக்திகளை மேற்கொள்ள நமக்குக் கொடுத்த அதிகாரத்தை, நம்மில் ஒவ்வொருவரும், இந்த சரீரமாகிய விசுவாசிகளின் சபையும் விளக்கிக்கொண்டு, அதன்படி கிரியை நடப்பிப்போமாக. அந்த 72 சீடர்களைப்போல் சிறு பிள்ளைக்குரிய விசுவாசத்துடனும், கீழ்ப்படிதலுடனும் கீழ்க்கண்டவற்றைச் செய்வோமாக.

சத்துருவின் சக்தியை மேற்கொள்ள இயேசுவின் சீடர்களுக்கு அதிகாரம் உண்டு

லூக்கா 10:17-24
மத்தேயு 11:25-27, 13:16-17

1. இந்த உலகத்தின் முக்கியமற்ற காரியங்களுக்காக காலதாமதம் செய்யாமல் இருக்கக் கவனமாக இருக்கவேண்டும்.

2. வியாதியுள்ளவர்களைக் குணமாக்க வேண்டும்.

3. அநேகர் விசுவாசிப்பதற்கு ஏதுவுண்டாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும்.

4. அற்புதங்களை நடப்பிக்க வேண்டும்.

5. பிசாசுகளைத் துரத்தவேண்டும்.

6. அந்தகார லோகாமதபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத சக்திகளோடும், தேவதூதர்கள் வெற்றிபெற, ஜெபித்து, உபவாசித்து, விழித்திருக்கவேண்டும்.

7. சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டவர்களை கட்டவிழ்த்து விடுவிக்கவேண்டும்.

விடாமுயற்சிக்கான ஜெபம்

லூக்கா 11:1-3
(மத்தேயு 6:9-13; 7:7-11)

முன்னுரை

அ. இயேசுவின் சீடர்கள், ஜெபிக்கத் தங்களுக்குப் போதிக்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அந்த சீடர்கள், "என்ன" ஜெபிக்கவேண்டுமென்று அல்ல, எப்படி ஜெபிக்கவேண்டுமென்றே உண்மையில் இயேசுவைக் கேட்டுக்கொண்டார்கள். இயேசு எந்தக் குறிப்புகளுக்காக ஜெபிக்கவேண்டும் என்று அவர்களுக்குக் கொடுத்து, பதிலளித்தார். (வசனம் 2-4)

ஆ. எப்படியிருப்பினும், விடாமுயற்சியான ஜெபத்தை மையமாகக் கொண்டு, அவருடைய உபதேசம் பிரதானமாக அழுத்திக்கொடுக்கப்பட்டது:

1. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்கவேண்டும் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்.

2. விடாமுயற்சியான ஜெபம் எப்போதும் ஒரு பதிலைப் பெற்றுக்கொள்ளும்.

3. விடாமுயற்சியான ஜெபம் எப்போதும் ஒரு நல்ல பதிலைப் பெற்றுக்கொள்ளும்.

1. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள் 11:5-8

அ. விடாமுயற்சியான ஜெபத்தை நமக்குப்போதிக்க, ஒரு உதாரணத்தை இயேசு எடுத்துக் கூறி விளக்குகிறார்.

அவனுடைய அயலானிடம், விடாமுயற்சியுடன் அப்பத்திற்காக வேண்டிக்கொண்ட அந்த மனிதன், அப்பத்தைப் பெற்றுக்கொண்டான். அது, அவனுடைய சிநேகிதன் என்பதினால் அல்ல, ஆனால் அவன் விடாப்பிடியாக இருந்ததினால் தான் பெற்றுக்கொண்டான். (விடாப்பிடியாகக் கேட்ட விதவையின் உவமையையும் பார்க்கவும் அதுவும் விடாப்பிடியான ஜெபத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு லூக்கா 18:1-7)

ஆ. "வருந்தி" என்ற சொல், (வசனம் 8) ஊக்கமாக, விடாமுயற்சியுடன் கேட்பது, நம்பிக்கையுடனும், தைரியத்தோடும் கேட்பது, எதையும் மறைக்காமல் கேட்பது என்று பொருள்படும். நாம் தேவனைக் கிட்டிச் சேரும்போது மரியாதையில்லாமல் அல்லது பயபக்தி இல்லாமல் இருக்கக்கூடாது. ஆனால், ஆர்வத்துடன் அவரைக் கிட்டிச் சேர்ந்து, ஜெபத்தில் சுயாதீனத்தோடும், நம்பிக்கையோடும் நாம் இருக்க, அவர் விரும்புகிறார். ஒரு தேவை அல்லது வாழ்க்கையில் ஒரு சூழ்நிலைக்காக, ஒரு முறைக்குமேல் அவரிடம் நாம் பேசினாலும் அவர் நிச்சயமாக அதைப் பொருட்படுத்தமாட்டார்:

1. கெத்செமெனேயில் இயேசு விடாமுயற்சியுடன் கேட்டார். (மத்தேயு 26:39-44)

2. பவுல், சாத்தானுடைய பொல்லாத தூதனால் துன்புறுத்தப்பட்டபோது, விடாப்பிடியாகக் கேட்டார். (2 கொரிந்தியர் 12:8)

இயேசுவானவரும் பவுலும் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அவ்வாறே, மற்ற விசுவாசிகளுக்காகவும், நாம் விடாமுயற்சியுடன் ஜெபிக்கவேண்டுமென்று, எபேசியர் 6:18 வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், நமக்குக் கூறுகிறார்!

2. விடாமுயற்சியான ஜெபம் எப்போதும் ஒரு பதிலைப் பெற்றுக்கொள்ளும். (11:9-10)

விடாமுயற்சிக்கான ஜெபம்

லூக்கா 11:1-3
(மத்தேயு 6:9-13; 7:7-11)

ஊ. ஆகிலும், இன்று நாம் பார்க்கவேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், வேண்டிக்கொள்வதும், பெற்றுக்கொள்வதும் என்ற மாதிரி கர்த்தரால் அவருடைய சீடர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (1யோவான் 5:14-15; யோவான் 14:12-14; 16:23-24)

எ. நம்மில் ஒவ்வொருவருடனும், கீழ்க்கண்ட வேதவசனங்கள் மூலமாக இயேசு பேசுகிறார்:

1. "என்னிடத்தில் கேளுங்கள், என்னிடமிருந்து தேடுங்கள், என்னுடைய கதவைத் தட்டுங்கள்." (வசனம் 9)

2. ஒரு பதிலைப் பெற்றுக்கொள்ளும் தேவையோடு உன் மனதில் உள்ளது என்ன?

3. உனக்கு என்ன தேவை?

நீ ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருப்பாயானால், தேவன் தொடர்ந்து உனக்கு பதிலளித்துக்கொண்டிருப்பார்!

3. விடாமுயற்சியுள்ள ஜெபம் எப்போதும் ஒரு நல்ல பதிலைப்பெற்றுக்கொள்ளும். (11:11-13)

அ. உலகப்பிரகாரமான தகப்பன்மார்கள் சாதாரணமாக, தீமையான அல்லது கீழ்த்தரமான காரியங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கமாட்டார்கள்.

அவர்களுக்குத் தேவையான மற்றும் அவர்கள் வளர்வதற்குப் பயனுள்ளவற்றையே கொடுப்பார்கள். இம்மாதிரியாகத்தான் நம்முடைய பரம தந்தையும் இருக்கிறார். நமக்கு நன்மையானவைகளையே எப்போதும் நாம் பெற்றுக்கொள்ளுவோம். இப்பொருள்படவே இயேசு இவ்வாறு கூறும்போது இதைக்குறிப்பிடுகிறார்: "மீனைக்கேட்டால் --- பாம்பைக் கொடுப்பானா? முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?"

ஆ. ஆகிலும், பூலோகப் பிதாக்களால் கொடுக்கக் கூடாதவைகளை, நம்முடைய பரம பிதா நமக்குக் கொடுக்கிறார். நாம் வேண்டிக் கொண்டால், பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுப்பார். அவருடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக நன்மையாக இருக்கும்.

இ. "பரிசுத்த ஆவியைத் தாரும்" என்றால் என்ன அர்த்தம்? இது பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசிகளுக்கு நடந்த அந்த பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம். (அப்போஸ்தலர் 2:1-4)

ஈ. இது, இயேசுவில் விசுவாசம் வைக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் சாதாரண அனுபவம். இது கீழ்க்கண்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டது:

1. பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசித்த எல்லோருக்கும், (அப்போஸ்தலர் 8:14-16)

2. தமஸ்குவிற்குச் செல்லும் பாதையில், பவுல் அப்போஸ்தலன் பவுல் விசுவாசத்திற்குள் வந்தபோது. (அப்போஸ்தலர் 9:17)

3. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு விசுவாசித்த கொர்நேலியு குடும்பத்தார் அனைவருக்கும்.

விடாமுயற்சிக்கான ஜெபம்

லூக்கா 11:1-3 (மத்தேயு 6:9-13; 7:7-11)

4. பவுலின் உபதேசத்தைக் கேட்ட எபேசுவிலுள்ள சீடர்களுக்கு (அப்போஸ்தலர் 19:1-7)

உ. அப்போஸ்தலர் 2:38-39. வசனங்களில் உள்ளபடி, பெந்தெகொஸ்தே நாளன்று, சீமோன் பேதுரு இவ்வாறு கூறினான்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்".

ஊ. ஜெபத்தைக் குறித்த இந்த உபதேசங்களில், கீழ்க்கண்ட முடிவான கருத்துக்களுக்கு, இயேசு நம்மை நடத்துகிறார். அவர் முதலாவது:

1. நாம் எக்காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறார்.

2. நாம் ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்க வேண்டுமென்று, அவர் கூறுகிறார்.

3. அதன் பின், "பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது. அதிக நிச்சயம்!...." என்று அவர் கூறுகிறார். இந்த உபதேசங்கள் முழுவதின் முக்கிய கருத்து இதுவே: "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காகக் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள்".

முடிவுரை

அ. மத்தேயு 6:5-15 வசனங்களில் எழுதப்பட்ட இயேசுவின் ஜெபத்தைப்பற்றிய போதனைகளுடன் மேலும் சேர்த்துக் கொள்ளத்தக்க கருத்துக்களை, இந்த வேதாகமப் பகுதி உண்மையில் நமக்குக் கொடுக்கிறது. மத்தேயு 9-13, வசனங்களிலிருந்து நாம் தொடர்ச்சியாகக் கற்றுக்கொண்ட; தனி ஜெபம், கூட்டு பிரார்த்தனை, ஆகியவைகளுடன் மேலும், கீழ்க்கண்ட குறிப்புகளையும் சேர்த்துக் கொள்ளவும்:

1. இடைவிடாமல் (எல்லாவற்றிற்காகவும், ஒவ்வொரு நாளும் லூக்கா 11:9-10; பிலிப்பியர் 4:6)

2. விடாமுயற்சியுடன் (லூக்கா 11:5-8)

3. நம்முடைய இடைவிடாத, விடாமுயற்சியுடன் கூடிய ஜெபத்துடன், (உறுதியுடன், தைரியமாக, சுபாதீனத்துடனும் நம்பிக்கையுடனும் தினந்தோறும் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்) பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமும் சேர்க்கப்படவேண்டும். (11:13) அத்துடன், புதிதாக அபிஷேகிக்கப்பட்டு நிரப்பப்படவேண்டும். (அப்போஸ்தலர் 4:2, 8; 4:23-24, 31; 13:4,8-9), அப்பொழுதுதான் நாம், தேவனுடைய வருவதற்கான ஊழியத்தில் (மனிதர்களின் இருதயத்திலும், வாழ்க்கையிலும்) தனித்தனியாக, ஈடுபடுகிறவர்களாகவும் (அதில் நிலைத்திருப்பவர்களாகவும்) பிதாவினுடைய சித்தத்தை பூமியில் நிறைவேற்றுகிறவர்களாகவும் இருப்போம்.

(அ) வல்லமையுடன் (அப்போஸ்தலர் 1:8; லூக்கா 24:49)

(ஆ) திட்டவட்டமான ஜெபம் (பாஷைகளில் ஜெபிப்பது - ஆவியில் ஜெபிப்பது - ரோமர் 8:26-27 தேவனுடைய பரிபூரண சித்தம்)

விடாமுயற்சிக்கான ஜெபம்

லூக்கா 11:1-3
(மத்தேயு 6:9-13; 7:7-11)

ஆகவே, இயேசு கூறியவைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று, நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்: பரிசுத்த, ஆவியின் ஞானஸ்நானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆதி கிறிஸ்தவர்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்த வண்ணமாக, உங்களுக்கு அது நடைபெறும். ஒரு தடவைக்கு மேல், விடாப்பிடியாகக் கேட்க பயப்பட வேண்டாம். இன்று உங்கள் மனதிலும் இருதயத்திலும் உள்ள காரியங்களைப் பற்றி நீங்கள் பேசும்படியாக தேவன் விரும்புகிறார். இதற்கு முன்னால் அதைக் குறித்து அவரிடம் கூறியிருப்பீர்களானால், பாதகமில்லை.

ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட கூனியான பெண்

லூக்கா 13:1-17

முன்னுரை

அ. சாத்தானால் கட்டுண்டவர்களை விடுவிக்க இயேசு வந்தார்.

ஆ. ஓய்வு நாளில் ஒரு மனிதன் செய்ய அனுமதிக்கப்பட்டவைகளைப் பற்றிய விவாதம், இயேசுவுக்கும், பரிசேயர் மற்றும் வேதபாரகர்களுக்கும் இடையே தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தது. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்துடன் சேர்க்கப்பட்ட யூதர்களுடைய பாரம்பரிய கொள்கைகள், மக்களுடைய நடவடிக்கைகளையும், கிரியைகளையும், இந்தக் குறிப்பிட்ட நாளில் அதிகமாகக் கட்டுப்படுத்தியது. வேதபாரகர்களால், மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் சேர்க்கப்பட்ட 613 கட்டுப்பாட்டு விதிகள், பழைய ஏற்பாட்டு வேதாகமத்தின் முதன்மையான நோக்கத்திற்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருந்தது. இந்த நாளில், மானிடர்களுக்காகக் கவலைப்பட்டு கிரியைசெய்வதை விட மிருகங்களுக்காக கவலைப்பட்டு கிரியை நடப்பிப்பது சரியானது என்ற குறிப்பிடும் அளவுக்கு அது அவ்வளவு தூரத்திற்கு அப்பாற்பட்டதாக இருந்தது! (முதன்மையான நோக்கத்திற்கு)

இ. ஆகவே பக்திமார்க்கத் தலைவர்களைப் பொருட்படுத்தாமல், இயேசு இன்னமும், இன்றும், சிறப்பாக ஓய்வுநாட்களிலும், சகமளித்து அற்புதங்களை வெளிப்படையாக நடப்பிக்கிறார். பூமியில், தேவனுடைய இராஜ்ஜியமும், அவருடைய ஆளுகையும் வந்திருப்பதை அவருடைய நாமத்தினால் அறிவிக்கப்படும் எந்த வேளையிலும், எல்லா இடங்களிலும், சாத்தானுடைய வல்லமை மற்றும் அதிகாரத்திற்குட்பட்ட, ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கைகளில், விடுதலையைக் கொண்டுவர முடியும் என்பதை அவர் தொடர்ந்து தமது கிரியைகளில் நடப்பித்துக் காண்பிக்கிறார். *(மாற்கு 16:20; மத்தேயு 28:19-20)*

1. அநேக மக்கள், நீண்ட காலமாக சாத்தானால் கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (13:10-11,16)

அ. வசனம் 10 "ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெப ஆலயத்தில் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார்". இதுவே இயேசு ஒரு ஜெப ஆலயத்திற்குள் பிரவேசித்தார் அல்லது போதகம் பண்ணினார் என்று எழுதப்பட்ட கடைசிமுறை. யோர்தான் நதியில் அவர் ஞானஸ்நானம் பெற்றபின், கலிலேயாவின் ஜெப ஆலயங்களுக்குச் சென்று, அநேக சந்தர்ப்பங்களில் பிரசங்கம் செய்தார். *(லூக்கா 4:14-15)* அவருடைய குழந்தைப்பருவ ஊரான நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்தில், ஏசாயா தீர்க்கதரிசன வசனங்களை வாசித்தபின், அவருக்கு என்ன நேர்ந்தது என்பதை எப்படியும் நீங்கள் நினைவு கூருவீர்கள். *(4:28-30)*

ஆ. வசனம் 11. "...பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள்". "பலவீனப்படுத்தும்" என்றால், முடமான சரீரத்தில் துர்பலமான, உடலில் வியாதியுடைய, என்று பொருள்படும். அவளுடைய சரீர நோய்க்கு ஒரு பொல்லாத ஆவியே காரணம்; ஒரு பிசாசு *(மாற்கு 9:17-18, 25; லூக்கா 8:29; யோவான் 10:20)* அவளுடைய முதுகெலும்பிலுள்ள எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்து கடினமாகிவிட்டது. இன்னும் அதிகமாகச் சொல்வோமானால், ஒருவரும் அவளுக்கு உதவிசெய்யவோ அல்லது அவளுடைய பலவீனத்திலிருந்து விடுவிக்கவோ கூடாதபடி பதினெட்டு வருடங்களாக இருக்கிறாள்.

ஓய்வு நாளில்
குணமாக்கப்பட்ட
கூனியான பெண்

லூக்கா 13:1-17

இ. வசனம் 11. "அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள்". "நிமிரக் கூடாத" என்றால், முற்றிலும் குனிந்து வளைந்த நிலை, அவள் அவளுடைய சரீர நோயினால் முழுவதும் தாக்கப்பட்டிருந்தாள், என்று பொருள்படும். பதினெட்டு ஆண்டுகளாக நேராக நிற்க முடியவில்லை, குனியவும் நிமிரவும் கூடாத நிலை. அவளுடைய சொந்த பெலத்தினால் தன் நிலையை மாற்றக் கூடாத நிலைமையில் அவள் இருந்தாள். இது அவள் மற்றவர்களுடன் ஏற்படுத்தும் தொடர்பையும், ஐக்கியத்தையும், எவ்வளவாகப் பாதிக்கும் என்பதை நீ மனோபாவனை செய்து பார்க்க முடியுமா? இதில் இன்னும் மிக மோசமான காரியம் என்னவென்றால், சரீர நோய்கள் மற்றும் துன்பங்கள் யாவும், பாவத்தின் விளைவு என்ற போதகர்களின் உபதேசத்தால் ஏற்பட்டது. (யோவான் 9:1-3) இதனால் அவள் ஜாதியிலி ருந்தும் தள்ளப்பட்டவளாக இருந்திருப்பாள்!

ஈ. வசனம் 16. " இதோ, சாத்தான் பதினெட்டு வருடமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை, ஓய்வு நாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா? என்றார்." அந்த ஸ்தீரியின் நிலைக்குச் சாத்தானும் அவனுடைய பிசாசுகளின் சேனைத் திரளும் காரணம் என்று, இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகாலமாக, (எந்த நபருக்கும் இது நீண்ட நாட்களாகக் கருதப்படும்) சாத்தான் அவளைக் கட்டிவைத்திருந்தான் என்பதையும் இது, உறுதிப்படுத்துகிறது.

ஆகவே, இந்த பெண் குணமாக்கப்பட்டு, விடுவிக்கப்பட வேண்டுமானால், இதற்கு முன்னால், சாத்தான் அவளுடைய வாழ்க்கையிலிருந்து, துரத்தப்பட்டு அவளுடைய சரீர பெலவீனத்திலிருந்து அவள் விடுவிக்கப்படவேண்டும்!

உ. "இல்லையா" என்ற இந்த வசனத்தின் கடைசியிலுள்ள சொற்தொடர், உண்மையில், "கண்டிப்பாக இல்லையா?" இது கட்டிற்குட்பட்ட பரிபூரணத்தேவை என்று பொருள்படும். ஆகையால், அவள் ஆபிரகாமின் குமாரத்தியாயிருப்பதினால், அவள் சாத்தானின் கட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பது, (கட்டவிழ்ப்பது) கண்டிப்பாகச் செய்ய வேண்டிய, பூரண அவசியமான காரியம் என்று, இயேசு கூறுகிறார்.

ஊ. ஆபிரகாமின் இழந்துபோன பிள்ளைகளாகிய யூதர்களுக்காக இயேசு முதலாவது வந்தார். (மத்தேயு 15:24) இயேசுவின் மீது வைக்கும் அவர்களுடைய விசுவாசத்தினால், விசுவாசிகள் யாவரும் ஆபிரகாமுடைய குமாரர்களும், குமாரத்திகளுமாயிருப்பதற்காக தேவனைத் துதியுங்கள். கலாத்தியர் *3:6-7, 29;* ரோமர் 4:11-12, 16) ஆகவே, நாம் யூத சந்ததியாராயிருப்பதினால், நம்முடைய பலவீனங்களிலிருந்து நோய்களிலிருந்தும் சாத்தான் நம் வாழ்க்கையில் கொண்டுள்ள வல்லமை மற்றும் அதிகாரத்திலிருந்தும், (கூனியான யூத ஸ்திரியைப்போல்) விடுதலையாக்கப்படுவது முற்றிலும் கட்டாயம் அவசியமானதாக இருக்கிறது! விசுவாசியான ஆபிரகாமுடனே நாமும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்! *(கலாத்தியர் 3:9)*

2. சாத்தானால் கட்டுண்டவர்களை விடுவிக்க இயேசு வந்தார் (13:12, 16, 17)

ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட கூனியான பெண்

லூக்கா 13:1-17

அ. வசனம் 12. "இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: "ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்", அந்த ஸ்திரீ, நன்றாகத் தெரியும்படியாக ஜெப ஆலயத்தில் உட்கார்ந்திருந்தாள், எனவே, இயேசு அவளை அழைத்து, அறையின் முன்பாகத்தில் வந்து நிற்கும்படி கூறினார். "விடுதலையாக்கப்பட்டாய்", என்றால் கட்டவிழ்க்கப்பட்டாள் அல்லது பலவீனத்திலிருந்தும் அதற்குக் காரணமான பொல்லாத ஆவியிலிருந்தும் பிரிக்கப்பட்டு சுயாதீனமானாள், உடனடியாக விடுதலையானாள் என்றும் இங்கு பொருள்படும்.

ஆ. வசனம் 13. "அவள்மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்". அந்த ஸ்திரீ கூனியாயிருப்பதற்கும் காரணமான பொல்லாத ஆவியை இயேசு வெளிப்படையாக ஏற்கனவே துரத்திவிட்டார். ஆகவே அந்த ஸ்திரீ கூனியிலிருந்து சுகமாக்கப்பட (குணமாக) அவர் தமது கைகளை அவள் மீது வைத்தார். (கைகளை வைத்து ஜெபிப்பது-யாக்கோபு *5:14; அப்போஸ்தலர் 28:8)* அவள் உடனடியாக, பதினெட்டு வருடங்களில் முதல்முறையாக நிமிர்ந்து நின்றாள்! இயேசு அவளுக்குச் செய்த இக்காரியத்திற்காக, தேவனை உயர்த்தி, அவருக்கு துதியும், கனமும் உடனே ஏறெடுத்ததில் ஆச்சரியமில்லை, இயேசுவையும், அவருடைய தெய்வீக அதிகாரத்தையும், அவர் எதற்காக வந்தார் என்பதையும், பிதாவாகிய தேவனையும், அவளால் இணைக்க முடிந்தது.

இ. யோவான் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்". இயேசு சாத்தானாகிய பலவானைக் கட்டவே வந்தார் மற்றும் ஆபிரகாமின் சந்ததியாரை, சாத்தானுடைய வல்லமையிலிருந்தும் அதிகாரத்திலிருந்தும், அவர்களுடைய வாழ்க்கையில் அவன் நடப்பித்த காரியங்களிலிருந்தும் (சரீரத்திலும், உணர்ச்சிகளில், ஆவிக்குரிய, சன்மார்க்க பாவங்கள் - மாற்கு *3:27;* லூக்கா *4:16-19)* விடுவிப்பதற்காக இயேசு வந்தார். அவரில், தங்களுடைய விசுவாசத்தை வைக்கும், ஒவ்வொருவருக்கும் இதே காரியத்தைச் செய்ய, அவர் (இயேசு) இந்த கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கிறார்!

இவர்கள் ஆபிரகாமின் உண்மையான குமாரர்களும் குமாரத்திகளுமாயிருக்கிறார்கள் (ரோமர் *2:28-29).* இன்று சில பக்திமார்க்கத் தலைவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப்பற்றிக் கருத்தில் கொள்ளாமல், தேவனுடைய இராஜ்ஜியம் இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், அவருடைய கல்வாரி மரணத்தினால், இயேசு சாத்தானை மேற்கொண்டார் என்பதையும் காட்ட, தேவன் இன்னும் அற்புதங்களை நடப்பிக்கும் காலமாக இருக்கிறது (லூக்கா 4:43, 10:9-11; கொலோசெயர் *2:15).*

ஈ. வசனம் 14. "இயேசு ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி", "வேலை செய்வதற்கு...... ஓய்வு நாளில் அப்படிச் செய்யலாகாது". "ஓய்வு நாளைக்குறித்த காரியம்", இயேசுவுக்கும், வேதபாரகர் மற்றும் பரிசேயர்களுக்கும் இடையே அபிப்பிராய பேதம் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இதற்கு முன்பாகவே இருந்து வந்தது (6:1-11).

ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட கூனியான பெண்

லூக்கா 13:1-17

அந்தஜெப ஆலயத் தலைவன், அந்த ஜெப ஆலயத்தில் நடைபெறும் காரியங்களுக்கு இன்னும் தான் தான் பொறுப்பு என்பதை வெளிப்படையாகக் காட்ட, கூடியிருந்த ஜனங்களை நோக்கிப் பேசுகிறான். அவன் "கோபமடைந்தான்" என்று வேதம் கூறுகிறது. இது, அவன் மிகவும் வெறுப்படைந்தான், அவனுடைய ஜெப ஆலயத்தில் இயேசு பிசாசைத் துரத்தி, அந்தப் பெண்ணை ஓய்வு நாளில் குணமாக்கினதினால் துக்கப்பட்டு வேதனையடைந்தான் என்றும் பொருள்படும். இதைத் தடை செய்வதற்கு நான்காவது கற்பனையை அடிப்படையாக அவன் பயன்படுத்தினான்.

உ. வசனம் 15. "கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்திரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய் அதற்குத் தன் தண்ணீர் காட்டுவதில்லையா? "மாயக்காரனே" என்றால் மற்றொரு மனிதனின் நடத்தைப் போல் நடித்துக்காட்டும், நடிகன்; பாசாங்கு செய்பவன், ஒரு காரியத்தைக் கூறுவான். ஆனால் வேறுவிதமாக வாழ்க்கை நடத்தவான், என்று பொருள்படும். அவர்கள் செய்கைகளும், நினைவுகளும் மாய்மாலமாகவும், தவறானவைகளுமாயிருக்கிறது என்பதை மக்களுக்குக்காட்ட, இயேசு அன்றாடக வாழ்க்கையிலிருந்து ஒரு எடுத்துக்காட்டை பயன்படுத்துகிறார். ஓய்வுநாட்களிலும், அவர்களுடைய மிருகங்களைக் கவனிப்பதற்கு, அவர்கள் பழக்கப்பட்டவர்கள். ஆனால் மற்றொரு மனிதனுக்கு உதவிசெய்ய முன்வரமாட்டார்கள்.

இவர்கள் மிருகங்களைக் குறித்து அதிக கரிசனை உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு வருடமும், ஒன்று அல்லது ஒன்றரை மில்லியன் கருவிலிருக்கும் குழந்தைகள் கொலை செய்யப்படுவதைக் குறித்து நினைத்துப் பார்க்கமாட்டார்கள்!

ஊ. வசனம் 16. "இதோ, சாத்தான் பதினெட்டு வருடமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை, ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா?" மானிடர்கள், சிறப்பாக ஆபிரகாமின் குமாரத்தி, மிருகங்களைவிட, விலையேறப்பட்டவர்களும் முக்கியமானவர்களுமாயிருப்பதினால், அவர்கள் ஓய்வுநாளில் கவனிக்கப்பட வேண்டியதில்லையா? (12:6-7, 24) அவர்கள் சாத்தானின் வல்லமையிலிருந்தும், சரீர பலவீனங்களிலிருந்தும், ஓய்வுநாளில் விடுவிக்கப்பட வேண்டியதில்லையா? (முழுவதுமாக, உடனடியாக கட்டவிழ்க்கப்பட அல்லது விடுதலையாக்கப்பட) சாத்தானின் வல்லமை இயேசு கிறிஸ்துவினால் மேற்கொள்ளப்பட்டது வெளியரங்கமாக்கப்பட வேண்டாமா? திட்டமாக! "இல்லையா" என்ற சொல், இந்த வசனத்தில் "திட்டமாக இல்லை", இது மிக அத்தியாவசியம் என்று பொருள்படும். எனவே ஆபிரகாமின் பிள்ளையாகிய இந்தப்பெண், மிருகங்களுக்கு மேலாகக் கவனிக்கப்பட்டு, சாத்தானின் கட்டுகளிலிருந்தும், சரீர குறைபாட்டிலிருந்தும், வாரத்தின் எந்த நாள் என்பதைக் குறித்து கவலைப்படாமல் விடுவிக்கப்பட வேண்டியது (கட்டவிழ்க்கப்பட) முற்றிலும் மிக அவசியம்!

எ. வசனம் 17. "அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்". இது அந்த ஜெப ஆலயத் தலைவனையும், அவனை ஆமோதித்த எல்லோரையும் குறிக்கிறது. இது, இன்றும் யார் யாரெல்லாம் இப்படிப்பட்ட

ஓய்வு நாளில் குணமாக்கப்பட்ட கூனியான பெண்

லூக்கா 13:1-17

மூடத்தனமான சட்டங்களையும், தடை உத்தரவுகளையும் பிடித்துக்கொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்கும், அவர்கள் சபைக்குள் அல்லது சபைக்கு வெளியில் இருந்தாலும் இது பொருந்தும். "வெட்கப்பட்டார்கள்" என்றால், அவமதிக்கப்பட்டார்கள், தாழ்மைப்படுத்தப்பட்டார்கள், வெட்கப்படுத்தப்பட்டார்கள் மற்றும் மாயக்காரர் என்று அறிவிக்கப்பட்டும் நிரூபிக்கப்பட்டதினால், அவமானத்தால் முகம் சிவப்பாக மாறும் நிலையை அடைந்தனர், என்று பொருள்படும்.

ஏ. வசனம் 17. "ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக்குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்". நீண்ட காலமாக சாத்தானால் கட்டப்பட்டவர்களை இயேசுவானவர் சுகமாக்கி, விடுவித்ததைக் கண்டு சந்தோஷப்படும் (உவகையடைவது, மகிழ்ச்சியால் பொங்கிவழிவது, களிகூருவது) மக்களுக்காக, தேவனைத் துதிப்போம். இவர்களுக்கும், இயேசு, அவருடைய தெய்வீக அதிகாரம், மற்றும் அவர் எதற்காக வந்தார், பிதாவாகிய தேவன் ஆகிய இவர்களை இணைக்க முடிந்தது! கிறிஸ்து தோன்றினதால் தேவனுடைய இராஜ்ஜியம், மனிதர்கள் மத்தியில், மெய்யாகவே வெளிப்படுத்தப்பட்டது என்பதை இவர்களால் அறிந்து கொள்ள முடிந்தது.

முடிவுரை

அ. சாத்தானால் கட்டுண்டவர்களை விடுவிக்க இயேசு வந்தார். இக்காரியத்தை அவருடைய பிள்ளைகளுக்குச் (ஆபிரகாமின் குமாரர்களுக்கும், குமாரத்திகளுக்கும்) செய்ய இந்தக் கூட்டத்தில் அவர் பிரசன்னராயிருக்கிறார். இந்த நேரத்திலும் தங்களுடைய விசுவாசத்தை அவர்மீது வைக்க விருப்பம் உள்ளவர்களுக்கும் அவ்வாறே செய்வார். ஆதிகால சீடர்களுடன் சேர்ந்து, "தேவனுடைய இராஜ்ஜியம் உனக்கு சமீபமாயிருக்கிறது", என்று நாமும் கூறலாம். இதை, இயேசு வெளிப்படையான அடையாளங்களையும் அற்புதங்களையும் அவருடைய நாமத்தில் செய்து நிரூபிப்பார் (மாற்கு 16:20; லூக்கா 10:17-19). இது, வாரத்தில் எந்த நாளில் நிகழ்ந்தாலும் அதைப்பற்றிக் காரியமில்லை! மிருகங்களுக்குக் கவனம் செலுத்துவது, மற்றும் அவற்றின் விடுதலை அல்லது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்துடன், யூத மூப்பர்கள் சேர்த்துக் கொண்ட பாரம்பரியக் கொள்கைகளைக் கைக்கொள்வது ஆகிய இவற்றை விட மானிடர்கள், அவர்களுடைய பராமரிப்பு மற்றும் விடுதலை ஆகியவைகளே கர்த்தருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

சீடத்துவத்தின் கிரயம்
லூக்கா 14:25-35

முன்னுரை

அ. இந்த சம்பவம் எந்த இடத்தில், அல்லது எந்த சூழ்நிலை சந்தர்ப்பத்தில் நிகழ்ந்தது என்று லூக்கா நமக்கு அதிகமாகக் கூறவில்லை. அவர் கூறுவதெல்லாம், "அநேக ஜனங்கள் அவரோடே கூடப் பிரயாணமாய் போகையில்" என்று மட்டும் உள்ளது. ஆகிலும் இயேசு, "எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் உபதேசம் பண்ணிக்கொண்டு போனார்" என்று நமக்குத் தெரியும் (13:22). இது, அவர் "பிரபலமாக" (கீர்த்தி பெற்ற) இருந்த நாட்கள் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இந்த சமயத்தில் இயேசு தம்மைப் பின்சென்று வந்த திரள் கூட்டமான மக்களிடம் திரும்பி, சீடத்துவதத்தின் விலைமதிப்பைக் குறித்து விவரித்தார்.

1. பூரண அர்ப்பணிப்பே சீடத்துவத்தின் கிரயம் (14:26-27)

அ. வசனம் 26. "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும்... வெறுக்காவிட்டால்..." "என்னிடத்தில் (இயேசுவிடம்) வந்து" என்றால், இயேசுவோடு கூட சகவாசம் செய்ய நெருங்கிச் சேர்ந்து, அவர் கூட செல்வது, அவருடன் தொடர்ந்து கூட இருக்கும் விருப்பத்தை இது தெரிவிக்கிறது.

ஆ. "வெறுக்காவிட்டால்", இது ஒப்பிட்டுச் சொல்லும் ஒரு சொற்றொடராக இங்கு இருக்கிறது. (இயேசுவுடன் நமது சம்பந்தத்தையும், நம்முடைய குடும்பத்தாருடன் உள்ள நமது சம்பந்தத்தையும் ஒப்பிடுவது).

"ஒருவன் இயேசுவுடன் கூட இருக்க விரும்பினால், அவனுடைய நெருங்கிய குடும்பத்தார்களும், (தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியவர்கள் உள்ளடங்க - மத்தேயு 10:35-37) முன்பாக முதல் இடத்தை, அவனுடைய வாழ்க்கையில் அவன் கொடுக்க வேண்டும்".

இ. வசனம் 27. "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு, எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான்". சிலுவை, மிகுந்த அவமாத்திற்கும், வேதனைக்கும் அடையாளமாக, யாவரும் அறிந்த, வெறுக்கப்பட்ட ஒரு சின்னம். இது இங்கு, பூரண அர்ப்பணிப்பின் (மரணபரியந்தம்) அவசியத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக, அவர் கூட சேர்ந்து இருக்க விரும்பும் ஒருவனுக்கு, இயேசுவால், இங்கு பயன்படுத்தப்பட்டது. வாழ்க்கைப் பயணத்தில் அவருடன் சேர்ந்து செல்ல (மத்தேயு 10:38; லூக்கா 9:23; யோவான் 12:25; அப்போஸ்தலர் 1:8 இங்கு "சாட்சி" என்ற சொல், இரத்தசாட்சி என்று பொருள்படும்).

ஈ. எனவே, சீடத்துவம் என்பது, தன் ஆர்வ ஊழியம் சிலகாலம் செய்வது, அல்லது ஒருவன் தன்னுடைய சொந்த முறைகளில், தன்னுடைய வசதிக்கேற்ப சாட்சியாயிருப்பது என்பதற்கும், மேலானது. மரணத்தைச் சந்திக்க நேர்ந்தாலும், அல்லது ஒருவன் தனக்கு இருக்கிற அல்லது இருக்கப்போகிறவைகள் அல்லது இந்த உலகத்தில் தான் எதிர்பார்க்கிற அல்லது எதிர்பார்க்கும் நன்மைகள் அனைத்தையும் விட்டுவிலக வேண்டிய நிலையிலும் இயேசுவுக்குப் பரிபூரண அர்ப்பணிப்புடன் ஒப்புக்கொடுப்பதுதான் சீடத்துவம். உன்னுடைய நெருங்கிய குடும்பத்தாரில் ஒருவர் அல்லது எல்லாரையும் விட்டு பிரிய நேர்ந்தாலும், அவரைச் சேவித்து, அவருக்குச் சாட்சியாக இருப்பது என்று இது பொருள்படும்' (1கொரிந்தியர் 15:31) "சீடன்" என்ற பதம், மற்றொருவரிடம் முழுநேரமும், கற்றுக்கொள்பவன், மாணாக்கன், பண்டிதன் என்று பொருள்படும்.

**சீடத்துவத்தின்
கிரயம்
லூக்கா 14:25-35**

உ. இயேசுவின் காலத்தில், ரோம சேனை வீரர்களால், ஒரு ஊரிலிருந்து ஒருவன் எடுத்துச் செல்லப்பட்டு, அவனிடம் ஒரு சிலுவையைக் கொடுத்து, சுமந்து செல்லும்படி அழைத்துச் சென்றால், அது அவன் மரணத்தை நோக்கி பயணம் செய்கிறான் என்று பொருள்படும். அவனால் திரும்பிப் பார்க்க முடியாது. இந்த வேதாகம வசனத்தில், இதைத்தான் இயேசு குறிப்பிடுகிறார் (யோவான் 19:16-17).

2. இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள், சீடத்துவத்தின் கிரயத்தை முதலாவது ஆலோசிக்க வேண்டும் (14:28-35).

அ. வசனம் 28-33. அவரை உண்மையில் பின்பற்ற ஆரம்பம் செய்வதற்கு முன்னால், சீடத்துவத்தின் விலைக் கிரயத்தைக் குறித்து, ஒருவன் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும் என்று பொருள்பட இரண்டு எடுத்துக்காட்டுகளை, 28-33 வசனங்களில் இயேசு நமக்குக் கொடுக்கிறார். அவைகள் எச்சரிப்பின் வார்த்தைகளையும் இருக்கிறது.

1. வசனம் 28-30. ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருக்கிறவன், முதலாவது உட்கார்ந்து, அந்த கட்டிடத்தைக் கட்டுவதற்கான மொத்த செலவைக் கணக்கிட்டு மதிப்பிட வேண்டும். அவன் தன்னிடம் போதுமான அளவு பணம் இல்லை என்று நினைத்தால், பொது மக்களின் பரிகாசத்தையும், அவமானத்தையும் தவிர்க்க, கட்டடத்தைக் கட்டத் துவங்காமல் இருப்பதே ஞானமாயிருக்கும்.

அவ்வாறாகவே, ஒருவன் இயேசுவுக்கு பரிபூரணமாக அர்ப்பணிக்க மனமில்லாமல் இருக்கும்போது, அவரைப் பின்செல்ல துவங்கவே கூடாது! அவர்கள் பொது மக்களால் அவமானம் அடைவது மட்டுமல்லாமல் இயேசுவுக்கும் வெட்கத்தையும், அவமானத்தையும் கொண்டுவருகிறார்கள்! (எபிரெயர் 6:6)

2. வசனம் 31-33. ஒரு அரசன், 10,000 மனிதர்களுடன் 20,000 மனிதர்களையுடைய மற்றொரு அரசனுக்கு எதிராக யுத்தம் செய்ய செல்கிறான். அவன் 20,000 மனிதர்களுடன் வரும் அரசனுக்கு எதிராக போரிட்டு வெற்றிபெற, தன்னால் கூடாது என்று தீர்மானித்தால், அந்த அரசன் இன்னமும் வெகு தூரத்தில் இருக்கும்போதே, தன்னுடைய பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை அனுப்பி, சமாதானத்துக்கேதுவான நடவடிக்கைகளை எடுப்பதே ஞானமான காரியம். இவ்வாறாகவே, ஒருவன், இயேசுவுக்குப் பரிபூரணமாக அர்ப்பணிக்கத் தான் ஆயத்தமாக இல்லை என்று தீர்மானித்தால் (அரைமனதுடன்) அவன் அவரைப் பின்செல்ல ஆரம்பம் செய்யாமலே இருக்க வேண்டும். "தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விட்டவன்" (வசனம் 33) என்றால், தனக்குண்டான உடைமைகள், கனவுகள் (வீண் ஆசைகள்), வாஞ்சைகள், இந்த உலகத்தின் வழிபாடுகள் ஆகிய இவையாவற்றையும் முற்றிலுமாக விட்டுவிட தீர்மானிக்க வேண்டும், என்று பொருள்படும்.

ஆ. வசனம் 34. "உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?" மத்தேயு 5:13, வசனத்தையும் பார்க்கவும். உணவுப் பொருட்களைப் பாதுகாக்கவும், நறுமண சுவையைக் கொடுக்கவும் உப்பு நல்லது.

சீடத்துவத்தின் கிரயம்
லூக்கா 14:25-35

ஆகிலும், சவக்கடல் உப்பளங்களிலிருந்து எடுக்கப்படும் உப்பு ஏராளமான அசுத்தங்கள் கலந்ததாக இருக்கும். சில மனச்சாட்சியற்ற வியாபாரிகள் லாபத்திற்காக "இரசாயன பொருட்கள்" சேர்க்கப்படுகிறது. ஆகவே, "உப்பு" என்று இங்கே குறிப்பிடப்படுவது, கரைந்திருக்கும் வேண்டாத பொருட்களை வடிகட்டி நீக்கிய பின், மற்றும் கழிவுகள், அசுத்தங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றைப் பிரித்த பிறகு கிடைக்கும் "உப்பு" என்று பொருள்படும்.

இ. வசனம் 35. "அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள்". அசுத்த உப்பை, அசுத்தங்களை நீக்கும் பொருட்கள் வழியாக வடிகட்டியபின் கிடைக்கும் கழிவு அல்லது அசுத்தங்கள், நிலத்திற்காகிலும் (உரமாக) அல்லது எருவை உரமாகும் (அழுக வைக்கும்) பொருளாகவாவது பயன்படுத்த முடியாது. அவை குடும்பப் பெண்களால் தெருவில் எறியப்படும்.

ஈ. இந்த அசுத்தங்களும் இரசாயனப் பொருட்களும் சேர்ந்த பொருள் (சாரமற்ற உப்பு) எறியப்படுவதுபோலவே, இயேசுவைப் பின்செல்ல விரும்பியும் கீழ்க்கண்டவற்றை செய்யாதவர்களுக்கும் நடைபெறும்:

1. விலைக் கிரயத்தைக் குறித்து ஆலோசிக்காதவர்கள்.

2. பரிபூரணமாக அர்ப்பணிக்காதவர்களும் மற்ற யாவருக்கும் மேலாக அவரை வைக்க விரும்பாதவர்கள்.

3. அவருக்காக யாவற்றையும் விட்டுவிட ஆயத்தமாயில்லாதவர்கள்.

அர்கள் சீக்கிரத்தில் தங்கள் சாரத்தை இழந்து, தாங்களாகவே அவரைவிட்டுப் பிரிந்து, தங்கள் மீதும் அவ்விதமாகவே அவர் (இயேசு) மீதும் அவமரியாதையைக் கொண்டு வருவார்கள்! இவர்கள், அவரைப் பின் செல்லாமலே இருந்திருப்பார்களேயானால் நலமாயிருந்திருக்கும்.

உ. வசனம் 35. "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்". "கிறிஸ்துவை பின்செல்ல (அல்லது அவரைப் பின்பற்றிச் செல்லும்) விரும்புகிற ஒவ்வொருவருக்கும் இந்த உபதேசம் கொடுக்கப்படுகிறது. அவருடைய சீடனாக இருக்க (அல்லது தொடர்ந்து அவரைப் பின்பற்ற) தீர்மானம் செய்வதற்குமுன் இந்த உபதேசங்களைத் தங்களுடைய மனதில் வைத்து ஆலோசிக்க வேண்டும்!

முடிவுரை

அ. பரிபூரண அர்ப்பணிப்பே இயேசுவுக்குச் சீடனாயிருப்பதின் கிரயம். ஆகவே, வாழ்நாள் முழுவதும் அவருடைய சீடர்களாக இருந்து, அவரைப் பின்பற்ற விரும்புகிறவர்கள், (அவர் கூட இருந்து, அவரோடு செல்ல) எல்லோருக்கும் முதலாவதாக அவரை வைக்கவும், அவர்களுடைய மீதமான வாழ்நாள் காலத்தில், அவருக்காக யாவற்றையும் விட்டுவிடவும், தங்களுடைய இருதயத்தில் தீர்மானம் செய்ய வேண்டும்!

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

முன்னுரை

அ. தேவன் பாவிகளை மன்னிக்கிறார் மற்றும் நேசிக்கிறார் என்பதே இந்த உவமையின் மொத்தக் கருத்து.

ஆ. "காணாமல் போன ஆடு", "காணாமல்போன காசு" ஆகிய உவமைகளுக்குப் பின் இந்த உவமை உள்ளது. இந்த இரண்டு உவமைகளுக்குப் பின், இவ்வாறு கூறப்படுகிறது, "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்". (தேவனுக்கு விரோதமான அவனுடைய பாவங்களுக்காக) (15:7,10)

இ. பரிசேயரும் வேதபாரகரும், "இவர் பாவிகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்" என்று முறுமுறுத்ததினிமித்தம், இயேசு இந்த இரண்டு குழுக்களையும் மனதில்வைத்து, மூத்தகுமாரனைப் பற்றிக் கூறியிருக்கக் கூடும். மனந்திரும்பி வந்த சகோதரனைக் குறித்தும், அவர்களுடைய தகப்பனிடம் மன்னிப்புக்கேட்டதைப் பற்றியும் அவன் சிறிது கூட அக்கரைப்படவில்லை. இளைய குமாரன் திரும்பி வந்ததற்காகத் தகப்பனோடு சேர்ந்து களிகூருவதற்குப் பதிலாக, இளைய குமாரன் அவனுடைய ஆஸ்தியை வீணாக செலவழித்துவிட்டுத் திரும்ப வருவதற்கு முன்பாகவே திட்டமாக, அவனுடைய இருதயத்தில் வைத்திருந்த எரிச்சலையும் கோபத்தையும், இப்பொழுது கசப்படைந்து வெளிப்படுத்தினான். இளையகுமாரன் அவனுடைய சகோதரன் என்பதைக்கூட மறுத்தான்.

ஈ. இந்த உவமையில், தகப்பன் பிதாவாகிய தேவனையும், இளைய குமாரன் இழந்துபோன மனந்திரும்பிய பாவிகளையும், மூத்த குமாரன் மன்னிக்க முடியாத மனப்பான்மையையுடைய பரிசேயரையும், வேதபாரகர்களையும், கிறிஸ்துவுக்கு விரோதமான அவர்களுடைய எரிச்சலையும் குறிப்பிடுகிறது.

1. தேவன், பாவிகளை மன்னிக்கிறார் மற்றும் நேசிக்கிறார் (15:11-24)

அ. வசனம் 12. "அவர்களில் இளையவன் (குமாரன்) தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான்". இளைய குமாரனின் பங்கு மூன்றில் ஒன்றாக இருக்கவேண்டும். தகப்பனுடைய மரணத்திற்குப்பின் சாதாரணமாக அது பெற்றுக்கொள்ளப்படும். பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தின்படி மூத்தமகன், ஆஸ்தியில் மூன்றில் இரண்டு பாகத்தைப் பெற்றுக்கொள்ளுவான். (உபாகமம் 21:17)

ஆ. வசனம் 13-14. எனவே இளைய குமாரன் அவனுடைய ஆஸ்தியையும் உடைமைகளையும் சேர்த்துக்கொண்டு நீண்ட பயணம் செய்தான். ஏற்கனவே, தான் என்ன செய்ய வேண்டுமென்பதைத் திட்டமாகத் தீர்மானித்துக்கொண்டான்: "சிற்றின்ப வாழ்க்கை" கவலையற்ற, கட்டுப்படாத, வெட்கப்படதக்க, துன்மார்க்கமான ஊதாரித்தனமான வாழ்க்கை மாதிரியில், அவன் சென்று தூரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் வாழ்ந்தான் என்று பொருள்படும்.

இ. ஒன்றிற்குப் பதிலாக இரண்டு துன்பங்கள் அவன் மீது வந்தது:

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

1. அவன் தன்னுடைய பணத்தை வீணாக விரயம் செய்துவிட்டான். எனவே "தேவை" உள்ளவனானான், (ஆதரவற்றவன்). வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை இழந்தான்.

2. இதே நேரத்தில் கொடிய பஞ்சம் அந்த நாட்டில் ஏற்பட்டது. ஆகவே, காணாமல் போன குமாரன் அந்நிய நாட்டில், ஒரு பணமும், இல்லாமல் அல்லது சம்பாதிக்கும் சக்தியும் இல்லாமல் பஞ்சத்தின் மத்தியில் , (ஒரு சிலரே அவர்கள் விரும்பினால்தான் உதவமுடியும்) தான் இருப்பதை அவன் கண்டான்.

ஈ. வசனம் 15-16. ஆகவே, தனக்கு உதவும்படி வேலைசெய்ய பன்றிக் கூட்டமுடைய ஒரு குடியானவனிடம் ஒட்டிக்கொண்டான். (வேலைக்கு சேர்ந்துக் கொண்டான்). ஒரு யூதனுக்கு இது, மிகக் கீழ்த்தரத்திற்கும் தாழ்மையான அருவருக்கத்தக்க ஒரு சூழ்நிலையாக இருக்கும் (லேவியராகமம் 11:7). அத்துடன் மிக மோசமான காரியம் என்னவென்றால், அவனுடைய கடினமான வாழ்க்கைக்கு மிகக் குறைவாகவே, இந்த ஒழுங்கு அவனுக்குப் பயன்பட்டது. பன்றிகளையுடைய குடியானவனுக்கு கடினமான காலமாக இருந்தது. பஞ்சத்தினால், அவன் இழந்துபோன குமாரனுக்கு உணவு கொடுக்க முடியாதவனாக அல்லது விருப்பமில்லாதவனாகக் காணப்பட்டான். இப்பொழுது அவன் பன்றிகள் சாப்பிடும் தவிடுகளை (அவரை முதலிய விதைகளை மூடியிருக்கும் நீண்ட தட்டையான, தோல்போன்ற பழுப்பு நிறமாக சதைப்பற்றுடன் கூடியதோடு) உண்ண ஆவலாக இருந்தான்.

இது, உண்மையில் குடியானவர்கள், பன்றிகளுக்கு இரையாகக் கொடுக்கும், காராபு மரத்தின் (Carob- trees) விதைகள், மிக ஏழைகள் இந்த விதைகளை உணவாக உட்கொண்டனர்.

உ. வசனம் 17. "அவன் புத்தி தெளிந்தபோது..." அவன் தன்னுடைய பரிதாபமான நம்பிக்கையற்ற நிலையை அறிந்தபோது, அவனுடைய தகப்பனுடைய வேலைக்காரர்களுடன் அதை ஒப்பிட்டுப் பார்த்து,அவன் சந்திக்க வேண்டிருக்கும் அவமானத்தையும், குற்றமுள்ள மனச்சாட்சியையும், எண்ணிப்பார்க்காமல், அவன் எங்கே போகவேண்டும் என்று அறிந்து கொண்டான்: அவனுடைய தகப்பனாருடன் இருக்க திரும்ப வீட்டிற்குச் செல்ல என்று இது பொருள்படும். இது அவனுடைய தகப்பனார் மற்றும் குடும்பத்தில் அவன் வாழ்க்கை சார்பாக, அவனுடைய மனப்பான்மையில் முற்றிலும் மாறிவிட்டான் என்றும் பொருள்படும். அவ்வாறாகவே, மனிதர்களைத் திரும்ப தம் பக்கமாக இழுத்துக் கொள்ள, தேவன் நம் வாழ்க்கையில் கடினமான, சூழ்நிலைகளை பயன்படுத்துகிறார் (யோவான் 6:44). இந்த மகன் அறியாமலே, அவனுடைய துன்பங்கள், இரட்சிப்புக்கும், அவனுடைய தந்தையுடன் புதிய, அழகான உறவிற்குள்ளும் கொண்டு வந்தது.

ஊ. வசனம் 18-19. " நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய்....என்பேன்..." இந்த காணாமல் போன குமாரனின் இந்த ஆயத்த பேச்சில் இரண்டு முக்கியமான காரியங்கள் அடங்கியுள்ளது.

1. "தகப்பனே, பரத்திற்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன்". மனந்திரும்புவதற்கு (ஒரு சுற்று திரும்புவது) முதல்படியாக, தான் ஒரு பாவி என்று உணர்ந்தான்.

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

கிறிஸ்துவுக்கு வெளியே உள்ள ஒவ்வொரு நபரிடமும் பரிசுத்த ஆவியானவர், நிச்சயமாகப் பார்க்கவிரும்பும் ஒரு காரியம் இதுவே (யோவான் 16:8-9; ரோமர் 3:23).

2. "இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு, நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் "- இனிமேல் பாத்திரன் அல்ல" என்றால் இனிமேல் தகுதியாயிருக்க மாட்டான் அல்லது பொருத்தமாக இராது என்று பொருள்படும். குமாரன் என்று சொல்லப்படுவதற்குரிய உரிமைகள் யாவையும் தான் இழந்துவிட்டதை அந்த மகன் அறிந்திருந்தான். ஒவ்வொரு அவிசுவாசியிடம் அல்லது விசுவாசத்தை மறுதலித்தவர்களிடம் இந்த உணர்வையும் நிச்சயமாகப் பார்க்க பரிசுத்த ஆவியானவர் விரும்புகிறார். அவர்கள், பிதாவாகிய தேவனுடன் சரியான (நீதியான) உறவுடன் இருப்பதற்குப் பதிலாக தவறான வழியில் இருக்கிறார்கள் (யோவான் 16:8-10). அவர்கள் கிறிஸ்துவிடம் தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவர்களுடைய தகுதியற்றத் தன்மையை விளங்கிக் கொண்டால் அன்றி, அவருக்குமுன் சரியான நிலையை மறுபடியும் பெற்றுக்கொள்ள முடியாது. காணாமல் போன குமாரனின் வார்த்தைகளும், மனப்பான்மையும் "பரிசேயரும் ஆயக்காரனும் உவமையில்", உள்ள ஆயக்காரனின் வார்த்தைகளையும் மனப்பான்மையையும் ஒத்ததாக இருக்கிறது. (லூக்கா 18:13)

ஏ. வசனம் 20. "அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி....."தூரதொடுவானத்தில், தகப்பன் (இவர் தினந்தோறும் எப்போதும் நம்பிக்கையுடன் சாலை வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்). அவருடைய அநேக ஜெபங்களுக்குக் காரணமாயிருந்த ஒன்றைக் கண்டார். அவர்கள் நேருக்கு நேர் சந்தித்தபோது அவர் ஏமாற்றமடையவில்லை. ஏனெனில் அந்த குமாரன், அவர் சார்பான அவனுடைய மனப்பாங்குகளில் முற்றிலும் மாறியிருந்தான்.

ஏ. வசனம் 20."ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்". இது, அவர், அவனை அநேக முறை முத்தஞ்செய்தார் என்று பொருள்படும். தகப்பன், அந்த மகன் தன்னடையில் வரும்வரை காத்திருக்கவில்லை. அவனைச் சந்திக்க ஓடிச் சென்றார், என்பது இங்கு கவனிக்கத் தக்கது. இந்தக் கதையில் உள்ள தகப்பன் நாம் முதன் முதலாக மன்னிப்பிற்காகவும் கிருபைக்காகவும், நம்முடைய பரலோகத் தந்தையிடம் ஓடிவரும்போது, அவருடைய நடத்தையையும், மனப்பான்மையையும் சித்தரித்துக் காட்டுகிறது. (சங்கீதம் 103:13)

ஐ. வசனம் 21-22. "குமாரன் தகப்பன் நோக்கி.......அப்பொழுது தன் ஊழியக்காரரைநோக்கி....." அவருடைய காணாமல் போன குமாரனைத் தகப்பன் கண்டவுடன், அவருடைய குமாரன், அவனுடைய மனந்திரும்புதல் மற்றும் தகுதியற்ற நிலையைக் கூறி முடிப்பதற்கு முன்பாகவே, அவருடைய வேலைக்காரர்களுக்கு உத்தரவிட துவங்கும் அளவிற்கு, உணர்ச்சிவசப்பட்டு மகிழ்ச்சியடைந்தார். சந்தேகமின்றி, இவ்வண்ணமாகவே, பிதாவாகிய தேவனும், அவருடைய காணாமல் போன பிள்ளைகள் அவரிடம் திரும்ப வரும்போது, நடந்து கொள்ளுகிறார். களிகூர்ந்து, சந்தோஷப்படும்படியாக பரலோகம் முழுவதையும் அவர் (தேவன்) கூட்டிச் சேர்க்கிறார்.

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

ஓ. வசனம் 22-23. "சீக்கிரம்! உயர்ந்த வஸ்திரம்.... மோதிரம்... பாதரட்சைகள்.......கொழுத்தகன்று. நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்". இந்தத் தகப்பனார் மனந்திரும்பிய தன்னுடைய குமாரனுக்கு என்ன கொடுத்தாரோ, சிறிதும் மாறாமல் அவ்விதமானவைகளை, பிதாவாகிய தேவன், அவருடைய குமாரர்களுக்கும், குமாரத்திகளுமாக மாறுபவர்களுக்கு, கிறிஸ்து மூலமாகத் தருகிறார்:

1. உயர்ந்த வஸ்திரம்-மரியாதைக்குரிய விருந்தினர்கள் அணியும் சடங்காச்சாரமான மேன்மையான வஸ்திரம்.

2. அவனுடைய விரலில் மோதிரம் - இது தகப்பனுடைய அதிகாரம் மகனுக்குக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது. அவருடைய இடத்தில், உத்தரவு கொடுக்கும் உரிமை.

3. கால்களுக்குப் பாதரட்சைகள் - சுயாதீனமான ஆண்களும் பெண்களும் பாதரட்சைகள் அணிவார்கள். அடிமைகள் வெறுங்காலாகச் செல்வார்கள்.

4 கொழுத்த கன்று அடிக்கப்பட்டது - இந்தக் கன்று சிறப்பான உணவு கொடுக்கப்பட்டு, கவனிக்கப்பட்டு, ஒரு விசேஷமான நேரத்திற்காகக் காக்கப் பாதுகாக்கப்படும். அட்டவணையிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும், அதிகாரம் செய்யும் பதவிக்கும் அடையாளமாக இருக்கிறது (ஆதியாகமம் 41:42; சகரியா 3:4).

ஓ. பரமபிதா, மனந்திரும்பும் பாவிகளைத் திறந்த கரங்களுடன் வரவேற்கிறார் என்றும், இது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், மனக்கிளர்ச்சியையும் உண்டாக்குகிறது என்றும், இயேசு உபதேசித்து விளக்குகிறார் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. ஆகவே, 1. வஸ்திரம் என்பது நீதியின் ஆடையாக இருக்கும். 2. அதிகாரம் என்பது சுவிசேஷத்தை அறிவிக்கவும், பொல்லாத சக்திகள் மீதும் கொடுக்கப்பட்ட அதிகாரம். 3. சுதந்திரம் என்பது, பாவசுபாவத்தின் வல்லமையான தாக்குதலில் இருந்தும், குற்றமுள்ள மனச்சாட்சியிலிருந்தும், பாவத்தின் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்தும் விடுதலை பெறுவது. 4. விருந்துண்டு களிகூறுவது என்பது, மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டாகும் மிகுந்த மகிழ்ச்சி.

ஔ. வசனம் 24. "என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான்......" இரண்டு கூற்றுகளும், ஒருவன் மனந்திரும்பியபின் அவருடைய ஆவிக்குரிய நிலையைக் காட்டுகிறது. பரலோகத்திலிருந்து வந்த தேவனுடைய ஆவியானவரால் மறுபடியும் பிறந்த ஒருவனின் முன் நிலையையும் பின் நிலையையும் காட்டுகிறது, (யோவான் 3:5-8; எபேசியர் 2:1-5; கொலோசெயர் 12:13-14).

2. தேவன் பாவிகள் எல்லோரையும் நேசிக்கிறார் (15:25-32).

அ. வசனம் 25-28. "அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான்". அவன் களிகூருதலையும், கீதவாத்தியத்தையும், வீட்டில் கேட்டபோது, என்ன நடைபெறுகிறது என்று ஒரு வேலைக்காரன் ஒருவனிடம் கேட்டான். அவனுடைய இளைய சகோதரன் வீட்டிற்குத் திரும்பினான் என்றும்,

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

தகப்பன் கொழுத்த கன்றை அடித்தார் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அவன் கோபமடைந்து, மகிழ்ச்சி கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும், வீட்டிற்குள் செல்லவும் மறுத்துவிட்டான். மூத்த குமாரனும் பரிசேயரும் ஒத்திருக்கிறார்கள் என்பதில் தவறில்லை (15:21-2;14:1-2). பெருமை, மனமேட்டிமை மற்றும் சுயநீதி போன்ற மனப்பாங்கையும் வெடித்து வெளிப்படுத்தினான். அத்துடன் அவனுடைய தகுதிக்கு ஏற்றாற்போல் தான் நடத்தப்படவில்லை என்றும் கூறினான் (லூக்கா 14:7).

ஆ. வசனம் 28. "தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான்". "வருந்தி" என்றால் தகப்பன் அவருடைய மூத்த குமாரனை அழைத்து, நெருங்கி அவன் அருகில் சேர்ந்து அவனை தேற்றி ஆறுதல் படுத்த முயன்றார். அவர் உண்மையுடன், மூத்தகுமாரன் விளங்கிக் கொள்ள விரும்பினார். அந்த சூழ்நிலையை அவன் விளங்கிக் கொள்ள, அவர் அவனிடம் கெஞ்சி, ஆர்வமுடன் வேண்டிக்கொண்டார். தனக்கு விரோதமாக சண்டையிடும் குமாரனிடம் அந்த தகப்பன் விடாமல் கெஞ்சி வேண்டிக் கொள்வதிலிருந்து, பிதாவாகிய தேவனும் பாவிகள் எல்லோரையும் நேசிக்கிறார் என்பதை நாம் காண்கிறோம் (ரோமர் 5:6-8,10).

இ. வசனம் 29-30. "அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாக: இதோ, இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து.... நீர் ஒருக்காலும் எனக்கு ஓர் ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை". மூத்தகுமாரனின் மறுமொழியில் தகப்பனுக்கு பயங்கரமான அவமரியாதையையும், மன்னிக்கமுடியாத ஆவியும் காணப்படுகிறது.

1. இதோ! - இந்தச் சொல்லை பயன்படுத்தும் போது, ஒருவர் மற்றொருவரிடம், "நீ ஒரு குற்றவாளி, ஒரு பாவி, நீ தவறிழைத்த ஒரு குற்றவாளி, நீ என்னை கோபப்படுத்தியிருக்கிறாய்" என்று கூறுவதாகும். இது ஒரு திடுக்கிடச்செய்யும், மரியாதையற்ற இருதயத்தை வெளிப்படுத்தும், அவமரியாதையான சொல்.

2. "இத்தனை வருடகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து". மூத்தகுமாரன் இவ்வாறு கூறுகிறான்: "என்னுடைய வாழ்நாள் காலம் முழுவதும், நீர் என்னை குமாரனாக நடத்துவதற்குப் பதிலாக அடிமையைப்போல் நடத்தியிருக்கிறீர்; நான் எப்போதும் உமக்கு அடிமைப்பட்டவனாகவே உணருகிறேன்!

3. "என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி, நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை", "கொழுத்த கன்றை" புசித்து விருந்து கொண்டாடுவதை விட, ஒரு ஆட்டுக்குட்டியின் விருந்து கொண்டாட்டம் மிகக் கீழ்த்தரமான மேன்மையற்ற ஒன்றாக இருக்கும். இது உண்மையான அல்லது உண்மையற்ற கூற்றாக இருக்கலாம். எப்படியிருப்பினும், இது தகப்பனுக்கு விரோதமாக, மூத்தகுமாரனின் இருதயத்தில் எரிந்து கொண்டிருந்த அதிருப்தியையும் கோபத்தையும், கசப்பையும் வெளிப்படுத்துகிறது.

4. "உம்முடைய குமாரனாகிய இவன்". மூத்தகுமாரன் கெட்ட குமாரனைத் தனக்குச் சொந்தமானவன் என்பதையும் கூட தள்ளிவிட்டு, தன்னுடைய சகோதரனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான் என்று இந்த வார்த்தை காட்டுகிறது. எனவே அவன் திரும்பிவந்ததை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்கு மறுத்துவிட்டான்!

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

ஈ. தகப்பனுடைய மறுஉத்தரவு, "எனக்குள்ள தெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது", என்பது அந்த தகப்பன், மூத்தகுமாரனுக்குரிய சுதந்தரத்தை ஒருபோதும் தடைசெய்ய நினைக்கவில்லை. அவன் நியாயமாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய யாவற்றையும் அவருடைய குமாரனாக அவனுக்கு இருந்த உரிமைகளை மூத்தகுமாரன் அறியவில்லை. இவ்வாறாகவே, பிதாவாகிய தேவனுக்கு விரோதமாகத் தொடர்ந்து போராடுபவர்களும், இந்த மூத்தமகன் போல, கிறிஸ்துவின் மூலமாக அவர்கள் திரும்ப வருவார்களேயானால், தேவன் அவர்களுக்காக ஆயத்தம் செய்துவைத்திருக்கும் சுதந்தரத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. அவ்வாறே பரிசேயர்களும், வேதபாரகர்களும் இருந்தார்கள். முதல், முதலாவதாக அவர்களுடைய நன்மைக்காவே, இயேசு அனுப்பப்பட்டார் என்பதை அறிந்து கொள்ள தவறினார்கள் (மத்தேயு 15:24).

உ. வசனம் 32. "உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான், காணமற்போனான், திரும்பவும் காணப்பட்டான், ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே....." ஒரு பாவி மனந்திரும்பி, பிதாவிடம் திரும்பி வரும்போது, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்பது மிக அவசரமானதும், முற்றிலும் அவசியமுமான காரியம். இது சரியாக இவ்வாறே பரலோகத்தில் நடைபெறுகிறது. எனவே பூமியில், நாம் சரியாக அவ்வாறே செய்ய வேண்டும் (15:7,10).

பாவி இரட்சிக்கப்படுவது, ஆவியில் மரித்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவது, ஆவியில் காணாமல்போனவர்கள் கண்டுபிடிக்கப்படுவது ஆகிய சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதே சரியான பதில் கிரியை.

ஊ. அவனுடைய, ஆவியில் மரித்த சகோதரன் திரும்ப உயிர்ப்பிக்கப்பட்டது அல்லது அவனுடைய, ஆவியில் காணாமல்போன சகோதரன் கண்டுபிடிக்கப்பட்டது, எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை, தகப்பன் மூத்தகுமாரனைத் தூண்டி, அறியச்செய்ய, முடிவாகக் கூடாமல் இருந்தது வருந்தத்தக்கது. தகப்பன், அவனுக்காக வைத்திருந்த சுதந்தரத்தைப் பற்றி மூத்தமகன் அறியவில்லை என்று காணப்படுகிறது. இன்னும், பிதாவாகிய தேவனுக்கு விரோதமாகத் தொடர்ந்து போராடுபவர்களுக்கும், அவ்வாறே, இது உண்மையாக இருக்கிறது. இயேசுவின் காலத்தில், முதலாவது இந்த உவமையைக் கூறினபோது இருந்த பரிசேயர்களுக்கும், வேதபாரகர்களுக்கும்கூட இது உண்மையாக இருக்கிறது.

முடிவுரை

அ. தேவன் மெய்யாகவே பாவிகள் எல்லோரையும் நேசிக்கிறார். அவர்களுடைய பாவங்களையும், கலகக் குணத்தையும் ஒத்துக் கொண்டு அவரிடம் வருவதை அவர் காணும்போது மேலும் அதிகமாக மகிழ்ச்சியடைகிறார். ஆகவேதான் இந்த உவமையில்,

1. தகப்பன் காணாமல்போன குமாரனை சந்திக்க ஓடிச் செல்கிறார். விருந்தை ஆயத்தம் செய்யும் படியாகவும், ஏற்றுக் கொள்வதற்கும் அதிகாரத்திற்கும் அடையாளமான பொருட்களால் அவருடைய குமாரனை அலங்கரிக்க, அவருடைய வேலையாட்களுக்குக் கட்டளையிடுகிறார்.

காணாமல்போன குமாரன்
லூக்கா 15:11-32

2. மூத்த குமாரனிடம், விளங்கிக்கொள்ளும்படி கெஞ்சி வேண்டுகிறார். அவனைத் தேற்றி, ஆறுதல்படுத்த முயற்சிக்கிறார்.

ஆ. ஆகவே, மன்னிப்பிற்காகவும், கிருபைக்காகவும், அவர்கள் அவரிடம் ஓடி வந்தாலும், அல்லது அவர்கள் தொடர்ந்து, அவருக்கு விரோதமாகப் போராடினாலும் பிதாவாகிய தேவன் பாவிகள் எல்லோரையும் நேசிக்கிறார். பரலோகத்தில் தலைவாயிலில் நின்று, அவர்கள் திரும்ப வீட்டிற்கு வருவதை எதிர்நோக்கித் தொடர்ந்து காத்துக்கொண்டே இருக்கிறார்.

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்
லூக்கா 16:19-31

முன்னுரை

அ. மானிடரின் ஆவியின் ஆரம்பத்தின் விவரம் இவ்வாறாக இருக்கிறது: தேவன் மண்ணினாலே மனிதனை உருவாக்கினார். பின் "ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்". மனிதன், சரீரமும் ஆவியும் உடைய ஒரு நபர் ஆனான். இதுவே, மானிடர்களின் சரீரமும், ஆவியும் முதன் முதலில் தோன்றின வரலாறு. இந்த முதல் சிருஷ்டிப்பு, ஒவ்வொரு முறையும் பெண்ணின் கருவில், மற்றொரு மானிட அங்கம் உருவாகும்போது உற்பத்தி செய்யப்படுகிறது. (சரீரமும் ஆவியும்) (ஆதியாகமம் 2:7; 1:27; 2:22-23)

ஆ. முதல் மனிதனில் ஊதப்பட்ட ஆவி, தேவனுடைய சாயலாக இருந்தது. ஆகவே மானிட வர்க்கத்தின் முதல் மனிதனிலும் அதற்குப் பின் ஒவ்வொரு மனிதனிலும்,

1. நுண்ணறிவு (அறிவு, விவேகம், உள் உணர்வு)

2. உணர்ச்சி (பதில் கிரியை செய்ய உதவும் மனக்கிளர்ச்சி)

3. சித்தம் (தெரிந்தெடுக்கவும், தீர்மானம் செய்யவும் பயன்படும் திறன்)

இ. ஒருவனின் ஆவி, மரணம் வரும்வரை அவனுடைய உடலோடு இருக்கும் அதன் பின் ஆவி சரீரத்தை விட்டுப் பிரிந்து, பிரிந்துபோன ஆவிகளுடைய இடத்திற்குச் செல்லும்.

ஈ. ஐசுவரியவானும், லாசருவும் என்ற கதையில் இரண்டுவிதமான வாழும் வழிகள் எடுத்துக்காட்டப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது:

1. ஐசுவரியவானின் வாழ்க்கை - அவன் சுபநலம் உடையவனாக இருந்து, தவறானவைகளைத் தெரிந்து கொண்டான். அவனுடைய இருதயம், தேவனோடு நேர்மையாக இல்லை. அவனுக்கு தேவனிடத்தில் விசுவாசம் இல்லை.

2. லாசருவின் வாழ்க்கை - அவன் வாழ்க்கை முழுவதையும் வறுமையில் கழித்தான், ஆனால் தேவனோடு நேர்மையாக இருந்த, இருதயம் அவனுக்கு இருந்தது. அவனுடைய பெயரின் பொருள்: "தேவன் என்னுடைய சகாயர்" தேவனிடம் அவன் வைத்திருந்த விசுவாசத்தால் அவன் ஜீவித்தான்.

உ. பூமியில் ஒருவன் வாழும் காலத்தில், தேவனிடம் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் அவன் செய்யும் தீர்மானங்கள், நித்தியமான விளைவுகளையும், அவனுடைய பிரிந்துபோன ஆவி இருக்கவேண்டிய இடத்தையும் முடிவுசெய்கிறது!

1. இயேசுவின் காலத்திற்கு முன் (**Hades** - ஹேட்ஸ்) பாதாளம் (சீயோல்) எல்லா பிரிந்துபோன ஆவிகளின் இடமாக இருந்தது. (லூக்கா 16:19-31)

அ. இயேசு பூமிக்கு வருவதற்குமுன், மரித்தவர்கள் நல்லவர்களும் பொல்லாதவர்களும் "ஹேட்ஸ்" (**Hades**) பாதாளம் - (பூமியில் தாழ்விடங்களிலிருந்த பிரிந்துபோன ஆவிகளின் இடம்) என்ற இடத்திற்குச் சென்றார்கள் என்று லாசருவும் ஐசுவரியவானும் என்ற கதையிலிருந்து நாம் பார்க்கிறோம்.

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்

லூக்கா 16:19-31

ஆ. "ஹேடீஸ்" என்ற சொல் - கே.ஜே.வி. (K.J.V.) வேதாகமத்தில் (நடைமுறையில் உள்ள வேதம்) பதினொரு முறைகள் "நரகம்" என்று தவறாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஹேடீஸ் என்ற சொல் சீயோல் (Sheol) என்று இருக்கிறது (பாதாளம்) (சங்கீதம் 16:10, யோபு 14:13, 24:19) இந்த வார்த்தையும் புதிய ஏற்பாட்டில் - கே.ஜே.வீ வேதாகமம் - பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோளாக கொடுக்கப்பட்டவைகளில் "நரகம்" என்று தவறாக மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இ. ஆரம்பத்தில் ஹேடீஸ் என்ற இடத்தில் இரண்டு தடுக்கப்பட்ட பாகங்கள் இருந்தது:

1. தடுக்கப்பட்ட ஒரு பாகம் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, நீதிமான்களாயிருந்த ஆபிரகாம் போன்றவர்களின் ஆவிகளின் இடம். இது ஹேடீஸ் (பாதாளம்) என்ற இடத்தில் இருந்த பரதீசு (Paradise)

2. தடுக்கப்பட்ட ஹேடீசின் அடுத்த பாகம் பொல்லாத ஆவிகளின் இடம். கடந்த காலத்தில், பொல்லாதவர்களாயிருந்து தேவனிடத்தில் விசுவாசம் இல்லாதவர்கள் ஹேடீசின் (பாதாளம்) இந்த பாகத்திற்குச் சென்றார்கள்.

ஈ. ஒருவரும் ஒருக்காலும் ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திற்கு செல்ல முடியாத அளவிற்கு, ஒரு பெரிய வளைகுடா (நிலத்தால் அதிகமான பாகம் சூழப்பட்ட கடல்) தடுக்கப்பட்ட இரண்டு பாகங்களுக்கு இடையே இருந்தது. ஆகவே ஒருவன் மரித்தால், ஹேடீசில் தன்னுடைய இடத்தை மாற்றிக்கொள்ள முடியாது. இது, மற்றொரு தெரிந்துகொள்ளுதல் செய்வதற்கு, அதிகப்படியான காலதாமதமாகிவிட்டது. (16:26)

உ. இந்த இரண்டு தடுக்கப்பட்ட பாகங்களுக்கிடையே திட்டமாக பெரிய வித்தியாசம் இருந்தது:

1. ஹேடீசில், லாசரு சென்ற பரதீசு ஆறுதலின் இடமாக இருந்தது. (16:25)

2. ஆனால், துன்மார்க்கமான ஐசுவரியமான மனிதன் சென்ற தடுக்கப்பட்ட அடுத்த பாகம் உபத்திரவத்தின் இடமாக இருந்தது. இந்த பாகத்திலிருந்த பிரிந்து சென்ற ஆவிகள், தாங்கொண்ணா துயரத்தில் இருந்தன. (16:23-24,28).

ஊ. இயேசு, தன்னிடம் விசுவாசம் வைத்த சிலுவை மீது இருந்த குற்றவாளியிடம், "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பாரதீசிலிருப்பாய்," என்று கூறினார். (லூக்கா 23:43) அவரும், அந்தக் குற்றவாளியும் ஆகிய இருவரும் சேர்ந்து "ஹேடீசின்" "பரதீசு" இருக்கும் பக்கம் அவர்கள் மரித்தவுடன் இருப்பார்கள் என்று பொருள்பட இயேசு சொன்னார். இங்குதான் அவர்களுடைய ஆவி செல்லும்.

எ. பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு அவனுடைய தீர்க்கதரிசன பிரசங்கத்தில் (சங்கீதம் 16:8-11, மேற்கோளாக எடுத்துக் கூறுகிறார்) மேற்கோளாக கூறியதை என்.ஐவி (NIV) வேதாகமத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: "அவரை (கிறிஸ்து) அழிவைக் காணவொட்டீர்". (KJV வேதாகமத்தில் "நரகம்" என்றுள்ளது) (அப்போஸ்தலர் 2:31) இது உண்மையில் இவ்வாறு பொருள்படும்.

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்

லூக்கா 16:19-31

"அவர், (கிறிஸ்து) மரித்தவர்களின் ஆவிகள் தங்கும் இடமாகிய ஹேட்சில் விட்டுவிடப்படமாட்டார்!" (யாரும் உரிமை பாராட்டாமல்) நிச்சயமாக, அவருடைய சரீரம் அழிவைக் காணவில்லை, ஆனால் உயிர்ப்பிக்கப்பட்டு மகிமைப்பட்டது!

2. இப்பொழுது பரலோகம், விசுவாசிகளின் பிரிந்த ஆவிகளின் இடம். (2கொரிந்தியர் 12:2-4).

அ. "ஹேட்சின்" தடுக்கப்பட்ட ஒரு பக்கத்தில் இருந்த "பரதீசு" வின் இடம் மாறிவிட்டதாக, இந்த வேதவசனத்தில், பேதுரு வெளிப்படுத்துகிறார். பேதுரு அவர் "எடுத்துக்கொள்ளப்பட்டதாகக்" கூறும்போது அவர் இரண்டு இடங்களைக் குறிக்கிறார்:

1. மூன்றாம் வானம்

2. பரதீசு

ஆ. ஆகவே ஹேட்சில், இருந்த இந்த "பரதீசு" பூமியின் தாழ்விடங்களில் இனிமேல் இல்லை. இது, இப்பொழுது, வானலோகத்தில் பூமிக்கு மேலாக இருக்கிறது! ஹேட்சின் "பரதீசு" இருந்த பாகம் இப்பொழுது இயேசுவோடு வானலோகத்தில் இருக்கிறது! இயேசு சிலுவையில் மரித்த பின்பு, மற்றும் அவர் பரலோகத்திற்கு ஏறிப்போவதற்கு முன்பாகவும், ஹேட்சின் தடுக்கப்பட்ட ஒரு பாகத்தில் இருந்த பரதீசுவின் இடத்தில் மாறுதல் ஏற்பட்டது.

இ. இயேசு கிறிஸ்து, அவருடைய உயிர்த்தெழுதலுக்குபின், 40 நாட்கள் அவருடைய சீடர்களுடன் இருந்து பின் பரலோகத்திற்கு ஏறிப்போய் பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். இதுவே பரதீசு இருக்கும் இடம். (அப்போஸ்தலர் 2:32-33).

1. யோவான் 14:2-3 வசனங்களில் இயேசு, அவருடைய பிதாவின் வீட்டில் (பரலோகத்தில்) "நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம் செய்ய" போவதாகக் கூறினார்.

2. அப்போஸ்தலர் 1:9-11 வசனங்களில், சீடர்கள் எல்லோரும் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு பரலோகத்திற்கு ஏறிப்போனார். தூதர்கள் இவர்களிடம், "இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்," என்று கூறினார்கள் என்று, நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

3. 2கொரிந்தியர் 5:6-9 வசனங்களில், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் சரீரத்திலிருந்து சென்று கர்த்தருடன் இருக்கிறார்கள் (இப்பொழுது அவர் (இயேசு) பரலோகத்தில் பிதாவின் பக்கத்தில் இருக்கிறார்) என்று பவுல் அப்போஸ்தலர் நமக்குக் கூறுகிறார்.

4. பிலிப்பியர் 1:21-23 வசனங்களில் அவர் (பவுல்) "இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன் ," என்று நமக்குக் கூறுகிறார். சரீரத்தில் ஜீவித்திருக்கவும், தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்கவும் (அவர் (கிறிஸ்து) பரலோகத்தில் இருக்கிறார்) விரும்பினார்.

5. அப்போஸ்தலர் 7:59, வசனத்தில் ஸ்தேவானைக் கல்லெறியும்போது, அவன், "அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன், என்றான்," என்று நமக்குக் கூறப்படுகிறது.

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்

லூக்கா 16:19-31

ஈ. இந்த எல்லா வேதவசனங்களும், "பரதீசு இருந்த ஹேட்சின் பாகம்" இடம் மாற்றப்பட்டதை வெளிப்படுத்துகிறது. இது பூமியின் தாழ்விடங்களிலிருந்து, பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டது. கர்த்தருக்குள் மரித்தவர்கள் யாவரும், உடனே, கிறிஸ்துவுடன், "வானலோக பரதீசில்" இருப்பார்கள். அவர்கள் இனிமேல் பூமியின் தாழ்விடங்களுக்குப் போகமாட்டார்கள்.

உ. ஆனால் துன்மார்க்கரின் பிரிந்து செல்லும் ஆவிகள், ஹேட்சின் தடுக்கப்பட்ட அவர்களுடைய பாகத்தில், உபத்திரவத்திலும் தாங்கொண்ணா துயரத்திலும் இருப்பார்கள். இப்பொழுது, இந்த வாழ்க்கையில், கிறிஸ்துவில் விசுவாசம் இல்லாதவர்கள், மரித்து பிரிந்து செல்பவர்கள், இவர்களுடன் சேர்க்கப்படுவார்கள்.

3. அவிசுவாசிகளின் பிரிந்த ஆவிகள் முடிவாகத் தங்கும் இடம் நரகம் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15),

அ. வேதத்தில் நரகம், கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

1. நித்திய அக்கினி (மத்தேயு 18:8)

2. அவியாத அக்கினி (மாற்கு 9:44)

3. புழு சாகாமல் இருக்கும் இடம் (மாற்கு 9:48)

4. இந்த இடத்தில் மக்கள், "அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்." (வெளிப்படுத்தின விசேஷம் 20:10)

இது, "என்றென்றைக்குமுள்ள காரிருள்," இருக்கும் இடம் என்றும் (2பேதுரு 2:17), "கந்தகம் எரிகிற அக்கினிக் கடல்," (வெளிப்படுத்தின விசேஷம் 19:20) என்றும் அழைக்கப்படுகிறது.

ஆ. நரகத்தில், "அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் மற்றும் நித்திய அழிவு" உண்டாகும். (மத்தேயு 13:42) நரகத்திலிருப்பவர்கள், "கர்த்தருடைய சன்னிதானத்திலிருந்து நீங்கலாக்கியிருப்பார்கள்." (நித்திய காலமுழுவதும் (2தெசலோனிக்கேயர் 1:9).

இ. இயேசு, நரகத்தை "இரண்டாம் நரகம் என்று அழைக்கிறார்." (வெளிப்படுத்தின விசேஷம் 2:11; 20:14; 21:8) இது, முதலாவது சாத்தானுக்கும் அவனுடைய பொல்லாத தூதர்களுக்கும் என்று ஆயத்தப்படுத்தப்பட்டது. (மத்தேயு 25:41; வெளிப்படுத்தின விசேஷம் 20:10). ஆனால், எல்லாக்காலத்திலுள்ள மரித்த துன்மார்க்கர், ஒரு நாள் இங்கு சேர்க்கப்படுவார்கள்.

ஈ. ஒரு மனிதன், நரகத்தில் தள்ளப்பட்டான் என்று கூறும்போது, அது ஆவி மற்றும் சரீரம் ஆகிய இரண்டையும் குறிக்கிறது. (மத்தேயு 10:28) இந்த தண்டனை, நமது மனது கிரகிக்கும் சக்திக்கு அதிகமானது.

உ. ஹேட்சில் இருக்கும், எல்லா அவிசுவாசிகளின் ஆவிகளும் (கடந்த காலம் மற்றும் தற்காலம்) ஒரு நாள், உயிர்ப்பிக்கப்பட்ட அவைகளின் சரீரங்களுடன் சேர்ந்து, "தேவனுடைய நியாயத்தீர்ப்பில், பெரிய வெள்ளை சிங்காசனத்தின்" முன் தோன்றுவார்கள். அவர்கள் எரிகிற அக்கினிக்கடலாகிய நரகத்தில் தள்ளப்படுவார்கள், ஏனெனில் அவர்களுடைய "பெயர்கள் ஜீவப்புத்தகத்தில் எழுதப்பட்டவர்களாகக் காணப்படவில்லை." (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15; யோவான் 5:29)

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்

லூக்கா 16:19-31

அவருடைய குமாரனில் தங்களுடைய விசுவாசத்தை வைத்தவர்களுக்காக, தேவன் ஆயத்தப்படுத்தப்போகும், புதிய வானங்களிலாவது, அல்லது புதிய பூமியின் மேலாவது, அவர்கள் சேர்க்கப்படமாட்டார்கள்.

ஊ. எனக்கு அறிமுகமான ஒருவன் என்னிடம் இவ்வாறு கூறினான், "மரணத்திற்குப்பின், அவனுடைய ஆவி அப்படியே மறைந்து விடும்- அது முழுவதும் அழிக்கப்படும் - அது ஒருபோதும் ஜீவிக்காது". இவனுக்கு சத்தியம் தெரியாது. ஒரு மனிதனுடைய ஆவி நித்தியமானது என்றும், அது ஏதாவது ஒரு இடத்தில் தங்கவேண்டும் என்றும், வேதம் நமக்கு கற்பிக்கிறது.

எ. தூர கிழக்கு தேசத்தில், மரித்த ஒருவனுடைய ஆவிக்கு என்ன சம்பவிக்கிறது என்பவைகளைப்பற்றிய சில அதிசயமான காரியங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்:

1. மரணத்திற்குப் பிறகு பிசாசுகளின் வாசலுக்கு ஆவி செல்கிறது (வாசல் வழியாக உள்ளே செல்ல பிசாசுக்குக் கட்டணம் செலுத்தவேண்டும்). மரணம் பூமியில் வாழ்ந்த வாழ்க்கையின் தொடர்ச்சி,

2. அதன்பின், ஆவி 10 நீதிமன்றங்களின் வழியாகச் செல்கிறது.

3. முதல் மன்றத்தில் ஒரு கண்ணாடியின் முன் அவன் நிற்கவைக்கப்பட்டு, அவனுடைய தவறான நடத்தைகள் காட்டப்படுகிறது. இன்னும் அவனுக்கு இருக்கப்போகிற மனித உருவத்தின் அமைப்பும் காட்டப்படுகிறது.

4. பிற்பாடு, பூமியில் அவனுடைய கிரியைகளுக்குத்தக்கவாறு, ஒவ்வொரு நீதிமன்றத்திலும் அவன் தண்டிக்கப்படுகிறான்:

அ. வீண் வார்த்தைகளைப் பேசினவர்கள் நாக்கு உருவக்குத்தப்படுகிறது.

ஆ. மதசார்பற்றவன் உடல், ரம்பத்தால்துண்டு துண்டாக அறுக்கப்படுகிறது.

இ. திருடன், அவனுடைய கரங்கள் வெட்டப்பட்டவனாக ஆணிகளின்மேல் முழங்காலில் நிற்க வைக்கப்பட்டவனாக எலிகளால் கடிக்கப்படுகிறான், அல்லது மூர்க்கமான நாய்களால் துண்டாகக் கிழிக்கப்படுகிறான். எரியும் எண்ணெயை விழுங்கவேண்டும், பாம்புகளால் அல்லது தேளீக்களால் தாக்கப்படுகிறான் அத்துடன் மின்சார அதிர்ச்சியும் அவனுக்குக் கொடுக்கப்படுகிறது.

ஏ. இந்தக் கதையெல்லாம், மனிதர்களுடைய மூடநம்பிக்கையில் எழுந்த மனோபாவனைகள்; பிசாசுகளின் உபதேசங்கள். அவைகள் சத்தியமானவைகள் அல்ல. எல்லா அவிசுவாசிகளும், சரீரம் மற்றும் ஆவி, முடிவாகத் தங்கும் இடம் நரகம். இங்கு அவியாமலும், புழு சாவாமலும் இருக்கும்.

முடிவுரை

அ. கிறிஸ்தவர்கள், ஹேட்ஸ் (பாதாளம்) அல்லது நரகத்தின் உபத்திரவங்களை அனுபவிக்கமாட்டார்கள். நாம் மரிக்கும்போது, நம்முடைய ஆவி சரீரங்களை விட்டுப்பிரிந்து வானலோகப் பரதீசில் கிறிஸ்துவுடன் இருக்கப்போவதை நாம் எதிர்நோக்கியிருக்கலாம். நாம் ஒருபோதும், தேவன் மற்றும் கிறிஸ்துவின் சன்னிதானத்தை விட்டு பிரிக்கப்பட மாட்டோம்.

பிரிந்து சென்ற ஆவிகளின் இடங்கள்

லூக்கா 16:19-31

ஆ. இயேசுவில் விசுவாசம் வைக்காத ஒவ்வொருவருடைய ஆவியும், ஹேட்சிற்குச் (பாதாளம்) செல்லுகிறது. அவைகளுடைய உயிர்ப்பிக்கப்பட்ட சரீரங்களுடன் சேர்ந்தபின், தேவனுடைய பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பிற்குப்பின் நரகத்தில் தள்ளப்படுகிறது.

இ. இது விசுவாசிகளுக்கு, ஆவியில் சுறுசுறுப்பாகவும் விழிப்பாகவும் இருக்க ஊக்கமளிக்க வேண்டும் (மாற்கு 13:33; 1 தெசலோனிக்கேயர் 5:6). பரிசுத்தத்திற்கும், உலகத்தைவிட்டு பிரிக்கப்பட்டும் இருக்க, அழைக்கப்பட்ட, அழைப்பிற்கு உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும் (1கொரிந்தியர் 1:2; 1 பேதுரு 1:14-16).

ஈ. இது, நாம் கிரியையில் முன்செல்லத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும். நம்முடைய சுவிசேஷத்தைப் பற்றிய சாட்சியில்லாமல், நம்முடைய சிநேகிதர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தார்கள் ஆகிய இவர்களுக்கு இயேசுவைத் தங்களுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள தருணம் ஒருபோதும் இருக்காது. கிறிஸ்து இல்லாமல், இவர்கள் ஹேட்சிலும், (பாதாளத்திலும்) நித்திய நரகத்திலும் தண்டிக்கப்பட நியமிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள்.

விடாப்பிடியான விதவையின் உவமை

லூக்கா 18:1-8

முன்னுரை

அ. விடாப்பிடியான ஜெபம் பதிலைப் பெறுகிறது

ஆ. கிறிஸ்து அவருடைய மனதில் அவருடைய இரண்டாம் வருகையை வைத்து, இந்த உவமையைக்கூறுகிறார். வசனம் - 8 அவர், இவ்வாறு கேள்விகேட்கும்போது, இதை நாம் அறியலாம்: "மனுஷகுமாரன் வரும்போது, பூமியில் விசுவாசத்தைக் காண்பாரா?". ஆகிலும், இப்பொழுதிலிருந்து, அந்தநாள் வருவதற்கும், இடைப்பட்ட காலங்களில், தேவனுடைய மக்கள், பொல்லாத மனிதர்களின் கரங்களில், மிகுந்த துன்பத்தையும், துயரத்தையும் அடைவார்கள்.

இ. சோர்ந்து விட்டுவிடாமல், விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்று கர்த்தர் நம்மிடம் சொல்லுகிறார். வெகு சீக்கிரத்தில் கர்த்தர் திரும்பவந்து நீதி செய்வார். "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக", என்ற பரிசுத்தவான்களின் வாஞ்சையுள்ள ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும். நாம் நியாயம் செய்தவர்களாகத் தீர்க்கப்படுவோம் (பழிக்குப்பழி வாங்கப்படும்). அவருக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பவர்களுக்கு வாக்குப்பண்ணப்பட்ட காரியங்களை நாம் பெற்றுக் கொள்ளுவோம்!

ஈ. இந்த உவமையில்:

1. அந்த அநீதியான நீதிபதி உலகத்தைக் குறிக்கிறான்.

2. அந்த விதவை, உதவியற்ற ஆனால் உறுதியான, கடைசிநாட்களிலுள்ள கிறிஸ்தவர்களைக் குறிக்கிறாள்.

3. நியாயந்தீர்ப்பது என்றால், தேவன் பலன் தருவார், நம்மை தவறாக நடத்தியவர்களைத் தண்டிப்பார். அவர்களுக்கு ஏற்றதைப் பெற்றுக்கொள்வதை தேவன் பார்த்துக் கொள்ளுவார்.

4. சாத்தானும், இந்த உலகத்திலுள்ள பொல்லாத மனிதர்களும், நிச்சயமாக எதிராளிகளாக இருக்கிறார்கள்.

1. ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள் (18:1-5).

அ. வசனம் 1. "சோர்ந்துபோகாமல் எப்போதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்". இப்பொழுதிலிருந்து, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில், விசுவாசத்தை விட்டு விடாமலும் அவரைவிட்டு விலகி நடக்காமலும் இருக்க அவருடைய சீடர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். அவர் இவ்வாறு கூறுகிறார், ஏனெனில் வருங்காலத்தில்,

1. நம், ஒவ்வொருவருக்கும், துன்பமும் உபத்திரவமும் இருக்கும்.

2. நம்மைச்சுற்றி பொல்லாப்பும், அநீதியும் காணப்படும்.

3. மானிடர்கள்பேரில் தேவன் கொண்ட கிருபை மற்றும் அன்பு காரணமாக, "இப்பொழுது நியாயம் செய்யப்படவேண்டும்" என்ற நம்முடைய ஜெபம், தாமதமாகும். ஆகவே சோர்ந்து போகாமல் இருப்பது கடினம்.

விடாப்பிடியான விதவையின் உவமை

லூக்கா 18:1-8

ஆ. வசனம்2. "ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான். அவன் தேவனுக்குப் பயப்படாதவனும், மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்". அந்த நியாயாதிபதி உலகத்தைக் குறிக்கிறான். ஆகவே, உலகத்தின் மனிதனாக, குறுகிய மனப்பான்மையும், பெருமை மற்றும் சுயநலமும் உடையவனாயிருந்தான். அவன் முதன்மையான கரிசனை அவனைப்பற்றியே இருந்தது. அவனுடைய இருதயம் தேவனுக்கு விரோதமாகக் கடினப்பட்டதாக இருந்தது. மற்றவர்கள், விசேஷமாக பரலோகத்திற்கு உரிமையுள்ளவர்களுடைய தேவைகளைக் குறித்து கவலையற்றவனாக இருந்தான் (யோவான் 15:19)

இ. வசனம் 3. "அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள். அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள்". இந்த விதவை உதவியற்ற ஆனால் உறுதியான விசுவாசியைக் குறிக்கிறாள். அவளுடைய விரோதி (எதிராளி) சாத்தான் மற்றும் இந்த மாறுபாடான சந்ததியிலுள்ள பொல்லாத மனிதர்கள். கடைசி காலங்களில், உலகம் கிறிஸ்தவர்களை அதிகமதிகமாய் பகைக்கும் (மத்தேயு 24:9; யோவான் 15:20; 2தீமோத்தேயு 3:12) நீதி அவர்களுக்கு மறுக்கப்படும் அல்லது அவர்களுக்குக் கிடைக்க தாமதமாகும்.

ஈ. வசனம் 4-5. "வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது (விதவைக்கு செவிசாய்க்க).

பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும்......". சில நேரங்களில், ஒரு விசுவாசியின் விடாமுயற்சிக்கு, இந்த உலகத்திலேயே பலனளிக்கப்படுகிறது. ஆனால், அந்த நியாயாதிபதி (நியாய விசாரணை முறைகளில்) தன்னுடன் வேலையாக்கும் மற்றவர்கள் முன்பாக தன்னுடைய நன்மதிப்பைக் காத்துக்கொள்வதற்காகவே இவ்வாறு நடக்கும். ஒரு செல்வம் செழித்த குடியரசு சமுதாயத்தில், கிறிஸ்தவர்களுக்கு நியாயம் மறுக்கப்படுமானால், அது வெளிப்படையாக யாவரும் அறியக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடாத ஒன்றாக இருக்கும். ஆகிலும், உலகத்தின் அநேகநாடுகளில் எங்கு பொதுவுடைமை ஆட்சி, இராணுவம் மந்திரிசபை ஆட்சி, மற்றும் சர்வாதிகாரி ஆட்சி நடைபெறுகிறதோ அங்கெல்லாம் எப்போதும், எல்லாக் காலங்களிலும் இவ்வாறு இருக்காது!

உ. "அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி" என்ற சொற்றொடர், "கண்ணுக்கருகில் கிட்டநின்று கண்பூத்துப்போகச் செய்வதுபோல்" என்று பொருள்படும். கிழக்கத்திய நாடுகளில் இவ்வாறு நிகழ்வது வெட்கத்திற்குரியது. "இருண்ட கண்ணுடைய" என்ற சொற்றொடரை இத்துடன் ஒப்பிடலாம். இது "நமது நற்பெயருக்குக் கேடு ஏற்பட்டது" என்று வடஅமெரிக்கா தேசத்தில் சொல்லுவார்கள். எனவே, இந்தக் கடைசிகாலத்திலும் விசுவாசிகளுக்கு நியாயம்செய்யப்படும். ஆனால் அதை நமக்குக் கொடுக்கும். இந்த உலகத்திலுள்ளவர்கள் முற்றிலும் தங்களுடைய சொந்த சுயநலக்காரணங்களுக்காவே செய்கிறார்கள்!

ஊ. லூக்கா சுவிசேஷத்தில் கூறப்பட்ட சிநேகிதன், அப்பத்திற்காக அவன் சிநேகிதன் திரும்பத் திரும்ப வேண்டிக்கொண்டபோது,

விடாப்பிடியான விதவையின் உவமை

லூக்கா 18:1-8

அதை அவனுக்குக் கொடுத்ததுகூட இந்தக் காரணத்திற்காக இருக்கலாம். சமுதாயத்தில், அவனுடைய நற்பெயருக்குப் பங்கம் ஏற்படும் என்று கவலைப்பட்டானேயல்லாமல், அவனுடைய சிநேகிதனின் நன்மைக்காக அல்ல (லூக்கா 11:5-13).

2. விடாப்பிடியான ஜெபம், சீக்கிரமாக முடிவான பலனைக் கொடுக்கும் (8:6-8).

அ. வசனம்6. "அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள்". இப்பொழுது கிறிஸ்து இந்த உவமையின் சத்தியங்களை, பிதாவாகிய தேவனோடு தொடர்புபடுத்தி காட்டுகிறார், மற்றும் அவருடைய (தேவன்) மக்களோடு அவருடைய உறவையும் எடுத்துக்காட்டுகிறார் அந்த அநீதியான நியாயாதிபதி இவ்வாறு கூறுகிறான்: "இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி, (எனக்கு அவமானம் கொண்டுவராதபடி - எனக்கு இருண்ட கண்களைக் கொடுக்காதபடி) இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டும்......" (வசனம் 5).

ஆ. வசனம் 7. "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து, அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?". அந்த அநீதியான நியாயாதிபதி,

அந்த விதவை, விடாபிடியாக இருந்தபடியினாலும், அவனுடைய நற்பெயரைக் காத்துக்கொள்வதற்காகவும், அவளுடைய கூப்பிடுதலுக்குப் பதிலளித்தான். அவ்வாறாகவே, தேவன் அவருடைய மக்கள் அவர்களுக்கு விரோதமாக இருப்பவர்களுக்கு எதிராகத் தங்களுக்கு நியாயஞ்செய்யவேண்டுமென்று கூப்பிடும்போது பதிலளிக்கிறார். ஆனால் வித்தியாசமான மனப்பான்மையுடையவராக இருக்கிறார். அவர்கள் விடுதலையைக் கண்டடைவார்கள்! கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து, தேவன் அவருடைய மக்களின் எதிராளிகளுக்குப் பதிலளித்துப் பழிவாங்குவார். (ரோமர் 12:19; உபாகமம் 32:35; 1தெசலோனிக்கேயர் 5:2-3; வெளிப்படுத்தின விசேஷம் 6-20அதிகாரம்).

இ. உபத்திரவ காலத்தில், பரலோகத்தில், பலிபீடத்தின் கீழே இருக்கும் இரத்த சாட்சிகள், இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில், எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 6:10-11). இன்று பெரும்பாலான விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படும் பதிலே அவர்களுடைய வேண்டுதலுக்கும் கிடைத்து: "இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும்" (காத்திருக்க வேண்டும்).

ஈ. நம்முடைய பரலோகத் தந்தையும் நம்முடைய எதிராளிகளிடமிருந்து விடுதலைக்காக, அவருடைய நாமத்தினாலே, இடைவிடாமல் கூப்பிடும்போது, அவருடைய மகிமையான நாமம் அவமதிப்பு அடையவிடமாட்டார். இஸ்ரவேலர் ஆய் பட்டணத்தில் தோல்வியுற்றபோது, யோசுவா இதைக் குறித்து கவலைப்பட்டான் (யோசுவா 7:9; உபாகமம் 9:28; 1சாமுவேல் 12:22; எரேமியா 14:21).

விடாப்பிடியான விதவையின் உவமை

லூக்கா 18:1-8

நம்முடைய பரலோக பிதா உண்மையுள்ளவர்:

1. நம்முடன் அவருடைய உறவில் (1கொரிந்தியர் 1:9)

2. நம்மோடு அவர் செய்த உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல், (உபாகமம் 7:9; ரோமர் 15:8)

3. பொல்லாங்கனிடமிருந்து நம்மை பாதுகாப்பதிலும், நம்மை பலப்படுத்துவதிலும் (2தெசலோனிக்கேயர் 3:3)

4. நமது பரீட்சைகளிலும், சோதனைகளிலும் நாம் இனிமேலும் தாங்கிக் கொள்ளக் கூடாதவர்களாகக் காணப்படும்போது, அதிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழியை உண்டாக்குகிறார். (1கொரிந்தியர் 10:13)

உ. நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில், தேவன் பரிபூரண உண்மையுள்ளவராயிருக்கிறார். (2கொரிந்தியர் 1:20; 1தெசலோனிக்கேயர் 5:23-24) ஆகவே, நம்முடைய பகைஞருக்கு எதிராக அவர் பழிவாங்குவார் என்று நிச்சயமாக நம்பலாம். கடைசியாக அவருடைய நற்பெயருக்குத்தான் பங்கம் ஏற்படும்! பொறுப்பாகக் கவனிக்க வேண்டிய குடும்பத்தின் தலைவர் அவரே!

ஊ. வசனம் 7. "அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" இந்த வசனத்திற்கு வேறு கருத்துக்களும் உண்டு.

நம்முடைய பரமபிதா, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், அவருடைய மக்களுக்கு நியாயம் செய்வதற்கும் தாமதிப்பாரானால், அவர் உள்ளத்தில் மற்ற காரியங்களைக் குறித்து கவலைகொள்கிறவராயிருக்கலாம்: துன்மார்க்கருக்கு மனந்திரும்புவதற்கு மேலும் அதிக நேரம்கொடுப்பதற்காக அவர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், நமக்கு நியாயம் செய்வதற்கும் தாமதிக்கிறார்! அவர்களுடைய, இரட்சகராகிய இயேசுவைப் போலவே, காணாமல் போனவர்களுடைய நன்மைக்காக, அவருடைய பிள்ளைகளும் அநியாயமாக துன்பத்தை அனுபவிக்க, அவர் அனுமதிக்கிறார்!

எ. துன்மார்க்கரைக் குறித்து வேதம் இவ்வாறு கூறுகிறது:

1. "--- ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி ---" (2பேதுரு 3:9)

2. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்," (1தீமோத்தேயு 2:4)

3. "--- இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும்." (மத்தேயு 24:14)

ஏ. வசனம் 8. "சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." ஆகிலும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சமீபமாயிருக்கிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 22:7,12,20) அவர் திரும்ப வரும்போது, இந்த உலகத்தில் பொல்லாத மனிதர்களின் கரங்களினாலும், சாத்தானின் சக்தியாலும்,

விடாப்பிடியான விதவையின் உவமை

லூக்கா 18:1-8

அவருடைய பிள்ளைகள் அனுபவிக்கும் துன்பத்திற்கும், உபத்திரவங்களுக்கும் உடனடியாக முடிவு செய்வார். அவருடைய சன்மார்க்க நடத்தையின் தன்மையாகிய நியாயம் செய்வதை, அவருடைய மக்களுக்கு அவர்களுடைய எதிராளிகளுக்கு, செய்வார். (ரோமர் 2:8-9; 2தெசலோனிக்கேயர் 1:8-9)

ஒ. வசனம் 8. "--- ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ? " கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கு, இது ஒரு தீர்மானிக்க வேண்டிய முடிவான கேள்வி. நல்ல காரணத்திற்காகவே, இந்தக் கேள்வியை அவர் கேட்கிறார். அவர் வருகைக்கு சற்று முன்பாக, விசுவாசத்திலிருந்து விழுந்து போவது, கண்டிப்பாக இருக்கும். பலவித காரணங்களுக்காக அநேகருடைய அன்பு தணிந்து போகும். (மத்தேயு 24:12)

1. கடைசிக் காலங்களை நாம் நெருங்கும்போது, உபத்திரவங்களையும், இரத்த சாட்சிகளின் மரணத்தையும், விசுவாசிகள் சந்திக்க வேண்டியது அவசியம். (1தீமோத்தேயு 4:1; 2தீமோத்தேயு 4:3-4; 2பேதுரு 3:3)

2. கள்ளத் தீர்க்கதரிசிகளையும், போதகர்களையும் பின் செல்வார்கள். (மத்தேயு 7:15-23)

3. பாவத்திலும் பொல்லாப்லும் ஈடுபடுவார்கள். (மத்தேயு 24:12)

ஓ. நாம் இந்த பொல்லாத, அநீதியான உலகத்தில், நம்முடைய கர்த்தருடைய வருகைக்காகவும் நம்முடைய எதிராளிகளுக்கு எதிராக நியாயஞ்செய்யப்படவும் காத்துக் கொண்டிருக்கும்போது, இடைவிடாமல் இந்தக் கேள்வியை நமக்கு முன்பாக வைக்க வேண்டும். "மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?"

முடிவுரை

அ. நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். நியாயம் வழங்கப்படும். கடைசிமட்டும் உண்மையாய் நிலைத்திருப்பவர்களுக்குக் கர்த்தர் வாக்கு செய்தவைகளை நாம் பெற்றுக் கொள்ளுவோம், ஆனால், சபையை எடுத்துக் கொள்ளும்படி, பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குக் கட்டளை கொடுக்கும்வரை, தேவனுடைய மக்களுக்கு துன்பமும், அநீதியும், உபத்திரவமும் உண்டாகும்.

ஆ. ஆகவே அவர்கள் தொடர்ந்து, விட்டுவிடாமல் ஜெபிக்கவும், பழிவாங்குவதற்குத் தொடர்ந்து தேவனில் நம்பிக்கை வைக்கும்படியாகவும், இந்த உவமையை அவருடைய சீடர்களுக்கு கிறிஸ்து கூறுகிறார்.

இ. ஆகிலும், இந்தக் கேள்வி தொடர்ந்து இருந்து வருகிறது: "மனுஷகுமாரன் வரும்போது, பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" அவரில் விசுவாசம்: நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதை விசுவாசிப்பது.

ஐசுவரியமுள்ள வாலிப தலைவன் லூக்கா 18:18-27

முன்னுரை

அ. நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வது ஐசுவரியமுள்ளவர்களுக்கு அதிக கடினம்.

ஆ. ஐசுவரியமான வாலிப தலைவனோடு இயேசு விவாதிக்கும்போது, அவனுடைய பாவ நிலைமையையும், இரட்சகருடைய தேவையையும், அவன் பார்க்க அவரால் முடிந்தவரை அதிகமாக முயற்சி செய்தார். அந்த வாலிபன் கூறிய விளக்கத்திலிருந்து, இயேசு, கீழ்க்கண்ட காரியங்களை அவனுக்கு நிரூபித்துக் காட்டுகிறார்.

1. தேவனுடைய சன்மார்க்க நெறியிலிருந்து தவறியிருக்கிறான். தேவனுடைய சன்மார்க்கக் கற்பனைகளைக் கைக்கொள்வதினால், சட்டப்படி அதன்படி நடப்பதற்கும் மேலாக, அக்கற்பனைகளை சிந்தனைகளிலும், இருதயத்தின் நோக்கங்களிலும் அடிப்படையாகக் கொண்டு செயல்படவேண்டும்.

2. நித்திய ஜீவனை சம்பாதிக்க முடியாது. இயேசுவில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்றுவதை தெரிந்துகொள்பவர்கள் எல்லாருக்கும், இது தேவனால் கொடுக்கப்படும் ஒரு ஈவு.

முடிவில், அந்த வாலிப ஐசுவரியமுள்ள தலைவன் வருத்தத்துடன் இயேசுவின் சமுகத்தை விட்டுச் சென்றான். நித்திய ஜீவனில் அவனுக்கு இருந்த விருப்பத்தைவிட, பண ஆசை தனக்கு அதிகம் என்பதை அவன் அறிந்துகொண்டான்.

1. நித்திய ஜீவனை சம்பாதிக்க முடியாது (18:18-22)

அ. வசனம் 18. “அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை நோக்கி...கேட்டான்”. “தலைவன்” என்றால் பல்வேறு அலுவல்களில் இருந்த அநேக ரோம அல்லது யூத அதிகாரிகளில் ஒருவன். இந்த மனிதனுடைய குடும்பம் சந்தேகமின்றி ஆளும் பிரிவைச் சேர்ந்ததாக இருக்கும். மத்தேயுவின் கூற்றுப்படி, இந்த மனிதன் ஒரு “வாலிப” தலைவன் (மத்தேயு 19:22).

ஆ. வசனம் 18. “நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?” நாம் பார்க்கப்போவது போல், “நல்ல போதகரே” என்ற அவனுடைய விளக்கம், யோசனையின்றி கூறப்பட்ட முகத்துதியேயன்றிவேறல்ல. “நான் என்ன செய்ய வேண்டும் என்ற அவனுடைய சொல்லில் இருந்து, நித்திய ஜீவனை சுதந்தரிப்பதைப் பற்றிய அவனுடைய எண்ணங்கள் தொடர்பான இரண்டு காரியங்களை நாம் அறியலாம்:

1. இது சம்பாதிக்கக் கூடிய ஒன்று என்று நினைத்தான். இப்பொழுது அதற்கு அவசியமானவற்றைத் தான் இப்பொழுது செய்யவில்லை என்று அறிந்தான். “சுதந்தரிப்பது” என்றால் ஒரு சுதந்தரவாளியாக இருப்பது. உரிமையுடன் பரம்பரையாகப் பெற்றுக்கொள்வது.

இ. வசனம்19. “அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்?” தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே”. இது அந்த வாலிப தலைவன் முதல் கூறியதற்குப் பதிலாகக் கூறப்பட்டது. வாலிப தலைவன், “நல்ல போதகரே” என்று இப்பொழுது கூறியதற்கு ஏற்ற பதிலைக் கொடுக்க, இயேசு முயற்சிசெய்தார்.

ஐசுவரியமுள்ள வாலிப தலைவன் லூக்கா 18:18-27

இது அவனுடைய குணப்பண்பு தொடர்பானதையும், இயேசு, மனிதனாக அவருடைய தன்மைகளையும் சம்பந்தப்படுத்துகிறது. "தேவன் ஒருவரே நல்லவர்" என்பதினால், வாலிபத் தலைவன் இவ்வாறு கூறியிருக்கலாம். அவன்,

1. இயேசுவை கடவுளாகக் (தேவன்) கண்டான்.

2. இயேசுவுக்கு, (தேவன்) சன்மார்க்கமாக, எல்லையற்ற அளவிற்குக் கீழாக இருப்பதாக, அவன் அறிந்துகொண்டான்.

3. இது, அடுத்தபடியாக, அவன் தேடுகிற ஆசீர்வாதத்திற்கு முற்றிலும் தகுதியற்றவன் (ஏனெனில் தேவன் ஒருவரேநல்லவர்) என்று அறிந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, கிருபைக்காகவும், பாவங்கள் மன்னிக்கப்படவும், கதறி வேண்டுதல் செய்திருக்க வேண்டும். நித்திய ஜீவனை இவ்வாறுதான் ஒருவன் பெற்றுக் கொள்ள முடியும். (யோவான் 3:15-16; 17:2). ஆனால், அவன் இவ்வாறு செய்யவில்லை. ஆகவே, வாலிப தலைவன் தூண்டின எண்ணத்தின்படியே இயேசு உரையாடலைத் தொடர்ந்தார்.

ஈ. வசனம் 20-21. "......கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே....." அந்த வாலிப தலைவன், அவன் என்ன "செய்ய வேண்டும்" என்று கேட்டபடியினால், இயேசு அந்த வார்த்தைகளுக்கு ஏற்றவாறு "செய்ய வேண்டியவைகளை" குறித்து பதிலளிக்கிறார்.

தேவனுக்கு முன்பாக அவனுடைய நற்பண்பை அளவிட்டுப் பார்க்கும்படியாக இயேசு கூறிய சவாலை எடுத்துக்கொள்ள மறுத்தபடியினால், மோசேயின் நியாயப்பிரமாணத்தற்கு முன்பாக அதை அளவிட்டு, அவனுடைய பாவமுள்ள எதிர்த்து நிற்கும் தன்மையையும், நித்திய ஜீவனுக்கான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியற்றவன் என்றும் அறிந்து கொள்வான், என்று இயேசு ஒருசமயம் இவ்வாறு கூறியிருக்கலாம் (கலாத்தியர் 3:24).

உ. வசனம் 21. "......இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்". இயேசுவும், அந்த வாலிபத் தலைவனும் இரண்டு வித்தியாசமான காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று, உரையாடலின் இந்தத் தருணத்தில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். பவுல் அப்போஸ்தலனைப்போல, இந்த வாலிப தலைவனும், கிறிஸ்துவை நேருக்குநேர் சந்திப்பதற்குமுன், நியாயப்பிரமாணத்தின், "சட்டத்திற்கடுத்த சடங்காச்சாரங்களைக்" கைக்கொண்டு வந்தான். இக்காரணத்தினால்தான், "இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து...." என்று மாற்கு நமக்குக் கூறுகிறார் (மாற்கு 10:21). ஆனால், நியாயப்பிரமாணத்தின் சட்டத்திற்கடுத்த சடங்காச்சாரங்களைக் குறித்து கிறிஸ்து இங்கே பேசவில்லை.

தேவனுடைய சன்மார்க்கக் கற்பனைகள் தொடர்பாக, நம்முடைய செய்கைகளையும், இருதயத்தின் நோக்கங்களைப் பற்றியே, அவர் (இயேசு) கருத்துடையவராயிருக்கிறார். மலைப்பிரசங்கம் முழுவதிலும் இதுவே முக்கிய மத்தியக் கருத்தாக இருக்கிறது (மத்தேயு 5:1-7:29).

ஐசுவரியமுள்ள வாலிப தலைவன் லூக்கா 18:18-27

ஊ. தேவனுடைய ஆவியினால், ஆவியில் மறுபடியும் பிறந்து, கிறிஸ்துவைப் பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டவர்களால் மட்டுமே, இந்த உள்ளத்தின் ஆழத்திலிருந்தும், இருதயத்தின் உணர்வுகளினாலும், வழிநடத்தப்படும் நடத்தையை விளங்கிக்கொள்ளமுடியும்: (யோவான் 3:3-8; எரேமியா 31:31-34). அவனுடைய ஆவியில் மறுபடியும் பிறப்பதற்குமுன், அவனுடைய நடத்தையைப் பவுல் திரும்ப எண்ணிப்பார்க்கும்போது, அந்த விளக்கத்தை நமக்குக் கொடுக்கிறார். (ரோமர் 7:7-23; 3:9-20,23; யாக்கோபு 2:10). ஆகவே இரட்சிப்பு என்பது சம்பாதிக்கக் கூடிய ஒன்று அல்ல; கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் யாவருக்கும், இது தேவன் அருளும் ஈவு. (யோவான் 4:10; ரோமர் 7:25).

எ. வசனம் 22. "....இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு....பின்பு என்னைப் பின்பற்றி வா, என்றார்" நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு தேவையான தகுதி தனக்கு இல்லை என்பதை, இயேசுவினுடைய இந்த கடைசி சவால், அந்த வாலிப மனிதன் விளங்கிக் கொள்ளக் கடைசியாகக் காரணமாயிருந்தது. அவன் பணத்தைத், தேவனைவிட அதிகமாக நேசித்தான்.

அவனுடைய நினைவுகளும், இருதயத்தின் உள்நோக்கங்களும் வெளிக்குக் கொண்டுவரப்பட்டது! அவன் ஒரு பேராசையுள்ள ஒரு பாவி, பணம் (இது வாங்கக் கூடியவைகள், இதை உடையவர்களுக்கு சமுதாயத்திலும், அரசியலிலும் அது கொடுக்கும் பதவி) அவனுடைய வாழ்க்கையில் முதலிடத்தைப் பெற்றிருந்தது. (லூக்கா 16:13; மத்தேயு 6:24; 1தீமோத்தேயு 6:9-10,17) ஒருவன் நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு முன், சிந்தனைகள் மற்றும் இருதயத்தின் உள்நோக்கம் தொடர்பான பரிபூரண சன்மார்க்க நடத்தையே தேவன் எதிர் பார்க்கிறார் என்பதை அவன் முடிவாக விளங்கிக்கொண்டான்!

ஏ. ஆகவே, இயேசுவின் சவால், உண்மையில், விசுவாச வாழ்க்கைக்கும், தேவனுடைய ஆவியினால், வாலிப தலைவனுடைய ஆவி மறுபடியும் பிறப்பதற்கும் அழைத்ததாகும். இயேசுவைப் பின்பற்றாமலும், (அவர் கூட இருந்து, அதே பாதை வழியாகச் சென்று, சீடனாகி - கற்றுக்கொள்பவன், மாணாக்கன்) அவரை முற்றிலும் நம்பி, அவனுடைய மனித ஆவி, தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறவாமலும் இருக்கும் நிலையில், அவனிடம் செய்யும்படிக் கேட்டுக் கொண்ட காரியத்தை அந்த மனிதனால் செய்யவே முடியாது. (ரோமர் 8:1-4) நித்திய ஜீவனைக் சுதந்தரித்துக் கொள்வதற்குத் தடையாக மனிதர்களுடைய வாழ்க்கையிலிருக்கும் அநேக காரியங்களில், இந்த ஐசுவரியத்தைத் தலைப்பாகக் கொண்ட இந்த விவாதம், ஒரு எடுத்துக்காட்டு மாத்திரமே!

2. ஐசுவரியவான், நித்திய ஜீவனை சுதந்தரிப்பது, மிகக் கடினமாக இருக்கிறது. (18:23-27)

அ. வசனம் 23. "அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால், இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான்". அவனுடைய செய்கைகளிலிருந்து, நித்திய ஜீவனை சுதந்தரிப்பதற்கு அவசியமான காரியங்களை, அவன் செய்ய மறுக்கிறான் என்று நாம் அறிகிறோம்.

ஐசுவரியமுள்ள வாலிப தலைவன்
லூக்கா 18:18-27

"மிகுந்த துக்கமடைந்தான்" என்றால், ஆவியில் ஆழமாக வேதனையடைந்தான், என்று பொருள்படும். அவன் மிக அதிகமாக வருத்தப்பட்டான். அவனுடைய பணத்தைக் கொடுத்துவிட்டு, கிறிஸ்துவையும், நித்திய ஜீவனையும் பற்றிக்கொள்ள அவனால் முடியவில்லை. அவன், தேவனுடைய கற்பனைகளை முற்றிலும் கைக்கொள்வதாக எப்போதும் நினைப்பது போல், உண்மையில் இல்லையென்பதையும் அவன் அறிந்து கொண்டான்.

ஆ. பணம் செழிப்பாக உள்ளவர்கள், தங்களை பூரணமாக தேவனுடைய கிருபையின் மீது சார்ந்திருக்க ஒருபோதும் இலகுவாகக் கண்டதில்லை. அவர்கள் அதிக சுதந்திரமாக இருக்கிறார்கள், மற்றும் முற்றிலும் அவர்களுடைய செல்வத்தில் நம்பிக்கை வைத்து, இந்த உலகத்தில் அதைக்கொண்டு அவர்கள் பெற்றுக் கொள்வதையும், அது அவர்களுக்குச் செய்யக் கூடியவைகளையும் வைத்து வாழ்க்கை நடத்துகிறார்கள். உண்மையில் அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான ஆண்கள் மற்றும் பெண்களிடம் இது உண்மையாயிருக்கிறது. செல்வம் ஒரு குறிப்பிட்ட அளவு அதிகமாகப் பெற்ற உலகத்திலுள்ள பெரிய பட்டணங்களிலுள்ள மக்களிடமும் இது உண்மையாயிருக்கிறது.

இ. வசனம் 24. "அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசு கண்டு, ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது!......" "அரிதாயிருக்கிறது" என்றால் கடினமாயிருக்கிறது, என்று பொருள்படும்.

அந்தக் கருத்து, மனதில் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் அந்த நபர், அதைக் கிரியையில் நடப்பிக்கக் கூடாதவனாக இருக்கிறான் (அவனுடைய வாழ்க்கையில்) என்றும் இது பொருள்படும்.

ஈ. வசனம் 25. "ஐசுவரியவான், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" இது இப்பொழுது இயேசு விவரித்த சத்தியத்தின் (வசனம் 24) விளக்க எடுத்துக்காட்டு. இது உண்மையிலே சிரிப்பூட்டுகிறதாயிருக்கிறது. இது ஒரு சமயம் நன்றாக அறியப்பட்ட பழமொழியாக, அல்லது அந்நாட்களின் வழக்கச் சொற்தொடராக இருக்கலாம். "ஊசியின் காது" என்பது, ஒரு பட்டணத்தில் அல்லது வீட்டிலுள்ள பெரிய நுழைவாயிலுக்குள் அமைந்த, சிறிய வாசலாக இருக்கக்கூடும்.

உ. வசனம் 26. "அதைக் கேட்டவர்கள்: அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்கூடும், என்றார்கள்". இது, "இந்த ஐசுவரியவான் இரட்சிக்கப்படாவிட்டால், பின் யாரால் கூடும்? என்று பொருள்படும். இயேசுவின் காலத்தில் ஐசுவரியம், தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடையாளம் என்று சாதாரணமாகக் கருதப்பட்டது. ஆகவே செல்வந்தர்கள், தேவனுடைய நன்மையான காரியங்களை இந்த உலகத்தில் மட்டுமல்லாமல் வரப்போகும் உலகத்திலும் பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்பு இருந்தது. ஐசுவரியவான்களுக்கு இந்த எல்லா அனுகூலமான நல்ல தருணங்கள் இருந்தபோதிலும் இரட்சிக்கப்படுவது அரிதானால், மற்றவர்களுக்கு என்ன நம்பிக்கையுண்டு? (விசேஷமாக எனக்கு)

ஊ. வசனம் 27. "அதற்கு அவர்: மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும், என்றார்" இரட்சிப்பும், நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதும், செல்வந்தர்கள் அல்லது வறுமையிலுள்ளோர்,

ஐசுவரியமுள்ள வாலிப தலைவன்
லூக்கா 18:18-27

எவராகயிருப்பினும், எப்போதும் அது தெய்வீகக் கிருபையின் அற்புதமாகவே இருக்கும். (தகுதியற்றவர்களுக்குக் கிடைக்கும் கருணை) இதை சம்பாதிக்க முடியாது. விசுவாசிக்கிற எல்லோருக்கும், தேவன் அருளும் ஈவு (யோவான் 3:16; எபேசியர் 2:8-9) மனிதர்களால் "கூடாதவைகள்" எவைகளோ, (ஏனெனில் அவர்கள் பெலவீனரும், திறமையற்றவர்களுமாயிருக்கிறார்கள்) அவைகள் தேவனால் "கூடும்" (ஏனெனில் அவர் வல்லமையுடையவர், பலமுள்ளவர், திறமையடைத்தவர், செய்யக்கூடிய சத்தியுடையவர்) எல்லாக் காரியங்களையும் செய்ய அவரால் முடியும். (ஆதியாகமம் 18:14; யோபு 42:2; எரேமியா 32:17; லூக்கா 1:37; ரோமர் 4:21)

முடிவுரை

அ. இயேசுவிடம் வந்து, நித்திய ஜீவனை அவர்கள் பெற்றுக்கொள்ளுவதைப் பற்றி கேட்பவர்கள், அது சம்பாதிக்கக்கூடியது அல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும். அது, இயேசுவில் விசுவாசம் வைத்து, அவரைப் பின்பற்ற தெரிந்துகொள்பவர்கள் எல்லோருக்கும், தேவன் அருளும் ஈவு செல்வந்தர்களாகவும், அறிவில் சிறந்தவர்களாகவும் இருப்பவர்கள், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால், அவர்கள் தன்னம்பிக்கையும், சுதந்தரமாக வாழ்வதையும் விட்டு, வாழ்க்கை சூழ்நிலையில் அது (செல்வம்) அவர்களுக்குக் கொடுப்பவைகளுக்கு, வாழ்க்கையில் முதலிடம் கொடுப்பதையும் விட்டு, கிறிஸ்துவை மட்டும் பற்றிக் கொள்ளவேண்டும்.

ஆயக்காரனாகிய சகேயு
லூக்கா 19:1-10

முன்னுரை

அ. கிறிஸ்துவை உண்மை மனதுடன் காண விரும்புகிறவர்கள், அவர்களுடைய வாழ்க்கையில் அவரை உள்ளே அனுமதிக்கவும் அவர்களை முற்றிலும் தெளிவாக மாற்றவும், அவரால் அழைக்கப்படுகிறார்கள்.

ஆ. யோர்தான் நதிக்கு 5 மைல்கள் கிழக்காகவும், எருசலேமிற்கு 15 மைல் வடகிழக்காகவும் அமைந்திருந்த, மிக பழமையான ஒரு பட்டணமாகிய எரிகோ வழியாக இயேசு கடந்து சென்றபோது இந்த வேத வரலாறு ஆரம்பமாகிறது. இந்த இடத்தில், குருடனான பர்திமேயும், அவனுடைய பார்வையைப் பெற்றுக் கொண்டான். (லூக். 18:35-43; மாற். 10:46). அவர் எரிகோவிற்குள் பிரவேசிக்கும் போது ஒரு பெருங்கூட்டமான மக்கள் இயேசுவின்பின் சென்றார்கள். (வச. 3)

1. இயேசுவை மனப்பூர்வமாக காணவிரும்புகிறவர்கள், அவர்களுடைய வாழ்க்கைக்குள் அவர் வர அனுமதிக்க, அவரால் அழைக்கப்படுவார்கள் (19:1-7).

அ. வசனம் 2. "ஆயக்காரனுக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு எனப்பட்ட ஒரு மனுஷன்" இருந்தான். வரி வசூலிக்கும் பிரிவில், மற்ற வரிவசூல் செய்பவர்கள் அவனுக்கு கீழாக இருக்கும், தலைமை ஆயக்காரனாக சகேயு இருந்திருக்கக் கூடும். ஆகவே ரோமர்களிடம் மொத்தத் தொகையை கொடுப்பதற்குமுன், எரிகோவில் வசூலிக்கப்பட்ட வரியின் பங்குகளை அவன் பெற்றான்.

இது ஒரு செழிப்பான பட்டணமாகவும், எருசலேமிலிருந்து, கிழக்குப் பிரதேசங்களுக்குச் செல்லும் வியாபார சாலையில் இந்தப்பட்டணம் அமைந்திருந்ததினாலும், சகேயு ஒரு ஐசுவரியவானாக இருந்தான்.

ஆ. வசனம் 3, "இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தினால், அவரைக் காணக் கூடாமல்......" இந்த மனிதன் இயேசுவைக் குறித்தும், அவருடைய அற்புத வல்லமையையும் நற்கிரியைகளையும் பற்றிக் கேள்விப்பட்டு அவரை உண்மையாகவே பார்க்க விரும்பினான். ஆனால் இயேசுவைச் சூழ்ந்து மிகப் பெரிய ஜனக்கூட்டம் இருந்தது மற்றும் அவன் குள்ளமாக இருந்தான். ஆகவே, அவர்களுடைய தலைகளுக்கு மேலாக அவன் பார்க்கவோ ஜனக்கூட்டத்திற்கு ஊடாக வழி உண்டாக்கிச் செல்லவோ அவனால் முடியாது.

இ. வசனம் 4. "அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்". காட்டத்தி மரம் 30-40 அடி உயரம் வளர்ந்து, பிரிந்த பரவலான கிளைகளுடன், ஒரு பெரிய மனிதனை தாங்கும் பலமுடையதாயிருக்கும். ஒரு மனிதன் மனப்பூர்வமாக ஒருவரைப் பார்க்க விரும்பியும், அதற்கு மிகுந்த இடையூறு இருக்குமானால் அவர்கள், போதுமான திறமையும் பலமும் உடையவர்களாக மாறிவிடுகிறார்கள். அந்தப் பட்டணத்தின் வழியாக, இயேசு செல்லும் பாதை அவனுக்குத் தெரியும். எனவே சரியாக அவருடைய வழியிலுள்ள அந்த மரத்தின் கிளையில் அவன் அமர்ந்துகொண்டான்.

ஈ. வசனம் 5. "இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு......" இயேசு, சகேயுவை ஏமாற்றவில்லை. அவர், அவனுடன் சிறிது நேரம் செலவிடும்படியான தெய்வீக அவசியத்தை உணர்ந்தார்.

ஆயக்காரனாகிய சகேயு லூக்கா 19:1-10

அது, பரிசுத்த ஆவியானவர் அவனை நிறைவேற்றச் செய்ய வற்புறுத்திய தெய்வீக ஊழியமாக இருந்தது. இந்த மனிதனுடன் தொடர்பு கொள்ள இதுவே ஒரே தருணமாக இருக்கலாம். ஆகவே சகேயு உட்கார்ந்திருந்த மரத்திற்கடியில், அந்த இடத்திற்கு வந்த போது, நின்று, அண்ணாந்து அவனைப் பார்த்து, "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்", என்று கூறினார்.

உ. இயேசுவை மனப்பூர்வமாக வாஞ்சையுடன் பார்க்க விரும்புகிறவர்கள், அவர்களுடைய வாழ்க்கையில் அவர் வந்து தங்க, அவரால் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் காட்டத்தி மரத்தின்மீது இருந்தாலும், அவர்களுடைய வீட்டில் தனியாக இருந்தாலும், அல்லது சைக்கிளிலாவது, காரிலாவது நெடுஞ்சாலைகளில் சென்று கொண்டிருந்தாலும், அதைப்பற்றிக் காரியமில்லை. அவர் அங்கே இருப்பார், சகேயுவிடம் கூறிய அதே காரியத்தை உன்னிடமும் கூறுவார். அவர், உன்னுடன் தனியாக சிறிது நேரம் செலவிட, தெய்வீகத் தேவையை உணருவார்!

ஊ. வசனம் 6. "அவன் சீக்கிரமாய் இறங்கி சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான்". "அவன் சீக்கிரமாய் இறங்கி" என்றால், அதிக அவசரமாக, மிகுந்த வேகத்துடன், மற்றும் ஆவலுடன், என்று பொருள்படும். சந்தோஷத்துடனே அவரை அழைத்து" என்றால் மகிழ்ச்சியுடன், களிப்புடன், ஆனந்தமாக, நல்ல மனநிறைவுடன் என்று பொருள்படும். இயேசுவை மனப்பூர்வமாகப் பார்க்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இவ்வாறாகவே நடைபெறும்.

அவர் ஒருமுறை அவர்களிடம் பேசின உடனேயே மிகுந்த மகிழ்ச்சியும், சந்தோஷமும், அவர்களுக்குள் பொங்கி வழிகிறது. அவர்கள் சீக்கிரமாய் அவரிடம் ஓடிச்சென்று, அவருடன் பேசி, அவரைத் தங்கள் வீடுகளுக்கும், அவர்களுடைய வாழ்க்கைக்குள்ளும் வரவேற்கிறார்கள்.

எ. வசனம் 7. "அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார், என்று முறுமுறுத்தார்கள்". "முறுமுறுத்தார்கள்" என்பது அவர்கள் பார்க்கும் காரியம், அவர்களால் அனுமதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளமுடியாததாக இருந்தால் ஜனக் கூட்டத்தின் ஊடாகத் தாழ்ந்த குரலில் முணுமுணுத்து பேசுவதைக் குறிக்கும். அந்த ஜனக்கூட்டம்,

1. சகேயு, சன்மார்க்கமாக அசுத்தமான பாவி என்று நியாயம் தீர்த்தது. ஆயக்காரர்கள் மக்களால் அருவெறுக்கப்பட்டார்கள். ஏனெனில் கொடுக்க வேண்டிய அளவைவிட, அதிகமான வரியை அதிகாரத்துடன் வழக்கமாகப் பெற்று, அதிகப்படியானதை தங்களுக்கென்று வைத்துக் கொள்ளுவார்கள். இது சகேயு, சன்மார்க்க அசுத்த பாவியாக மக்களுடைய கண்களுக்குக் காணப்படக் காரணமாயிருந்தது.

2. பாவியான மனுஷனுடைய வீட்டிற்குள் சென்று, அவனுடைய விருந்தினராக இயேசு சென்றதை குறை கூறினார்கள்.

ஏ. இது, ஆயக்காரனாகிய பாவியின் வீட்டை இயேசு சந்திக்கச் சென்ற சம்பவத்தை ஒத்தது (5:29-31). இயேசுவை ஒருபோதும் அவர்களுடைய இருதயத்திற்குள் அழைக்காதவர்கள், இயேசுவின் பக்கமாகத் திரும்பி, அவரை தங்களுடைய வீட்டிற்கும், இருதயத்திற்குள்ளும், அழைப்பவர்களை, அநேகமாக எப்போதும் குறைகூறிக்கொண்டிருப்பார்கள்.

ஆயக்காரனாகிய
சகேயு
லூக்கா 19:1-10

இயேசு பாவிகளைத் தேடிச் செல்வதையும், அவர்களுடைய வீடுகளில், அவருடைய நேரத்தைச் செலவிடுவதையும், இயேசுவின் நாட்களில், பரிசேயரும் பழைய ஏற்பாட்டு வேதபாரகர்களும், இயேசுவைக் குறை கூறிக் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்தார்கள். (15:1-2). ஆகிலும், அவர்களுக்கு இயேசுவின் பதில் எப்போதும் ஒன்றுபோல் இருந்தது. (5:31; 15:3-7) இயேசு, இழந்துபோன பாவிகளை அழைக்கவும், இரட்சிக்கவும் வந்தார்! (19:10; யோவான் 3:17; 1தீமோத்தேயு 1:15)

2. மனப்பூர்வமாக இயேசுவைப் பார்க்க விரும்புகிறவர்கள் தெளிவாக, திட்டமாக மாற்றப்படுவார்கள். (19:8-10).

அ. வசனம் 8. "சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்......" இயேசு, இப்பொழுது, சகேயுவினுடைய வீட்டிற்குள் சென்று, அவருடன் பேசிக் கொண்டிருந்தார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

சகேயு கூறியவைகளிலிருந்து, ஒரு திட்டமான நன்மைக்கேதுவான ஒரு மாறுதல், அவனுடைய வாழ்க்கையில் நடந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஒரு மனிதன் உண்மையின்படியே இயேசுவைப் பார்க்கவும், அவனுடைய வீட்டிற்கும், வாழ்க்கைக்குள்ளும் அவரை வரவேற்கவும் விரும்பும், ஒவ்வொருவருக்கும் இவ்வாறு சம்பவிக்கும். (2கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 6:15; ரோமர் 6:4)

ஆ. வசனம் 8. (சகேயு தொடர்ந்து) "......நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாய்த் திரும்ப செலுத்துகிறேன், என்றான்". "நாலத்தனையாய் என்பது களவாக எடுக்கப்பட்டதற்கும், மற்றொருவரின் மிருகத்தைக் கொன்றதற்காகவும், பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தின்படி, திரும்ப கொடுக்க வேண்டிய அளவு. (யாத்திராகமம் 22:1; 2சாமுவேல் 12:6). ஏமாற்றி எடுத்துக் கொண்டதை, தாமாகவே உரியவர்களிடம் திரும்ப கொடுக்கும்போது, அசலுடன் ஐந்தில் ஒருபாகம் கொடுக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டுள்ளது. (லேவியராகமம் 6:5; எண்ணாகமம் 5:7).

இ. "நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால்......" என்பதிலிருந்து, ரோம அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டதைவிட அதிகமான வரியை நிர்ணயித்து, மக்களை ஏமாற்றி அதிக அளவு வரியை வாங்கினான் என்று திட்டமாகத் தெரிகிறது. "செலுத்துகிறேன்" என்று அவன் கூறியது. "இங்கே, இப்பொழுது", அவனிடம் பணம் இருக்கிறது, எனவே அவன் ஏற்கனவே கொடுக்க துவங்குகிறான்,

1. ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு,

2. ஏமாற்றியவர்களுக்குத் திரும்ப செலுத்துகிறான். சந்தேகத்திற்கு இடமின்றி, வாங்குபவர்களின் அட்டவணை நீளமாகவும், மிகுதியான, பெரிய அளவு பணம், தேவையுள்ளதாக, இருந்திருக்கும்.

ஈ. வசனம் 9. "இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே".

ஆயக்காரனாகிய சகேயு
லூக்கா 19:1-10

சகேயுவினுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட திட்டவட்டமான தெளிவான மாற்றம், அவன் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டான் என்பதை, இயேசுவுக்குக் காட்டியது. இரட்சிப்பு என்பது, இங்கே,

1. இயேசுவை கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்வது.

2. இயேசுவிலும், கல்வாரியில் அவர் செய்த பிராயச்சித்த பலியிலும் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும்.

3. இயேசுவிலும் அவருடைய கல்வாரி பலியின்மீதும் வைக்கும் விசுவாசத்தினால், நம்முடைய வாழ்க்கையில், பாவம் மற்றும் சாத்தானின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுவது.

4. இயேசு நம்மை இரட்சிப்பார் என்று அவர்மீது வைக்கும் விசுவாசத்தினால் உலகமுழுவதின் மீதும் வரப்போகும் தேவகோபாக்கினையிலிருந்து காப்பாற்றப்படுவோம்.

5. சன்மார்க்கமாக மாசற்றவர்களாகவும், கபடற்றவர்களாகவும், தேவனுடைய பார்வையில் பரிசுத்தமுள்ளவர்களாகவும் மாறி, அவரோடு ஐக்கியத்திற்குள் கொண்டு வரப்படுவோம்.

6. இயேசுவில் வைக்கும் விசுவாசத்தினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவோம்.

உ. ஒருவன் இரட்சிக்கப்படும்போது, ஆவியில் "ஆபிரகாமின் குமாரனாகிறான்" (கலாத்தியர் 3:6-9) அவன் உண்மையான யூதனாக, தேவனுடைய குடும்பத்தில் ஓர் அங்கமாகிறான். (ரோமர் 2:28-29). ஆபிரகாமோடு, விசுவாசத்தினால், தேவனுக்கு முன்பாக நீதிமான் என்று அறிவிக்கப்படுகிறான். (ரோமர் 4:3,11-13). எல்லா யூதர்களும் ஆபிரகாமின் பின் சந்ததியார், ஆனால் அநேகர் உண்மையான யூதர்கள் அல்ல. ஏனெனில் அவர்கள் இயேசுவில் வைக்கும் விசுவாசத்தினால் இரட்சிக்கப் படவில்லை.

ஊ. வசனம் 10. "இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்". இது பூமியில் இயேசுவின் தெய்வீக ஊழியத்தைக் குறித்த விளக்க வாக்கியம். சகேயுவினுடைய இரட்சிப்பு, இந்த உண்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. எல்லா மனிதர்களும், தேவனுக்கு விரோதமான அவர்களுடைய பாவத்தினாலும், எதிர்த்து கலகஞ்செய்ததினாலும், நித்திய காலமெல்லாம், தேவனைவிட்டு பிரிக்கப்பட்டு, நரக அக்கினியில் இருக்கும்படியாக நியாயந்தீர்க்கப்பட்டு, நித்தியமாக இழந்து போனவர்களாக இருக்கிறார்கள். ஆகிலும் இயேசு இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்தார். யோவான் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்". (யோவான் 3:17)

ஆயக்காரனாகிய சகேயு
லூக்கா 19:1-10

முடிவுரை

அ. இயேசுவை உளமாறப் பார்க்க விரும்புகிறவர்கள், அவர்களுடைய வாழ்க்கைக்குள் அவரை அனுமதிக்கவும், திட்டவட்டமான தெளிவான மாறுதலை அடையவும் அழைக்கப்படுகிறார்கள்!

ஆ. இன்று, நம்மத்தியில் இப்படிப்பட்டவர்களுக்காக நோக்கிப் பார்க்கிறார். நீ மனப்பூர்வமாக இயேசுவைக் காணவும், திட்டமாகவும், தெளிவாகவும் மாறவும் விரும்பினால், அவர் தனிமையில் உன்னை அழைத்து, இரட்சிப்பின் வழியை உனக்கு விவரித்து, உன்னோடு சிறிது நேரத்தைச் செலவிடுவார். வேதம் இவ்வாறு கூறுகிறது:

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள் ...மாம்ச சித்தத்தினாலாவது...பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:12-13)

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

முன்னுரை

அ. உண்மையுள்ள சீடர்களுக்கு அவருடைய இரண்டாம் வருகையில், அவரால் பலன் அளிக்கப்படும்.

ஆ. அவர் எருசலேமை நெருங்கி சென்று கொண்டிருந்தபடியினாலும், அந்தப்பட்டணத்து மக்கள் தேவனுடைய இராஜ்ஜியம் சீக்கிரத்தில் வரப்போகிறதென்று நினைத்தபடியினாலும், இயேசு இந்த உவமையைக் கூறினார். அவர்கள், மேசியா வல்லமையோடும் மகிமையோடும் தோன்றி, அவர்களுடைய எல்லா அரசியல் மற்றும் இராணுவ விரோதிகளைத் தோற்கடித்து பூமியில் அவருடைய இராஜ்ஜியத்தை நிலைநாட்டுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் (19:11).

இ. இயேசு, முதல்முறை துயருறும் தாசனாக வந்தார் (ஏசாயா 53). அவர் இரண்டாம் தடவை மறுபடியும் வரும்போது, இராஜாதி இராஜாவாக வருவார். (வெளிப்படுத்தின விசேஷம் 17:14; 19:16) ஆகவே, பத்து ராத்தல் திரவியத்தின் உவமையைக் கூறி இதை மக்களுக்கு விளக்க முயற்சி செய்தார்.

ஈ. இந்த உவமையில் பிரபுவாகிய மனிதன் நிச்சயமாக இயேசுவைக் குறிக்கிறது. தூரதேசம் என்பது பரலோகம் இயேசு பரலோகத்திற்கு திரும்ப செல்கிறார். ஊழியக்காரர்கள் என்பது, சீடர்களைக் குறிக்கும். "ராத்தல்" என்பது இராஜ்ஜியத்தில் (பூமியில்) நாம் வியாபாரம் செய்யும்படியாக நமக்குக் கொடுக்கப்படும் காரியங்கள்.

1. ஒவ்வொரு சீடனுக்கும், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வேலைசெய்யும்படியாகக் கிறிஸ்து சில்காரியங்களைக் கொடுத்திருக்கிறார். (19:12-13).

அ. இந்த உவமையில், பிரபுவாகிய மனிதன் ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் சிறிது பணத்தைக் கொடுத்தான். தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஊழியத்திற்காகச் செலவிட, எனக்கு ஒன்றுமில்லையென்று இயேசுவின் ஒரு சீடனாவது கூறமுடியாது. நம் எல்லோருக்கும்,

1. நாம் கொடுக்கக்கூடிய வாழ்க்கை (ஜீவன்) இருக்கிறது.

2. கிறிஸ்துவுக்காகச் சாட்சி கூற தருணங்கள் உண்டு.

3. நாம் பயன்படுத்தக்கூடிய தாலந்துகளும், நேரமும் உண்டு.

4. பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள், ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்த கர்த்தரால் பயன்படுத்தப்படலாம்.

5. ஒவ்வொருவருக்கும், அவர்களுக்குச் சொந்தமான பொருட்கள் உண்டு. "இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்" என்று இயேசு சொன்னபோது இதைத்தான் குறிக்கிறார் (19:13).

ஆ. உனக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருந்தால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் அதிகம் பயன்படுத்து, உனக்குக் கொஞ்சம் இருந்தால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் கொஞ்சம் செலவிடு. இந்த உவமையின்படி, கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் யாவற்றையும், அது சிறிய அளவாகவோ அல்லது அதிக அளவாகவோ எப்படியிருப்பினும், இக்காரியங்களை தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார்.

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

இ. "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறது இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" என்று இயேசு கூறியபோது இப்பொருள்படவே சொல்லுகிறார் (மத்தேயு 6:20).

2. இயேசுவின் சீடர்கள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளுக்குரிய கணக்கை ஒப்புவிக்க வேண்டும் (19:15).

அ. இந்த உவமையில், இராஜாவாக்கப்பட்ட அந்த மனிதன் தூரதேசத்திலிருந்து திரும்பிவந்து, ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் அவன் கொடுத்த பணத்திற்குரிய கணக்கைக் கேட்டான்:

1. இயேசு, பரலோகத்திலிருந்து சீக்கிரம் வருவார்.

2. சபையை, மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளுவார்.

3. ஒவ்வொரு சீடனுக்கும் மகிமைப்பட்ட சரீரம் கொடுக்கப்பட்டு, இயேசுவோடு இருப்பான்.

4. இப்பொழுது ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் (1தெசலோனிக்கேயர் 4:13-18; 1கொரிந்தியர் 15:51-52). இதுவே கிறிஸ்துவின் நியாயசனம்!

ஆ. புதிய ஏற்பாட்டிலுள்ள நிருபங்களும், வெளிப்படுத்தின சுவிசேஷமும், கிறிஸ்துவின் நியாயசனத்தைப் பற்றி பேசுகிறது (2கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12; வெளிப்படுத்தின விசேஷம் 22:12). வெளிப்படுத்தின விசேஷம் 11:18, வசனத்தில், தூதனால் யோவானுக்கு இவ்வாறு கூறப்பட்டது. "தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும், உம்முடைய நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும்.......காலம் வந்தது என்று சொல்லி......." பலனளிக்கும் காலம் சமீபமாயிருக்கிறது. கணக்குக் கொடுக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது! ஒவ்வொருவனுக்கும் கொடுக்கப்பட்டவைகளுக்கான கணக்கை நாம் ஒவ்வொருவரும் ஒப்படைக்கவேண்டும்!

இ. இரட்சிப்புக்கும், நாம் கிறிஸ்துவுக்காகச் செய்த காரியங்களுக்கு எந்தவிதமான தொடர்பும் கிடையாது. நாம் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறோம். நாம், கிறிஸ்தவர்களாக நம்முடைய வாழ்க்கையில் என்ன செய்தோம் என்பதே, கணக்குக் கொடுப்பது: நாம் பலனளிக்கப்படுவோமோ அல்லது பலனளிக்கப்படமாட்டோமோ என்பதுதான் முக்கியம்! எபேசியர் 6:7 வசனம் இவ்வாறு கூறுகிறது: ".......அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான்.......", கிறிஸ்துவினுடைய நியாயாசனம், பாவத்திற்குரிய தண்டனையை அல்ல, பலனளிப்பதையே கருத்தில் கொண்டது. கிறிஸ்தவர்கள், அவர்களுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்படமாட்டார்கள். நம்முடைய பாவங்களுக்குரிய நியாயத்தீர்ப்பு, கல்வாரியில் கிறிஸ்துவின் மீது வந்துவிட்டது. அவர் பாவத்தின் கிரயம் முழுவதையும் செலுத்தித் தீர்த்துவிட்டார்.

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

ஈ. எபேசியர் 2:8-9, வசனங்கள் இவ்வாறு கூறுகிறது. "கிருபையினாலே, விசுவாசத்தைக் கொண்டு, இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல". இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலும், தேவனுடைய கிருபையினாலும், நாம் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால், ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டபிறகு, நற்கிரியைகளை அவன் செய்யவேண்டும் (யாக்கோபு 2:18). ஒவ்வொரு விசுவாசியும், அவன் இரட்சிக்கப்பட்டபின், அவன் செய்யும் நற்கிரியைகளுக்காக பலனளிக்கப்படுவான்.

3. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளுக்கு உண்மையிராத பொல்லாத ஊழியக்காரர்களாகிய இயேசுவின் சீடர்கள் பலனளிக்கப்பட மாட்டார்கள் (19:20-23).

அ. அவனுடைய பணத்தை மூடிவைத்த இந்த ஊழியக்காரனுக்கு, முதலாவதாக அவனுடைய எஜமானைப் பற்றிய நல்ல விளங்கிக் கொள்ளுதல் இல்லை. அவரைத் தவறாக நியாயந்தீர்க்கிறான். அவன் சொல்வது, அவன் செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் இருந்ததற்காக ஒரு காரணம் கூறுவதுபோல் தோன்றுகிறது. கிறிஸ்தவர்கள் கடமைகளைச் செய்யாமல் இருந்ததற்காகப் பல காரணங்களைச் சொல்லுகிறார்கள்; இந்த உலகத்தை நேசிக்கிறார்கள்; தங்களைத் தாங்களே அளவுக்கு அதிகமாக அன்புகூருகிறார்கள்: "நான் அதிக வேலையாக இருக்கிறேன். எனக்கு நேரம் கிடையாது. நான் செய்ய வேண்டிய மற்ற அநேகக் காரியங்கள் உண்டு. என்னுடைய பணத்தை செலவிட வேறு இடங்கள் உண்டு". "எனக்கு மட்டும் அது இருந்தால், இதைச் செய்திருப்பேன். அங்கு சென்றிருந்திருப்பேன்; இதையும் அதையும் செய்வேன்".

ஆ. நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன்? கிறிஸ்துவின் சீடர்களில் அநேகர் சுயநலவாதிகள், மற்றும் பேராசைக்காரர்கள்; உலகப்பற்றுடையவர்கள்! இதைத்தான் கர்த்தர் சொல்லுகிறார். அவருடைய மக்கள் இந்தப் பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும். அவர்கள் ஒருசுற்று திரும்பி, அடுத்த பாதையில் நடக்க ஆரம்பிக்க வேண்டும். தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக கிறிஸ்து அவர்களுக்குக் கொடுத்திருக்கும் காரியங்களை செலவிடவேண்டும்.

இ. சிங்கப்பூரில் வாழும் மக்கள் நான்கு காரியங்களில் ஆர்வமுடையவர்களாயிருக்கிறார்கள். நான் அவர்களை "C" (Four c's) என்று அழைக்கிறேன். 1. கார்கள் (Cars) 2. பணம் (Cash) 3. நம்பக வரவுப் பத்திரம் (Credit Cards) 4. பல அடுக்கு மாடி வீடு (Condominiums) ஹாங்காங் (Hong Kong) மற்றும் உலகத்தின் மற்ற ஜனத்தொகை மிகுந்த முக்கியமான இடங்களில், நான்கு "C" என்பது, (1) கார்கள் (Cars) (2) பணம் (Cash) (3) நம்பக வரவுப் பத்திரம் (Credit Cards) (4) உயர்தர மதுவகைகள் (Congnac) அமெரிக்காவில் இது வேறுவிதமாக இல்லை. இத்துடன் சுயநலம் என்பதையும் சேர்க்கலாம்.

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

ஈ. ஒரு ராத்தலை சீலையில் சுற்றி மூடிவைத்த ஊழியக்காரன், தேவனுடைய இராஜ்ஜியத்தில் வேலைசெய்யத் தவறியவர்களைக் குறிக்கிறான். இவர்கள் இரட்சிக்கப்படவும், பரலோக இராஜ்ஜியத்தின் பலன்கள் யாவையும் பெற்றுக் கொள்ளவும் விரும்புகிறார்கள். இந்த முறைப்பு நடைபெற முடியாது. அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள், ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இலகுவாக இருந்ததற்காக அல்லது வேலைசெய்யத் தவறியதினால் பலனளிக்கப்பட மாட்டார்கள்! அவர்கள், பெரிய பொறுப்புகளை ஒப்படைக்கக் கூடிய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இங்கே, அல்லது வரப்போகும் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் இருக்கமாட்டார்கள்.

உ. லூக்கா *9:57-62* வசனங்களில் ஒருவன் இயேசுவிடம் வந்து, அவனுடைய தகப்பன் மரித்து அடக்கம் செய்யப்படும் மட்டும் காத்திருந்து, பிற்பாடு அவரைப் பின்பற்றுவதாக, விவரித்தான். இயேசு அவனிடம், "(ஆவியில்) மரித்தோர்கள், தங்கள் மரித்தோரை (சரீரத்தில்) அடக்கம் பண்ணட்டும்" என்று கூறினார். அவரைப் பின்பற்ற தெரிந்து கொள்பவர்களிடம் இயேசு அடிப்படையான கருத்துக்களை எதிர்பார்க்கிறார். தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலை, அவர்களுடைய வாழ்க்கையில் முதலிடம் பெறவேண்டும். மற்றொரு மனிதன், இயேசுவைப் பின்பற்றுவதற்குமுன் தன்னுடைய குடும்பத்தார்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு வர திரும்ப போக விரும்புவதாகச் சொன்னான். இதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஒரு பிரிக்கப்பட்ட இருதயத்தை இது சுட்டிக் காட்டுகிறது. நம்முடைய வாழ்க்கையில், தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைக்கு முதலிடம் கொடுப்பதற்குப் பதிலாக, நாம் கொடுக்கக் கூடிய, இயேசு ஏற்றுக் கொள்ளும் ஒரு காரணம் எதுவும் இருப்பதாக, என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை.

ஊ. மத்தேயு 10:37-39 வசனங்களில், இயேசு இவ்வாறு கூறுகிறார். "தகப்பனையாவது, தாயையாவது.........; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் (சீடன்) எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை (சுயத்திற்கும், உலகத்திற்கும் மரிப்பது) எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் (நான் செய்வதுபோல் செய்யாதவன்) எனக்குப் பாத்திரன் அல்ல. என்னிமித்தம் தன்னுடைய ஜீவனை இழந்துபோக விரும்பாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல".

4. அவர்களுக்குக் கொடுக்கப் பட்டவைகளுக்கு, உண்மையுள்ள வர்களாயிருக்கும் இயேசுவின் சீடர்கள் பலனளிக்கப்படுவார்கள். (19:16-19)

அ. அந்த ராஜா திரும்பி வந்து, அவருடைய ஊழியக்காரர்கள், அவர்களுக்கு அவர் கொடுத்த பணத்தை, அவர்கள் எவ்வாறு வியாபாரம் செய்தார்கள் என்பதற்கான கணக்கைக் கேட்டார்.

1. ஊழியக்காரரில் இரண்டுபேர்கள், எஜமானனுடைய வேலைக்காகப் பயன்படுத்தி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதை, அதிகமாக்கினார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதை தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைக்காக ஞானமாய் பயன்படுத்தினவர்கள் கீழ்க்கண்டவற்றை செய்வார்கள்,

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

(அ) தேவனுடைய இராஜ்ஜியம் முன்னேறிச் செல்ல உதவுவார்கள்.

(ஆ) கிறிஸ்துவால், அவருடைய இராஜ்ஜியத்தில் பொறுப்பான இடங்களில் வைக்கப்படுவார்கள்.

(இ) "நல்லது, என்னுடைய உத்தம, உண்மையுள்ள ஊழியக்காரனே", என்று அவர் (எஜமான்) சொல்வதைக் கேட்பான்.

ஆ. 1கொரிந்தியர் 4:5 வசனத்தில், தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைகளில் நாம் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதைக் குறித்து நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கூறுகிறார். நம்முடைய நோக்கங்கள் சரியானவையாக இருக்க வேண்டும். சரியான நோக்கங்கள் என்றால் என்ன?

1. வேலைக்காரனின் இருதயம்; ஒரு தாழ்மையான உள்ளம்.

2. பரிசுத்தமும், நீதியும்.

3. சிநேகிதர்கள், அயலகத்தார்கள், உறவினர்கள் இயேசுவைக் கண்டடையச் செய்யவேண்டும்.

4. மற்ற விசுவாசிகளுக்கு உதவி செய்ய வேண்டும், ஆறுதல் படுத்த வேண்டும், பலப்படுத்த வேண்டும்.

5. சபை சமுதாயத்தில் மதிக்கப்பட வேண்டும், கிறிஸ்து மகிமைப்பட வேண்டும். தவறான நோக்கங்கள் என்ன? மற்றவர்களால் அங்கீகரிக்கப்பட, அதிகாரம் செலுத்த, முக்கியமானவனாகக் கருதப்பட, பற்பல காரியங்களில் ஈடுபட விரும்புவது.

இ. ஒரு கிறிஸ்தவன், இயேசுவுக்கு நற்கிரியைகளைப் படைப்பது என்பது, அவன் அக்கினி சுவர் வழியாகக் கையில் தன் கிரியைகளை வைத்துக் கொண்டு ஓடுவதற்குச் சமமாகும். (1கொரிந்தியர் 3:11-15). அவன் கிரியைகள் நற்பண்புடையதாயிருந்தால், அவன் கிறிஸ்துவின் தெய்வீக நியாயத்தீர்ப்பாகிய அக்கினி வழியாகச் சென்று வெளிவந்தபின்பும், அவைகள் அவனிடம் இருக்கும். அவனுடைய கிரியைகள் கீழ்த்தரமானவைகளாக இருக்குமானால், நியாயத்தீர்ப்பின் அக்கினி வழியாகச் சென்று, அடுத்த பக்கம் தோன்றும்போது, அவன் செய்தவைகள் ஒன்றும் இல்லாமல் அழிந்துபோகும். அந்த கிரியைகள், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் அக்கினியில் சுட்டெரிக்கப்பட்டுவிடும். அந்த மனிதன் இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும். அது, ஒருவன், அவனுடைய வீட்டை, மரமும் வைக்கோலும் வைத்துக் கட்டினதுபோல் இருக்கும். ஒரு பலத்த புயல் அல்லது வெள்ளம் வரும்போது, அந்த வீடு அழிக்கப்பட்டு, அஸ்திபாரம் மட்டும் மீந்திருக்கும்.

ஈ. தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைக்காக நமக்குக் கொடுக்கப்பட்டவைகளை, ஞானமாகப் பயன்படுத்தும் சீடர்களாக நாம் இருப்போமாக. தேவனுடைய இராஜ்ஜியத்தில், நமக்குக் கொடுக்கப்பட்டவைகளை, சரியான நோக்கங்களோடு, நிலைத்திருக்கும் கட்டடப் பொருட்களை பயன்படுத்துவோமாக. கிறிஸ்து வரும்போது, நாம் பலனளிக்கப்படுவோம்; அவரோடு ஆட்சி செய்வோம், "நல்லது உத்தம ஊழியக்காரனே......." என்று அவர் சொல்வதைக் கேட்போம்.

பத்து ராத்தல் திரவியங்களின் உவமை (சில்லறைப் பணம்)

லூக்கா 19:11-27
மத்தேயு 25:14-30

முடிவுரை

அ. இயேசு சீக்கிரம் வருகிறார்! உண்மையுள்ள சீடர்கள் மட்டுமே, அவருடைய இரண்டாம் வருகையில் பலனளிக்கப்படுவார்கள்.

ஆ. இந்த சபைக்கு, ஒழுங்கு முறைப்படி வருகைதரும் ஒவ்வொரு மனிதனும், ஆதரவாளர்களும், ஒவ்வொரு அங்கத்தினர்களும், உங்களிடம் கிறிஸ்து ஒப்படைத்தவைகளுக்கேற்ற ஞானமுள்ள உக்கிராணக்காரர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று, நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேர்த்துவையுங்கள், மிகுந்த பலனைப் பெற்றுக் கொள்வீர்கள்!

இ. இன்று இங்குள்ளவர்களில் அநேகர், கிறிஸ்துவுக்கு இவ்வாறு பதிலளிக்க முடியும்: "ஐயா, உம்முடைய இராத்தலைக் கொண்டு, பத்து அதிகம் சம்பாதித்தேன்.........ஐந்து அதிகம் சம்பாதித்தேன்......" இயேசு, இவ்வாறு பதிலளிப்பார்: "நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், பத்து பட்டணங்களுக்கு.........ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு". உங்களில் மற்றவர்களைப் பற்றிய காரியம் என்ன?

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15

முன்னுரை

அ. வெற்றி வேந்தராகிய கிறிஸ்துவைப் புறக்கணித்தல், அழிவை வருவிக்கும்.

ஆ. கிறிஸ்து ஜெயகெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தது, பாடுகளின் வாரத்தின் ஞாயிற்றுக் கிழமையில் நடைபெற்றது. இந்த வாரத்தில் கீழ்க்கண்டவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்:

1. வெள்ளிக்கிழமை - பெத்தானியாவுக்கு வருகிறார் (யோவான் 12:1).

2. ஞாயிறு - வெற்றிக் கெம்பீரப் பிரவேசம் (லூக்கா 19:28-44).

3. திங்கள் - தேவாலயச் சுத்திகரிப்பு.

4. வியாழன் - பஸ்கா, கடைசி இராப்போஜனம் (மத்தேயு 26:17-30)

5. வெள்ளி - சிலுவையில் அறையப்படல் (மத்தேயு 27:1-66)

6. ஞாயிறு - உயிர்த்தெழுதல் (யோவான் 20:1-31).

இ. இந்த சம்பவம் நிகழ்ந்த போது, இயேசுவைக் கைதுசெய்ய அதிகாரிகள் சமயம் பார்த்தார்கள்.

ஆகிலும், அவர், யாவரும் அறிய, ஜெயகெம்பீரத்தோடும், மிகுந்த தைரியமுடனும் எருசலேமிற்கு வந்தார். இராஜாதிஇராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும், நித்தியமாக முன்குறிக்கப்பட்டது, இதில் நிறைவேற்றப்பட்டது!

1. ஜெயகிறிஸ்து, கழுதைக்குட்டியின் மீது ஏறி வந்தார் (19:28-36).

அ. வசனம் 28-29. "எருசலேமுக்குப் புறப்பட்டு, முந்தி நடந்து போனார்" எருசலேம் எப்போதும், இயேசுவின் கவனத்தின் மையமாக இருந்தது. இது,

1. எப்போதும், அவருடைய மக்கள் மத்தியில், தேவன் வாசம் பண்ணும் இடமாக இருந்தது.

2. தேவாலயம் இங்குதான் எப்போதும் இருந்து வருகிறது.

3. வரப்போகும் காலத்திலும் இது (தேவாலயம்) இங்குதான் இருக்கப்போகிறது.

4. தாவீது அரசன் மூலமாக, கிறிஸ்துவின் அரசாட்சி முதன்முதலாக இங்கு நிலைநாட்டப்பட்டது.

5. அவருடைய பரிசுத்தவான்களுடன், ஆயிர வருடம், இங்கு அவர் அரசாளுவார்.

6. இதுவே, புதிய எருசலேமின் இடமும், தேவன் மற்றும் கிறிஸ்து, நித்தியமாக ஆளுகைசெய்யும் இடமாகவும் இருக்கும்.

ஆ. கிறிஸ்துவின் ஜெயகெம்பீர பிரவேசம் சகரியா தீர்க்கதரிசியால் முன் உரைக்கப்பட்ட இஸ்ரவேலின் இராஜாவாகிய மேசியா என்பதற்கு யாவரும் அறியக்கூடிய சாட்சியாக இருந்தது:

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15

1. "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி, இதோ உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்" (சகரியா 9:9)

2. இந்த நிகழ்ச்சியானது, காலத்தின் முடிவில், கிறிஸ்து நிலைநாட்டப் போகிற அவருடைய இராஜ்ஜிய அரசாட்சியில், உண்மையாக நடக்கப் போகிற சம்பவத்தின், சாயலாக இருக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-20:6).

இ. அவர் உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறி, தேவனுடைய வலது பாரிசத்திற்குச் சென்ற பின்புதான், அவருடைய சீடர்கள், கிறிஸ்து எருசலேமிற்குள் ஜெயகெம்பீரமாகப் பிரவேசித்ததின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் முற்றிலும் அறிந்து கொண்டார்கள் (யோவான் 12:16). இன்று, அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளும்வரை, மக்களால், எருசலேமிற்குள் கிறிஸ்துவின் ஜெய கெம்பீர பிரவேசத்தின் முக்கியத்துவத்தை கிரகித்துக் கொள்ள முடியாது.

ஈ. வசனம் 30. இயேசு அவருடைய சீடர்களிடம், "...கழுதைக் குட்டியைக் காண்பீர்கள்..." என்று சொன்னார். இது உண்மையில் ஒரு கழுதையினுடைய குட்டி கழுதைக் குட்டியும், அதின் தாயும் இருந்ததாக, மத்தேயுவினுடைய விளக்கத்தில், நாம் வாசிக்கிறோம் (மத்தேயு 21:2,7). சாதாரணமாக இவை இரண்டும் ஒருபோதும் பிரிந்திருக்காது. எனவே, சீடர்கள் குட்டியை கொண்டுவந்தபோது, தாய் கழுதையும்கூட வந்தது.

உ. வசனம் 30. "...மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டி..." லூக்கா இதை ஒரு காரணத்தினிமித்தம் நமக்குக் கூறுகிறார். தேவனுடைய மேசியாவாகிய இயேசு, இதுவரை ஒருவரும் ஏறியிராத கழுதைக் குட்டியின்மீது ஏறி வருகிறார். அது, இந்தப் பூவுலகத்தில், ஒருபோதும் பயன்படுத்தப்படவில்லை. ஒரு நீதியான பரிசுத்தமானதாகப் பிரித்துத் தனியே வைக்கப்பட்டது. (எண்ணாகமம் 19:2; 1சாமுவேல் 6:7).

ஊ. வசனம் 35-36. ஜனத்திரள். "தங்கள் வஸ்திரங்களை அதன் மேல் போட்டு.... வழியிலே விரித்தார்கள். ". அவர்கள் தென்னை மர இலைகளையும் வழியிலே பரப்பினார்கள்! (மத்தேயு 21:8) யெகூ, இஸ்ரவேலின் இராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டபோது, ஜனங்கள் அவர்களுடைய வஸ்திரங்களை அவனுக்குக் கீழாகப் பரப்பினார்கள்...... அவர்கள் எக்காளம் ஊதி, "யெகூ இராஜாவானான்" என்று சத்தமிட்டார்கள் (2இராஜாக்கள் 9:13).

எ. சாலையிலும், கழுதைக் குட்டியின்மீதும் அவர்களுடைய வஸ்திரங்களையும், தென்னை மர ஓலைகளை விரித்து, இதைத்தான் ஜனத்திரள் கூறியது; "நீர் இராஜா, இஸ்ரவேலின் இராஜா, தீர்க்கதரிசிகளால் முன் உரைக்கப்பட்டு, நீண்டகாலம் காத்திருந்த இராஜாவாகிய மேசியா, கர்த்தாதி கர்த்தர், உலக முழுவதற்கும் இராஜா; சகல மகிமையின் இராஜா.

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15

2. மிகுந்த சத்தத்தோடே, ஜெயகிறிஸ்துவைப் புகழ்ந்தார்கள் (19:37-40).

அ. "புகழ்ந்தார்கள்" என்றால், யாவரும் காணும் காட்சியாக இருப்பது, ஒருவர் எவ்வளவு உயர்ந்தவர் என்று பெருமை பாராட்டுவது, மிகுந்த சத்தத்தோடு மகிழ்ந்து கொண்டாடுவது, என்று பொருள்படும்.

ஆ. வசனம் 37. "திரளான கூட்டமாகிய சீடர்களெல்லாம்....மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்". "மிகுந்த சத்தத்தோடே" என்றால், மிக உயர்ந்த, ஊக்கமான, மிக அதிக சத்தம், அளவுக்கு மிஞ்சிய சத்தம், என்று பொருள்படும். தேவனுடைய மக்கள், அவரை சத்தமிட்டு துதித்தார்கள் என்று சங்கீதக்காரனும் கூட சொல்லுகிறார்:

1. "ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது, என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்" (51:15).

2. சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய் ஆர்ப்பரியுங்கள் (47:1)

3. "உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (134:2).

4. "எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள். வீணையோடும், சுரமண்டலத்தோடும், தம்புரோடும், நடனத்தோடும், யாழோடும் தீங்குழலோடும், ஓசையுள்ள கைத்தாளங்களோடும் பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்" (150:3-5).

இ. பரலோகத்தில், தேவனுடைய சிங்காசனத்தைச் சூழ்ந்து துதிப்பதற்கு ஒரு தடையும் இல்லை:

1. "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்...... ஸ்தோத்திரத்தைப் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறார்" (வெளிப்படுத்தின விசேஷம் 5:12).

2. வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுள டங்கிய வஸ்துக்கள் யாவும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக". (வெளிப்படுத்தின விசேஷம் 5:13).

3."நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள், என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது" (வெளிப்படுத்தின விசேஷம் 19:5).

ஈ. வசனம் 38. திரளான ஜனங்கள் இயேசுவுக்குத் துதி செலுத்தினார்கள். "கர்த்தரின் நாமத்தினாலே வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்". பின்னும் அவர்கள், "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்". (மத்தேயு 21:9).

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9; மாற்கு 11:1-10
யோவான்12:12-15

உ. இந்த துதியின் சங்கீதம், சங்கீதம் 118:26 வசனத்திலிருந்து வந்தது. இயேசு இராஜாவாக இருக்கிறார். அவர் எருசலேமிற்குள் வெற்றியோடு வருகிறார். அவருடைய விரோதிகள் மேல் வெற்றி சிறந்தார்.

1. கொலோசெயர் 12:15, நமக்கு இவ்வாறு கூறுகிறது. "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்".

2. இயேசு பலவானுடைய வீட்டின் கதவை உடைத்துப் போட்டார், என்று மாற்கு நமக்குக் கூறுகிறார். அவர் அவனைக் கட்டி, பிணையாகக் கட்டுண்டவர்களை விடுதலையாக்கினார் என்று மாற்கு நமக்குக் கூறுகிறார். (மாற்கு 3:22-27). இயேசு தேவனுடைய சத்துருவாகிய சாத்தான்மீது வெற்றி பெற்றார்.

ஊ. வசனம் 38. இயேசுவை அனுப்பியதற்காக ஜனத்திரள், பிதாவாகிய தேவனையும் துதித்தார்கள்: "பரலோகத்திலே சமாதானமும், உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக....." இயேசுவின் பிறப்பின்போது, பரலோகச் சேனை அவரைத் துதித்தவண்ணமாக, ஜனத்திரள் தேவனைத் துதித்தார்கள்: "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக". (லூக்கா 2:14).

எ. வசனம் 39-40. "இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும்". ஜனங்கள், கிறிஸ்துவை மகிமைப்படுத்தித் துதிப்பதை நிறுத்த பரிசேயர்கள் (பக்திமார்க்கம் மற்றும் குடியரசு அதிகாரிகள்) முயற்சி செய்தார்கள். இயேசுவை மானிடர்களின் இரட்சகர் என்பதை அறிந்து கொள்ளாதவர்களும் மனிதர்களிடமிருந்து மகிமையைப் பெறவிரும்புகிறவர்களும் மட்டுமே இப்படிப்பட்ட எண்ணத்தைப் பேணி வைப்பார்கள்.

ஏ. தேவனுடைய மக்கள், பரலோக தூதர்கள், சர்வ சிருஷ்டிகள், இந்த விசுவாசிகளின் கூட்டம் ஆகிய நீங்களெல்லாரும் சத்தமிடாவிட்டால், நீங்கள், தேவனுடைய அநாதி தீர்மானங்களை நிறைவேற்ற, சரித்திரத்திற்குள், பவனியாக வந்த வெற்றி சிறந்த இயேசு கிறிஸ்துவை குறித்து சத்தமிடாமல் இருப்பீர்களானால், குன்றுகள் சத்தமிட்டுக் கூப்பிடும்படியாக தேவன் செய்வார்! மிகுந்த சத்தமிட்டு துதிப்பதையும், தேவனுக்கு மகிமைதொனியை எழுப்புவதையும் குறித்து குறை கூறுபவர்களை வழியை விட்டு அப்பால் போகும்படி சொல்வதற்கு இது ஒரு நல்ல காலம்!

3. ஜெய கிறிஸ்துவைப் புறக்கணிப்பது அழிவை கொண்டுவரும். (19:41-44)

அ. வசனம் 41. "நகரத்தைப் (எருசலேமை) பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்" இயேசு சத்தமிட்டுப் புலம்பினார், அவர் எருசலேமை நினைத்து அடக்கமுடியாமல் விம்மி அழுதார். அவர் இன்று, அவர் இல்லாமல் இருப்பவர்களுக்காக அழுகிறார். அவருக்கு உனக்கு என்ன நேரிடும் என்று தெரியும். பாவத்தின் விளைவுகளை அவர் அறிவார். அவரைப் புறக்கணிப்பதின் விளைவுகளையும் அறிவார்.

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15

ஆ. 42. "உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை, நீ அறிந்திருந்தாயானால்..." தேவனிடத்தில் சமாதானத்தை எப்படி கண்டுபிடிப்பது என்று யூதர்களுக்குத் தெரியாது. நியாயப்பிரமாணத்தையும், மத சடங்காச்சாரங்களையும் கைக்கொள்ளுவதின் மூலமாக அவரில் சமாதானத்தைப் பெற, அவர்கள் முயற்சி செய்தார்கள். தேவனுடன் "தவறாக இருந்ததிலிருந்து" சென்று "சரியானவைகளுக்குள்" வருவது எப்படி என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஒருவன் சமாதான பிரபுவாகிய இயேசுவை புறக்கணிக்கும்போது, தேவனுடன் சமாதானம் கண்டடையும் நம்பிக்கையை நித்தியமாக தூக்கி எறிந்து விடுகிறான். அவருடன் "சரியாக" இருக்கிறதை, இழந்து விடுகிறான், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமான இரட்சகராகிய இயேசுவில் விசுவாசம் வைப்பதே தேவனிடம் சமாதானத்தைக் கண்டடையும் ஒரே வழி.

இ. வசனம் 42. "இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது". யூதர்கள் இந்நாள் மட்டும் தொடர்ந்து இயேசுவை மேசியாவாகவும், உலக இரட்சகராகவும் இருப்பதைப் புறக்கணிக்கின்றனர். அவர்களுடைய இருதயங்கள் அவருக்கு விரோதமாக கடினப்பட்டிருக்கிறது. (இரக்கமற்றதாக, பாறைபோல் மாறிய மரங்கள் போல)

ஒரு காலம் வருகிறது அப்பொழுது ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது கூடாத காரியமாக இருக்கும்! யூதர்களைக் குறித்துக் கூறும்போது வேதம் இவ்வாறு சொல்லுகிறது:

1. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார். --- அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை நாம் (யூதர்கள்) எண்ணாமற் போனோம். (ஏசாயா 53:3)

2. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை". (யோவான் 1:10-11)

3. "உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற்போனாய்---". (லூக்கா 19:43)

ஈ. வசனம் 43. கிறிஸ்துவைப் புறக்கணிப்பது அழிவைக் கொண்டுவரும். "உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு --- நாட்கள் உனக்கு வரும்." இது ஒரு தீர்க்கதரிசன வார்த்தை, இது எருசலேம் மற்றும் அதனுடைய மக்கள் (யூதர்கள்) யாவரும் ரோம சாம்ராஜ்ஜியத்தினால் கிபி. 70ஆம் வருடம் அழிக்கப்படுவதை முன் உரைக்கிறது. தீர்க்கதரிசிகளும், சங்கீதக்காரனும் இந்த அழிவின் ரூபத்தை அழகாக வண்ணமிட்டு நமக்குக் காட்டுகின்றனர். (அது நடப்பதற்கு முன்)

(அ) "உன்னைச் சூழப் பாளயமிறங்கி, உன்னைத் தெற்றுகளால் முற்றுகை போட்டு, உனக்கு, விரோதமாகக் கொத்தளங்களை எடுப்பிப்பேன்". (ஏசாயா 29:3)

(ஆ) "நீ ஒரு செங்கலை எடுத்து அதை உன் முன் வைத்து, அதன்மேல் எருசலேம் நகரத்தை வரைந்து, அதற்கு விரோதமாக முற்றுகை போட்டு.

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15

கொத்தளங்களைக் கட்டி, மண்மேடு போட்டு, ராணுவங்களை, நிறுத்தி, சுற்றிலும் மதிலிடிக்கும் யந்திரங்களை வை". (எசேக்கியேல் 4:1-2)

(இ) பூரணமான அழிவு வரும். "உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லில் மோதியடிக்கப்படும்" இப்பொழுது இதே அழிவு, கிறிஸ்துவை கர்த்தரும் இரட்சகரும், இராஜாவுமாக ஏற்றுக்கொள்ள மறுக்கிற ஒவ்வொருவர் மேலும் வரும்.

உ. கிறிஸ்துவைப் புறக்கணித்ததினிமித்தம் யூதர்கள் அனுபவித்த துயரங்களுக்கும் அழிவுக்கும் ஒரு முடிவேயில்லை.

1. ரோமர்களால் அவர்களுடைய பட்டணமும் அவர்களுடைய பிள்ளைகளும் அழிக்கப்பட்டனர்.

2. இரண்டாம் உலகப் போர் II காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முழு அழிவு.

3. அண்டை நாடுகளால் அடிக்கடி ஏற்படும் கலக்கம் மற்றும் பயமுறுத்தப்படுதல்.

4. மகா உபத்திரவ காலத்தின் ஏழுவருடங்களிலும் அவர்கள் மிகுந்த துன்பத்தையும் மரணத்தையும் சந்திப்பார்கள்.

ஊ. இன்று, கிறிஸ்துவை புறக்கணிப்பவர்களும், அவ்வாறாகவே அனுபவிக்கப்போகும் கலக்கத்திற்கும், அழிவிற்கும் முடிவு இராது.

1. ஒரு பாவி மரிக்கும்போது அவனுடைய ஆவி பாதாளத்திற்குச் (ஹேட்ஸ்) செல்கிறது. இது மரித்த துன்மார்க்கருடைய ஆவிகளின் இடம். இது லூக்கா சுவிசேஷத்தில் நமக்கு விவரித்துக் கூறப்பட்டுள்ளது: 1. வதைக்கப்படும் ஒரு இடம். 2. வெப்பத்தினாலும் அக்கினி சுவாலையினாலும் இடைவிடாத துயரம். (லூக்கா 16:23-28)

2. அதன்பின், காலத்தின் முடிவில், பாவியின் சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டு, அவனுடைய ஆவியோடு இணைந்து, தேவனுடைய நியாயாசனமாகிய பெரிய வெள்ளை சிங்காசனத்தின் முன் நிற்பான். (வெளிப்படுத்தின விசேஷம் 20:13) அவனுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட்டு மரணத்திற்கு ஒப்புவிக்கப்படுவான்.

3. அப்பொழுது, அந்த மனிதன் சரீரம் மற்றும் ஆவியுடன், தேவனைவிட்டு நித்தியமாகப் பிரிக்கப்பட்டு, நரக அக்கினியில் கிடப்பான். (மத்தேயு 10:28; யோவான் 5:29) நித்தியமாக உபத்திரவத்தை அனுபவிக்கும் இடத்தை, வேதம் நமக்கு விவரிக்கிறது: அவியாத அக்கினி, பால்கட்டி ஈயின் புழுக்கள் சாவாமலும், இரவும் பகலும் வதைக்கப்பட்டு, அழுகையும் பற்கடிப்பும், நித்திய அழிவும், காரிருளும், கந்தகம் எரியும் அக்கினிக் கடல். இது நான் கிரகிப்பதற்கும் மிக அதிகமாக இருக்கிறது!

இயேசு, வெற்றிக் கெம்பீரத்தோடு எருசலேமிற்குள் பிரவேசித்தல்

**லூக்கா 19:28-44
மத்தேயு 21:1-9;
மாற்கு 11:1-10
யோவான்12:12-15**

முடிவுரை

அ. 1. ஜெய கிறிஸ்து, கழுதைக்குட்டியின் மீது ஏறி எருசலேமிற்குள் பிரவேசித்தார்.

2. உரத்த சத்தங்களுடன் ஜெய கிறிஸ்து புகழப்பட்டார்.

3. ஜெய கிறிஸ்துவைப் புறக்கணிப்பது அழிவைக் கொண்டு வரும்.

ஆ. உலகத்தின் நாடுகளிலுள்ள, பட்டணங்களுக்காக இயேசு புலம்பி அழுகிறார். இந்த கூட்டத்திலும், அவரைப் புறக்கணிப்பவர்களைப் பார்த்து விம்மி அழுகிறார். அவர் ஒருவராலேயே மட்டும் கொடுக்கக்கூடிய சமாதானத்தை உனக்குக் கொடுக்க விரும்புகிறார்.

இ. நீ கிறிஸ்துவை புறக்கணித்திருப்பாயானால், இக்காரியத்தை முற்றிலும் திருப்பி விட இதுவே உனக்குக் கிடைக்கும் தருணம். உலக முழுவதிற்கும் வரப்போகும் அழிவிலிருந்து உன்னைத் தப்பிவித்துக் கொள்ளலாம்.

இயேசுவை உன்னுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு, தேவகோபாக்கினை உன்மேல் வராதபடி தடுக்கலாம். அவரை ஏற்றுக்கொள்ள கூடாமல்போகும் அளவிற்குத் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தின எருசலேமிலிருந்த யூதர்களைப்போல் இராதே!

ஈ. இன்று, இந்தப் பட்டணத்திற்குள் கிறிஸ்து வெற்றி சிறந்தவராக வருகிறார். "ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்" என்று நீ சத்தமிட்டுக் கூறலாம். அல்லது யூதர்களைப்போல, "இயேசு, என்னைவிட்டுப் போய்விடும்" என்று நீ கூறலாம். அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டு அவரைத் துதிக்க ஆரம்பம்செய்!

குத்தகைக்காரர்களின் உவமை

லூக்கா 20:9-19, மத்தேயு 21:33-46, மாற்கு 12:1-12

முன்னுரை

அ. இந்த உவமையின் ஆவிக்குரிய மொத்தக் கருத்து: இயேசுவை (மூலைக்கல்) புறக்கணிக்கும் யாவரும் அழிவுக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

ஆ. 17-19. வசனங்கள் "குத்தகைக்காரரின் உவமைக்கு முடிவுரையாக இருக்கிறது *(20:9-18)* இதை இயேசு ஒரு குழு யூத மக்களுக்கும் அவர்களுடைய மத தலைவர்களுக்கும் அப்பொழுதுதான் சொல்லியிருந்தார். இந்தப் பாடபோதனையில், இந்த மூன்று வசனங்கள் பேரில் விவாதிக்கலாம்.

இ. இந்த உவமையில், ஒரு மனிதன், ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, சில தோட்டக்காரர்களுக்குக் குத்தகையாகவிட்டு, வெகுநாட்களுக்குப் பிரயாணமாய் சென்று விட்டான். பருவகாலத்தில், ஒரு ஊழியக்காரனை குத்தகைக்காரர்களிடம், திராட்சத்தோட்டத்தின் கனிகளில் சிறிது அவனுக்குக் கொடுக்குமாறு, அனுப்பினான். இவனும் மற்றும் அநேக வேறு ஊழியக்காரர்களும், தோட்டத்தின் கனிகளில் சிறிது கொண்டு வருமாறு அனுப்பப்பட்டபோது, இவர்கள் யாவரும் வெறுங்கையுடன், அடிக்கப்பட்டு, அவமானமாக நடத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர். தோட்டத்தின் உரிமையாளர் கடைசியாக, "அவர் நேசித்த" அவருடைய குமாரனை அனுப்பினார். ஆனால் அவர்கள், அவனுடைய சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக விரும்பி, அவனைத் திராட்சத் தோட்டத்திற்கு அப்பால் தள்ளி, கொலை செய்தனர்.

இந்த உவமானத்தின் குறிப்பிட்ட இந்த கருத்தில் வரும்போது இயேசு இவ்வாறு கூறினார்: "அவன், (திராட்சத் தோட்டத்தின் சொந்தக்காரர்) வந்து, அந்தத் தோட்டக்காரர்களைச் சங்கரித்து, திராட்சத்தோட்டத்தை வேறு தோட்டக்காரரிடத்தில் கொடுப்பான்!" (ஏசாயா 5:1-7)

ஈ. "அந்தத் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கின மனிதன்," பிதாவாகிய தேவனாயிருக்கிறார். "திராட்சத்தோட்டம்," என்பது இஸ்ரவேல் நாடு. "தோட்டக்காரர்கள் மற்றும் குத்தகைக்காரர்கள்" என்றால் இஸ்ரவேலின், பக்திமார்க்க மற்றும் குடியரசு தலைவர்கள். சத்தியத்தைப் பேசியதற்காகப் புறக்கணிக்கப்பட்டு, கடூரமாக அவமதிக்கப்பட்டவர்கள், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள். (நெகேமியா *9:26;* எரேமியா *7:25-26, 25:4-7;* மத்தேயு *23:34;* அப்போஸ்தலர் *7:52;* எபிரெயர் *11:36-38)*

இயேசு கிறிஸ்து தாமே, "நான் நேசிக்கிற குமாரன்". (லூக்கா *3:22)* இஸ்ரவேலின் பக்திமார்க்கத் தலைவர்களால், இவரும் புறக்கணிக்கப்படுவார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு அவர்களும் காரணமாயிருப்பார்கள்!

1. இயேசு (பிதா நேசிக்கும் குமாரன்) இரட்சிப்பின் அநாதி திட்டத்தின் மூலைக்கல்லாக இருக்கிறார், (20:17)

அ. "அவர், அவர்களைப் பார்த்து" "அவர்களை" என்பது, வேதபாரகர்களையும், பிரதான ஆசாரியர்களையும், இஸ்ரவேலின் மூப்பர்களையும் குறிக்கும். இது ஒரு சமயம், அந்தநாளில் இயேசு உபதேசித்து, பிரசங்கித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த, ஜனத்திரள் மத்தியில் இருந்த யூதரையும் கூட சேர்த்துக் கொள்ளலாம். *(20:1, 19)*

குத்தகைக்காரர்களின் உவமை

லூக்கா 20:9-19, மத்தேயு 21:33-46, மாற்கு 12:1-12

அவருடைய சீடர்களின் சாட்சி மூலமாக, இயேசுவை இன்று புறக்கணிப்பவர்களையும், இத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்!

ஆ. "பார்த்தார்", என்றால், அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவருடைய கண்களை அவர்கள் மீது வைத்து நோக்கிப் பார்த்தார், என்று பொருள்படும். அவர்களுடைய இருதயத்தின் உள் நினைவுகள் என்ன என்பதைக் கண்டறிந்தார்.

இ. அப்பொழுது, அவர் அவர்களிடம் இவ்வாறு கேட்டார்: (நான் உங்களிடம் சொல்லிக் கொண்டிருப்பவை சத்தியமானவைகள் அல்ல என்றால்) இவ்வாறு எழுதப்பட்டவைகளின் பொருள் யாது? "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று (மூலைக்கல்) என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான், அது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்" (சங்கீதம் 118:22; ஏசாயா 8:14; தானியேல் 2:34-35, 44; லூக்கா 2:34)

ஈ. திராட்சத் தோட்டத்தின் எஜமான் வந்து, அப்பொழுது இருந்த குத்தகைக்காரர்களையும், தோட்டக்காரர்களையும் கொலை செய்தபின், அந்தத் திராட்சத் தோட்டத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பான் என்று இயேசு அதன் பின் கூறியது, இயேசுவின் இந்த வார்த்தைகளோடு நேரடியான தொடர்புடையது:

"அப்படியாகாதிருப்பதாக என்றார்கள்" (தேவன் தடுப்பாராக) (20:16) அவர் (இயேசு) கீழ்க்கண்ட பொருளில் பேசுகிறார், என்று அவர்களுக்குத் தெரியும்:

1. தேவனுடைய மக்களாக யூதர்களுடைய தனிச் சலுகைகள், புறஜாதியாருக்குக் கொடுக்கப்படும்.

2. இயேசுவை மேசியாவாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் யூதர்கள் அழிக்கப்பட்டு, தேவனிடமிருந்து பிரிக்கப்படுவார்கள்.

உ. ஒரு, தலைக்கல் என்பது கீழ்க்கண்டவற்றில் ஒன்றாக இருக்கும்.

1. வளைவான ஒரு நுழைவாயிலில் மத்தியில் (மேலே) உள்ள கல்.

2. ஒரு கட்டடத்தின் முழு பாகத்தின் சமமட்டத்தை (நெடுக்காகவும், குறுக்காகவும்) சரிபார்க்கும் தூக்கு நூலை நிச்சயப்படுத்த, கட்டடத்தின் அஸ்திபாரத்தின் மூலையில் நிலைநாட்டி வைக்கப்படும் ஒரு பெரிய கல்.

"மூலைக் கல்லிற்கு" உரிய எபிரேய சொல் "தலைக்கல்" (சங்கீதம் 118:22) என்ற வார்த்தை சிலவேளைகளில் "தலைவர் அல்லது அதிகாரி" என்ற பதங்களுக்கு உருவகமாகிறது (ஏசாயா 19:13). இது ஒரு சமயம் இங்கும் உண்மையாக இருக்கலாம். ஆகவே சங்கீதக்காரன், வரப்போகும் புதிய உலக ஒழுங்கு முறையின், தலைவராக ஊழியம் செய்யப்போகிற, "தலைமை அதிகாரியை" சுட்டிக் காட்டுகிறார். மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர்!

ஊ. யூதேயா தேசத்தின் மதத்தலைவர்கள், மற்றும் பெரும்பான்மையான மற்ற யூதர்கள் ஆகிய இவர்களால், இயேசு புறக்கணிக்கப்படுவார் என்று அவர் (தாவீது) தீர்க்கதரிசனமாக இயேசுவைச் சுட்டிக் காட்டுகிறார் (யோவான் 1:11).

குத்தகைக்காரர்களின் உவமை

லூக்கா 20:9-19, மத்தேயு 21:33-46, மாற்கு 12:1-12

வரப்போகும் இஸ்ரவேலின் இரட்சகரும், முடிவாக மானிடர் யாவரின் இரட்சகருமான மேசியாவாக, இயேசு இருக்கிறார். பிதா அவரை மிக அதிகமாக நேசிக்கிறார், ஏனெனில் அவர் அவருடைய ஒரே குமாரன் *(20:13; 3:22; மத்தேயு 3:17 ; 17:5; யோவான் 3:16, 18).* ஆகவே அவரைக் கொலைசெய்தவர்களைப் பட்சமாக பார்க்கமாட்டார்!

எ. மானிடர்களின், தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு அவர்தான் "தலைக்கல்லாக" இருக்கிறார். அஸ்திபாரக்கல்லாகிய அவர்மீது மட்டுமே அது கட்டப்படும். இயேசுவைப் பற்றிக் கூறப்பட்ட இந்தக் கருத்து, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால், முற்றிலும் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது *(1கொரிந்தியர் 3:10-11; அப்போஸ்தலர் 4:11; எபேசியர் 2:20; 1பேதுரு 2:7).* பிதாவாகிய தேவனுடன் சரியான தொடர்பை மறுபடியும் பெறவும், அவருடைய குடும்பம் மற்றும் இராஜ்ஜியத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும், இயேசு கிறிஸ்துவே ஒரே வழியாக இருக்கிறார் *(யோவான் 14:6; அப்போஸ்தலர் 4:12; 1தீமோத்தேயு 2:4-5).*

2. இயேசுவைப் (பிதா நேசிக்கிறவரை) புறக்கணிக்கும் யாவரும் அழிவுக்கு நியமிக்கப்படுகிறார்கள் (20:18).

அ. "அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான். அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப் போடும்". மானிடர்களுக்காக, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின், விலையேறப்பட்டதும், நேசிக்கப்படத்தக்கதுமான தலைக்கல்லாக (மூலைக்கல்) அவர் இருக்கிறார் என்று கூறியதிலிருந்து திரும்பி, இயேசுகிறிஸ்து அவரைப் புறக்கணிப்பவர்கள்மீது வரப்போகும் அழிவைக் குறித்து, இயேசுவின் வார்த்தைகள் இருந்தது. அவர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளாகிய ஏசாயா, தானியேல் ஆகியவர்களின் வசனங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார் *(2:34-35,44; லூக்கா 2:34)*

ஆ. ஒரு மண்பாண்டம், ஒரு கல்லில் மோதியடிக்கும்போது நொறுங்குவது போலவும், கீழே விழுந்து கொண்டிருக்கும் ஒரு பெரிய பாறைக்கல்லின் அடியில் படுத்துக் கொண்டிருப்பவன் நசுக்கப்படுவது போலவும், மானிடர்களுக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்ினுடைய தலைக்கல்லாகிய (மூலைக்கல்) மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர்களும், தண்டிக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள்!

இ. தேவனுடைய பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பையும், நித்திய நகர அக்கினியில் தள்ளப்படுவதையும் இது குறிக்கும். இது நமக்கு, வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில், விளக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது *(20:11-15).* இயேசு கிறிஸ்துவை மறுதலிப்பவர்களுக்கு, பாவத்தின் சம்பளம் மரணம் (நரக அக்கினியில் நித்திய காலமெல்லாம், தேவனைவிட்டு பிரிக்கப்படுவது) வைக்கப்பட்டுள்ளது! *(ரோமர் 6:23)*

ஈ. அடுத்த பக்கம் பார்ப்போமானால், அவரை ஏற்றுக் கொள்ளுபவர்கள், யூதராயினும், புறஜாதியாராயினும்,

குத்தகைக்காரர்களின் உவமை

லூக்கா 20:9-19, மத்தேயு 21:33-46, மாற்கு 12:1-12

தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் மற்றும் நித்திய இராஜ்ஜியத்தில் சேர்க்கப்படுகிறார்கள். (யோவான் 1:12-13; ரோமர் 6:23). ஆகவே இயேசு கிறிஸ்துவை கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்வதிலும், அல்லது புறக்கணிப்பதிலும் நித்திய விளைவுகள் உண்டு! இந்த உவமை சொல்லப்பட்ட காலத்திலுள்ள யூத மக்களுக்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு தலைமுறைகளிலுமுள்ள எல்லா யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் இது உண்மையாக இருக்கும்!

முடிவுரை

அ. மானிடர்களின் இரட்சிப்புக்காக தேவனுடைய திட்டத்தின், மதிப்புமிக்க தலைக்கல் (மூலைக்கல்) இயேசு கிறிஸ்துவாக இருக்கிறார். இந்த விலையேறப்பட்டக் கல்லின் மேல் விழுகிறவன் துண்டு துண்டாக நொறுங்கிப்போவான். இந்த விலையேறப்பட்ட கல் எவர்கள் மீது விழுகிறதோ அவர்கள் நசுக்கப்படுவார்கள். ஆனால், அவ்வாறு நடக்கக்கூடாது!

ஆ. தேவபாரகர்களும், பிரதான ஆசாரியர்களும், அவர் அவர்களிடம் கூறியவைகளுக்காக, அவர்மீது மூர்க்கமடைந்து, இயேசுவைக் கொலைசெய்ய விரும்பினார்கள். (20:19) ஆகிலும், இயேசு கூறியவைகளுக்கு பதிலளிக்க, மற்றொரு வழியும் இருக்கிறது: உன்னுடைய பாவங்களை இயேசுவிடம் அறிக்கையிட்டு, அவரை உன்னுடைய கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்.

உயிர்த்தெழுந்த காலை

லூக்கா 24:1-3
(மத்தேயு 28:1-8;
மாற்கு 16:1-8;
யோவான் 20:1-8)

முன்னுரை

அ. நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு உயிர்த்தெழுந்ததின் சம்பவம் விளக்கமாக நமக்கு விவரிக்கப்பட்டுள்ளது. ஆகிலும், லூக்கா, இந்த சம்பவத்தின் விசேஷமான சிறப்பு அம்சங்களை நமக்குக் கொடுத்து, அதிக உண்மையுள்ளதாகவும், அர்த்தமுடையதாகவும் நமக்கு இருக்க உதவுகிறார். இன்று காலை, நாம் கீழ்க்கண்டவைகளைச் சுருக்கமாகப் பார்க்கலாம்:

1. சீடர்கள் கல்லறைக்குச் செல்கின்றனர்.

2. கல்லறையிலிருந்து கிறிஸ்துவின் சரீரம் போய்விடுகிறது.

1. உயிர்த்தெழுந்த அன்று காலை சீடர்கள் கல்லறைக்குச் சென்றார்கள் *(24:1)*.

அ. "அதிகாலையிலே" சந்தேகமின்றி, இன்று நாம் சந்தித்த நேரத்தைவிட முன்னதாகச் சென்றார்கள். அது ஒருசமயம், முதல் வெளிச்சத்தின் பின் உடனே இருந்திருக்கும்.

1. மத்தேயு, விடிவதற்குமுன் என்று நமக்குக் கூறுகிறார்.

2. "அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது" என்று மாற்கு நமக்குச் சொல்லுகிறார்.

3. யோவான், "அதிக இருட்டோடே" என்று கூறுகிறார்.

ஆகவே, "காலை விடிந்து வருகையில்" ஸ்திரிகள் கல்லறைக்குப் புறப்பட்டுச் சென்றனர் என்று நாம் மதிப்பிடலாம். இக்காரணத்தினால்தான், காலை உயிர்த்தெழுந்த திருநாள் ஆராதனையை (ஈஸ்டர் பண்டிகை) "ஈஸ்டர் சூரிய உதய ஆராதனை" **(Easter Sunrise Service)** என்று அழைக்கிறோம், என்று நான் அனுமானிக்கிறேன்.

ஆ. அது "வாரத்தின் முதலாம் நாளாக" இருந்தது. நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் உயிர்த்தெழுதல், வாரத்தின் முதல் நாள் என்று குறிப்பிடுகிறது. "வாரத்தின் முதல் நாள்", ஞாயிற்றுக்கிழமை. இதனால்தான் கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கு ஆராதனை செய்ய ஞாயிற்றுக் கிழமைகளில் ஒன்றுகூடி வருகிறார்கள் *(1கொரிந்தியர் 16:2; வெளிப்படுத்தின விசேஷம் 1:10)*.

இ. துரோவா பட்டணத்தில், "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி (கர்த்தருடைய இராபோஜனத்தில் பங்குபெற) சீடர்கள் கூடிவந்திருக்கையில், பவுல்........பிரசங்கித்ததைக் கேட்டார்கள்" என்று அப்போஸ்தலர் *20:7* வசனத்தில் நாம் வாசிக்கிறோம்.

ஈ. இந்த நாளில் "கந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு...... ஸ்திரிகள் கல்லறையினிடத்தில் வந்தார்கள்". அந்த ஸ்திரிகள் உண்மையில், கந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் முந்தின இரவிலேயே ஆயத்தம் செய்து வைத்திருந்தனர் *(லூக்கா 23:56)*. அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் அடக்கத்திற்குரிய ஆயத்தத்தை முடிக்கப் போகிறார்கள். அரிமத்தியா ஊர் யோசேப்பு இந்தக் காரியத்தை முடிக்கவில்லை அல்லது அது செய்யவேண்டிய பிரகாரமாகச் செய்யப்படவில்லை என்று அவர்கள் நினைத்திருக்கவேண்டும் என்று நிச்சயமாகத் தெரிகிறது *(லூக்கா 23:55)*.

உயிர்த்தெழுந்த காலை

லூக்கா 24:1-3
(மத்தேயு 28:1-8;
மாற்கு 16:1-8;
யோவான் 20:1-8)

உ. இந்த வேத வசனத்தில் ஆவிக்குரிய பாடம் ஒன்று நமக்கு இருக்கிறது. ஆதி சீடர்களைப் போல, நாமும் முதல் வெளிச்சத்தில் எழுந்து இயேசுவைத் தேடுவது நமக்கு நன்மையாக இருக்கும்.

1. அவருடைய வார்த்தையை வாசித்து, பரிசுத்த ஆவியானவர், நம்முடைய வாழ்க்கைக்கு அதை பயனுள்ளதாக்க இடம் கொடுக்க வேண்டும்.

2. அவருடைய கிருபைக்காகவும், உதவிக்காகவும், அவரைத் துதித்து, நன்றி செலுத்த வேண்டும்.

3. அந்த நாளின் எல்லா கவலைகளையும் குறித்து அவரிடம் பேசவேண்டும்.

நாம் கர்த்தரை ஆராதிக்கக் கூடும் வாரத்தின் முதல் நாள் மட்டுமன்றி, ஒவ்வொரு நாளும் இதை நாம் செய்ய வேண்டும்.

ஊ. கிறிஸ்துவை ஒருபோதும் தேடாதவர்களுக்கு, ஆதிசீடர்கள் ஒரு முன்மாதிரியை கொடுத்திருக்கிறார்கள்: "கர்த்தரைத் தேடுவதற்கு, எவ்வளவு சீக்கிரம் எழுந்திருக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எழும்ப வேண்டும். வாழ்க்கையிலும் சீக்கிரம் (வாலிபத்தில்) தேடவேண்டும்! காலம் கடந்து சென்று போகும் வரைக் காத்திருக்காதே!

2. உயிர்த்தெழுந்த காலை, இயேசுவின் சரீரம் கல்லறையிலிருந்து போய்விட்டது. (24:2-3)

அ. வசனம் 2. "கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு....." பெண்கள் கல்லறையின் வாயிலில் இருந்த பெரிய கல்லைபுரட்டும் கஷ்டத்தைக் குறித்து விவாதித்தனர், என்று மாற்கு நமக்குக் கூறுகிறார்: "கல்லறையின் வாசலிலிருந்த கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான், என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்" (மாற்கு 16:3) ஆகிலும் அவர்கள் கவலைப்படுவதற்கு அவசியம் இல்லாமல் போயிற்று அந்தப் பெரியகல் ஏற்கனவே, ஒரு தூதனால் புரட்டித்தள்ளப்பட்டது.

ஆ. வசனம் 3. "உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்...." யோவானைப்போல அந்தப் பெண்கள், கல்லறைக்குள் பிரவேசிக்க பயப்படவில்லை. எப்படியிருப்பினும், இயேசுவின் சரீரம் போய்விட்டது என்பதை நாம் அறிந்து கொள்ளவும், பார்க்கவும் விரும்புகிறார், என்பதே முக்கிய காரியம்!

இ. மற்ற சுவிசேஷங்களின் விளக்கத்தில் ஒரு தூதன் இவ்வாறு அறிவிப்பதாக உள்ளது: "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்". (மத்தேயு 28:6) ஆனால் லூக்கா மட்டும் திட்டவட்டமாக, "கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தை அவர்கள் காணவில்லை", என்று கூறுகிறார்.

ஈ. உயிர்த்தெழுதலைப்பற்றிய மற்ற விளக்கங்களிலிருந்து, அந்த ஸ்திரீகள் இந்த ஒன்றை மட்டுமல்ல, வேறு காரியங்களையும் பார்த்தார்கள் என்று நமக்குத் தெரிகிறது:

1. கிறிஸ்துவின் சரீரத்தைச் சுற்றியிருந்த சீலைகள் (யோவான் 20:5-6)

உயிர்த்தெழுந்த காலை

லூக்கா 24:1-3
(மத்தேயு 28:1-8;
மாற்கு 16:1-8;
யோவான் 20:1-8)

2. தலையின் சுற்றியிருந்த அடக்கத்திற்குரிய சீலை. (யோவான் 20:7)

உ. இயேசுவின் சரீரம் இல்லாமல் இருந்ததைக் குறித்து, சீடர்கள் இங்கு ஆச்சரியப்பட்டது போல் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஏனெனில் இதைக் குறித்து, அநேக முறைகள் அவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு, அவரால் கூடியவரை நன்றாகச் சொல்லியிருக்கிறார்:

1. கலிலேயாவில் அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து இருக்கும்போது, இயேசு அவருடைய சீடர்களிடம் இவ்வாறு கூறினார்: "மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்". (மத்தேயு 17:22-23)

2. அவர், இதை அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன், நான்கு வெவ்வேறு சமயங்களில் கூறியிருக்கிறார். (மத்தேயு 16:21; மாற்கு 9:31; லூக்கா 9:22; 18:31-33)

ஊ. லூக்கா, "சரீரம் போய்விட்டது" என்று சிறப்பாகக் குறிப்பிட்டு நமக்குச் சொல்லுகிறார். ஏனெனில், இன்று இங்கு கூடியிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும், மரித்தோரிலிருந்து எழுந்த இயேசுவின் சரீரம் நித்தியமான விளைவுகளைக் கொடுக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், "கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால்" ஏற்படும் விளைவுகளை, கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தில், நமக்கு ஞாபகப்படுத்துகிறார்:

1. நாம் பிரசங்கிப்பது பயனற்றது.

2. நாம் பொய்சாட்சிகளாயிருப்போம்.

3. நம்முடைய விசுவாசம் பயனற்றதாயிருக்கும் நாம் இன்னும் நம்முடைய பாவத்தில் நிலைத்திருப்போம்.

4. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், இழந்து போனவர்களாயிருப்பார்கள்.

5. நம்முடைய நம்பிக்கை, நம்முடைய தற்கால வாழ்க்கைக் காலத்திற்கு மட்டும் போதுமானதாக இருக்கும். (1கொரிந்தியர் 15:14-19)

எ. "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்" (1கொரிந்தியர் 15:20). "அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது". (அப்போஸ்தலர் 2:24)

இக்காரணத்தினால் நம்முடைய சரீரங்களும் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படும்:

1. "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடே எப்போதும் கர்த்தருடனே கூட இருப்போம். ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்". (1தெசலோனிக்கேயர் 4:16-18)

உயிர்த்தெழுந்த காலை

**லூக்கா 24:1-3
(மத்தேயு 28:1-8;
மாற்கு 16:1-8;
யோவான் 20:1-8)**

2. மறுபடியும், "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடையவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்". (1கொரிந்தியர் 15:51-52)

3. இன்னும் மறுபடியும் கூறுவோமானால், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. --- இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். --- அந்த சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது". (1பேதுரு 1:3-5)

ஏ. அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து நாமும் வெற்றி உணர்ச்சியோடு சத்தமிட்டுக் கூறுவோம், "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? --- நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் (மரணத்தின் மீது) கொடுக்கிற, தேவனுக்கு ஸ்தோத்திரம்! (1கொரிந்தியர் 15:55,57)

முடிவுரை

அ. அந்த ஸ்திரிகள் கல்லறைக்கு வந்தபோது, இயேசுவின் சரீரம் கல்லறையிலிருந்து போய்விட்டபடியினாலே, இந்தக் காலைநேரத்தில் நாம் களிகூருகிறோம். நம்முடைய சரீரங்களும் மரணத்திற்குப் பின் உயிர்ப்பிக்கப்படும் என்ற திட நம்பிக்கையை இது நமக்குக் கொடுக்கிறது.

ஆ. ஆகிலும் இந்தக் காலை நேரத்தில், கர்த்தரைத் தேடும்படியாக, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழும்பும்படியாக அழைக்கப்படுகிறோம்:

1. தேவனுடைய வார்த்தையை வாசித்து அதை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுமாறு கிரியை செய்ய பரிசுத்த ஆவியானவருக்கு இடம் கொடுக்க வேண்டும்.

2. அவருடைய கிருபை மற்றும் உதவிக்காகத் தேவனைத் துதிக்க வேண்டும்.

3. அந்த நாளின் கவலைகளையெல்லாம் அவரிடம் சொல்ல வேண்டும்.

இ. கிறிஸ்துவை ஒருபோதும் தேடாதவர்களும், ஒருபோதும், உங்களுடைய கர்த்தரும் இரட்சகருமாக அவர் இருக்கும்படி கேட்காதவர்களும், காலம் கடந்து சென்று போகும்முன், சீக்கிரமாக கிரியை நடப்பியுங்கள்! உங்கள் வாழ்க்கை ஆரம்ப காலத்திலேயே அவரை தேடுங்கள்! நீங்கள் அவரை தேடுவதற்குக் கூடாமற்போகும், ஒரு நாள் வருகிறது!